1573

# நாட்டாரியற் கல்வி

சபா.ஜெயராசா

சேமமடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No:

Acc No 1573

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

LENDING
ARASADY PUBLIC LIBRARY

புத்தகத்தின் பெயர் : நாட்டாரியல் கல்வி

நூலாசிரியர் : சபா. ஜெயராசா

அனுமதிப்பத்திரம் : EPAB/02/19295

கல்வி அமைச்சு
அனுமதிப்பத்திரம்

1952 பெப்ரவரி மாதம் 29ம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை அரசின் சுய வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரமான உதவி நன்கொடை பெறும் இரட்டை மொழி மற்றும் ஆங்கிலம் பாடசாலை தொடர்பான பிரமாணக் குறிப்பின் 19/ஏ வாசகத்தின் கீழ் கல்விப் பணிப்பாளர் நாயகத்தினால் பாடசாலை நூலகப் புத்தகமாக அனுமதிக்கிறேன்.

2017 செப்டெம்பர் மாதம் 20
கல்வி அமைச்சு,"இசுருபாய" பத்தரமுல்லை.
அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் திகதி 2022.09.19

விஜித வெலகெதர
செயலாளர்
கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (FOLK EDUCATION)

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

சபா. ஜெயராசா

Class No:
Acc No 1873

சேமமடு
2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற் தலைப்பு | : | நாட்டாரியற் கல்வி |
| நூலாசிரியர் | : | சபா ஜெயராசா © |
| பதிப்பாளர் | : | சதபூ.பத்மசீலன் |
| பதிப்பாண்டு | : | 2017 |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| எழுத்து | : | 10.5 புள்ளி |
| பக்கங்கள் | : | 114 |
| படிகள் | : | 1000 |
| விலை | : | ரூ.360.00 |
| அச்சிடல் | : | சேமமடு பதிப்பகம், கொழும்பு -11.<br>தொ.பே: 0777 345 666. |
| வெளியீடு | : | சேமமடு பொத்தகசாலை,<br>யுஜி.50, பீப்பள்ஸ் பார்க், கொழும்பு-11.<br>தொ.பே:011-2472362, 2331475<br>மின்னஞ்சல் : *Chemamadu@yahoo.com* |

**ISBN 978-955-685-050-5**

| | | |
|---|---|---|
| Title | : | NAATTARIYAT KALVI |
| Author | : | Saba Jeyarasa © |
| Publisher | : | Stp.Pathmaseelan |
| Edition | : | 2017 |
| Price | : | Rs.360.00 |
| Published by | : | Chemamadu Poththakasalai<br>UG.50, People's Park, Colombo -11.<br>T.P : 011-2472362, 2331475 |
| Printed by | : | Chemamadu Pathippakam,<br>Colombo -11.<br>T.P 0777 345 666.<br>mail : *chemamadu@yahoo.com*<br>Web: chemamadu.com |
| வெளியீட்டு எண் | : | CBCN : 2017-06-01-151 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No:
Acc No 1573

Arasady Public Library
Municipal Council
Batticaloa

பேராசிரியர் நா.வானமாமலை அவர்களின்
நூற்றாண்டு நினைவுகளை அடியொற்றி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியர் உரை

நாட்டார் வழக்காறுகள் வழியாகக் கல்விக் கையளிப்பு எவ்வாறு நிகழ்த்தப்பட்டு வந்துள்ளது என்பது தமிழ்ச் சூழலில் இன்னமும் விரிவாக ஆராயப்படவில்லை.

அவ்வகையில் இந்நூல் ஒரு முன்னோடி ஆக்கமாகும். நாட்டாரியல் ஆய்வரங்குகள் பல்கலைக்கழகங்களிலே இடம்பெற்று வந்தாலும் நாட்டாரியலையும் கல்வியியலையும் தொடர்புபடுத்திப் பார்க்கப்படாத விசாலித்த இடைவெளி காணப்பட்டது.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்ற ஆய்வரங்கு ஒன்றிலே அத்தகைய ஆய்வுகளின் முக்கியத்துவம் உரத்து முன்வைக்கப்பட்டது.

பேராசிரியர் நா.வானமாமலையும் பேராசிரியர் தே.லூர்தும் தமிழ் நாட்டாரியல் ஆய்வுகளின் வழியாகப் புதிய புலக்காட்சிகளைத் தோற்றுவித்தனர்.

அவர்கள் மேற்கொண்ட ஆய்வுத் தளங்களில் நின்று, ஆராயப்படாத புதியதொரு துறையை நோக்கி இந்த ஆக்கம் நிகழ்த்தப்பட்டுள்ளது.

ஆழ்ந்து நோக்கும் பொழுது நாட்டார் வழக்காறுகள் அனைத்தும் கல்விப் பெறுமானங்களையே சுமந்து நிற்றல் தெளிவாகப் புலப்படும்.

இத்தகைய ஆய்வு முயற்சிக்குத் தூண்டுதல் தந்த பேராசிரியர் வ.மகேஸ்வரன் முனைவர் க.இரகுபரன், தெ.மதுசூதனன் ஆகியோர் நன்றிக்குரியவர்கள்.

சபா.ஜெயராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

தமிழ்ச் சூழலில் பண்பாட்டு போராளியாக இயங்கி வந்தவர் பேராசிரியர் நா.வானமாமலை. இவரது நூற்றாண்டையொட்டி சேமமடு பதிப்பகம் "நாட்டாரியற் கல்வி" எனும் நூலை வெளியிடுகின்றது. இந்நூலைப் பேராசிரியர் சபா.ஜெயராசா நமக்கு ஆக்கித்தந்துள்ளார்.

தமிழ் பண்பாட்டில் நாட்டார் மரபுவழி நின்று சுதேசியக் கல்வியின் அறாத் தொடர்ச்சியை எடுத்துரைக்கும் முகமாக இந்நூல் ஆக்கம் பெற்றுள்ளது. தமிழில் இதுபோன்ற நூல்கள் தமிழ்ச் சமூகப் பண்பாட்டு வரலாற்றை மீள்வாசிப்புச் செய்வதற்கான அறிகை மரபை நமக்குக் கடத்துகின்றது. இத்தகைய சிறப்பு வாய்ந்த நூலை நாம் வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம். இந்நூலை ஆக்கித் தந்த பேராசிரியருக்கும் நமது நன்றி.

*113,* சேமமடு<br>
பத்மகிரி<br>
வவுனியா

சதபூ.பத்மசீலன்<br>
சேமமடு பொத்தகசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளமைந்தவை


| | | |
|---|---|---|
| 1. | மீள்நோக்கில் நாட்டார் வழக்காறுகள் | 01 |
| 2. | நாட்டார் கலைகளும் அமைப்பியலும் கல்வியும் | 07 |
| 3. | நாட்டார் அறிவுப் பரவலிற் குறிகள் | 14 |
| 4. | நாட்டார் விழாக்களும் கல்வியும் | 21 |
| 5. | நாட்டார் கதைகள் மற்றும் கதைப் பாடல்கள் வாயிலான அறிவுக் கையளிப்பு | 27 |
| 6. | நாட்டார் பாடல்களும் அறிவுப் பரவலும் | 33 |
| 7. | பொம்மலாட்டமும் தோற்பாவை நிழற் கூத்தும் | 40 |
| 8. | வில்லுப்பாட்டும் இசைக்கதையுரைப்பும் | 46 |
| 9. | விடுகதைகள் வாயிலாக அறிவேற்றம் செய்தல் | 53 |
| 10. | இசைக்கருவிகள் வாயிலான அறிவுத் தொடர்பாடல் | 59 |
| 11. | வழிபாட்டு முறையாக ஆடல் | 65 |
| 12. | கல்விச் செயற்பாடாக நாட்டார் அரங்கு | 73 |
| 13. | புழங்கு பொருள்களும் அறிவுக் கையளிப்பும் | 80 |
| 14. | நாட்டார் விளையாட்டுக்களின் கல்விப் பெறுமானங்கள் | 86 |
| 15. | சடங்குகள் வாயிலான அறிவுக் கையளிப்பு | 92 |
| 16. | கல்விச் சாதனமாகும் மாயவித்தை | 98 |
| 17. | நோக்கிய நூல்கள் | 104 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்நோக்கில் நாட்டார் வழக்காறுகள்

"நாட்டார்" (Folk) என்ற சொல் மேட்டுமை மனோபாவத்தோடு உருவாக்கப்பட்டதொன்றாகும். அதாவது சமூக அடுக்கமைவின் உச்சங்களில் வாழ்வோர் கிராமப்புறப் பண்பாட்டையும் கலைகளையும் தாழ்வானதாகக் கருதி உருவாக்கப்பட்ட ஓர் எண்ணக்கருவே "நாட்டார்" என்பதாகும். எழுத்தறிவற்றவர்கள் சீர்திருத்தம் அற்றவர்கள் (Non Literate) (Primitive) என்ற கருத்துக்களையும் அது கொண்டுள்ளது.

நாட்டார் கலைகளும், வழிபாடுகளும், சடங்குகளும் மேட்டுக் குடியினரால் புறந்தள்ளப்பட்டவையாகவே இருந்தன. சமூக அசமத்துவம் அல்லது சமூக ஏற்றத்தாழ்வுகள் கலையாக்கங்களிலும் தொடர்புபட்டு நின்றலைக் காணலாம்.

செவ்வியல் ஆடலும், செவ்வியல் இசையும் உயர் வகுப்பினருக்குரிய தாகவும் நாட்டார் கலைகள் அடிமட்டத்தினருக்கும் விளிம்பு நிலையினருக்கும் உரியவையாக நீட்சி கொண்டன. இன்னும் இதனை அழுத்தமாக விளக்குவதானால், கர்நாடக சங்கீத வித்துவான் ஒருவர் தமது கச்சேரியில் நாட்டுப்பாடல் ஒன்றைப் பாடுவது இழிவென்றும், தீட்டு என்றும் கருதும் நிலை காணப்படுகின்றது.

உலக அறிவரங்கில் நிகழ்ந்த இரண்டு முக்கியமான நிகழ்ச்சிகள் நாட்டார் வழக்காற்றியல் மீதான கவனக்குவிப்பைத் தோற்றுவித்தன. அவை:

1. மேலைப்புல இலக்கிய மரபிலே தோற்றம் பெற்ற "உளக்கவர்ச்சியியல்" (Romanticism) எனப்படும் மனோரதிய நோக்கும். நாட்டார் இசை, நாட்டார் பாடல்கள், நாட்டார் கதை சொல்லும் பாங்கு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை உளக்கவர்ச்சியியல் வலியுறுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வியலின் *(Classism)* மட்டுப்பாடுகளைச் சுட்டிக்காட்டிய மனோரதியவாதிகள் மனித உணர்ச்சிகளின் வெளிப்பாட்டில் நாட்டார் கலைகளின் பதிலீடில்லாப் பரிமாணங்களை விளக்கினர்.

அதுவரை காலமும் "உயர்நிலை" என்று கருதப்பட்ட கலை இலக்கியங்களோடு உறவாடியவர்கள் நாட்டார் கலை இலக்கியங்களின் அகல்விரி பரப்பைத் தேடலாயினர்.

2. நாட்டார் கலை இலக்கியங்கள் மீதான கவனக்குவிப்பை ஏற்படுத்திய இரண்டாவது நிகழ்ச்சி மார்க்சியக் கருத்தியலும், மார்க்சியக் கலை இலக்கிய நோக்கும்.

சமூக அடித்தளத்தினரை உணர்வுகளைக் கண்டுகொள்வதற்கும் மேட்டுமையினரின் அழுத்தங்கள் அவர்கள் மீது எவ்வாறு பிரயோகிக்கப்பட்டன என்பதை விளங்கிக்கொள்வதற்கும் நாட்டார் கலை இலக்கியங்கள் நம்பகரமான தகவல்களைத் தாங்கி நிற்கின்றன என்பது மார்க்சியக் கலைக் கருத்தியலால் வெளிப்படுத்தப்பட்டது.

மார்க்சிய ஊட்டத்துக்கு உட்பட்ட ருசியச் சிந்தனையாளர்கள் நாட்டார் கலை இலக்கியங்களை மீளாய்வுக்கும் மீட்டுருவாக்கலுக்கும் உட்படுத்தினர். அவ்வகையில் உருவாக்கம் பெற்றவர்தான் தேவதைக் கதைகளை அமைப்பியல் நோக்கில் ஆராய்ந்த விளாடிமீர் புரொப் அவர்கள். அதேவேளை சீனாவில் நாட்டார் ஆடல் நுட்பங்களைப் பயன்படுத்தி நவீன பலே நடனங்கள் உருவாக்கப்படலாயின.

ஐரோப்பாவில் நிகழ்ந்த நவீன கல்வி வளர்ச்சியோடு நாட்டார் கலை இலக்கியங்களின் முக்கியத்துவம் மேலும் மீளவலியுறுத்தப் படலாயிற்று. பாடநூல்களில் நாட்டார்கதைகளும் பாடல்களும் இடம்பெறத் தொடங்கின. மாணவர் வாசிப்புக்கென நாட்டார் கதைகள் தொகுக்கப்பட்டன.

அவற்றோடு மட்டும் நிற்கவில்லை ஐரோப்பிய இசை வல்லுனர்கள் ஆபிரிக்க நாட்டார் இசைகளைக் கலந்து புதிய இசைக்கோலங்களை உருவாக்கத் தொடங்கினர்.

தமிழ்ச் சூழலில் ஐரோப்பியர் வருகைக்கு முற்பட்ட வரன்முறையான *(Formal)* கல்வி மேட்டுக்குடியினருக்குரியதாகவே இருந்தது. அவர்களது கலைத்திட்டத்தில் நாட்டார் இலக்கியங்களுக்கும் கலைகளுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடமளிக்கப்படவில்லை. செவ்வியல் இலக்கியங்களே அவர்களுக்குரிய கற்பித்தலில் இடம்பெற்றது. நாட்டார் கலை இலக்கியங்களைத் திருத்த மற்றவையாகவே அவர்கள் கருதினர்.

தமிழ்ச் சூழலிலே தோற்றம் பெற்ற சித்தர்கள் நாட்டாரியல் தளத்தில் நின்றே தமது பாடல்களைத் தந்தனர். அதேவேளை மேட்டுக்குடியினர் அவர்களது பாடல்களுக்குரிய அங்கீகாரத்தை வழங்காது இருந்தமை ஆழ்ந்து நோக்கப்பட வேண்டியதொன்றாகும். வேதாகம வழிபாடு நிகழும் ஆலயங்களில் சித்தர் பாடல்கள் பாடப்படுதல் இன்றுவரை இல்லை. அவை புறந்தள்ளப்பட்ட வையாகவே உள்ளன.

சித்தர்களால் உருவாக்கப்பட்ட கலகமும், வேதாகம வழிபாட்டு முறைமையை நிராகரிக்கும் தகர்ப்பும் நாட்டாரியற் பின்புலத்தில் நிகழ்ந்த "எதிர்த்தாங்கல்" *(Resistance)* செயற்பாடுகளாகின்றன. தமிழ்ப் பின்புலத்தில் எதிர்த்தாங்கல் இலக்கியம் எவ்வாறு முகிழ்ப்புக் கொண்டது என்பதற்கு சிவைக்கியர் என்ற சித்தரின் பாடல்கள் பொருத்தமான சான்றுகளாகவுள்ளன.

ஆங்கிலக் கல்வியின் விரிவாக்கம் தமிழ்ப் பண்பாட்டு நோக்கிலே புதிய புலக்காட்சிகளையும் அணுகுமுறைகளையும் தோற்றுவித்தது. ஆங்கில மொழி வாயிலாகக் கிடைக்கப் பெற்ற இலக்கிய நோக்கும் திறனாய்வு நோக்கும் நாட்டார் கலை இலக்கியங்கள் மீதான கவனக்குவிப்பை ஏற்படுத்தின. அந்நிலையில் அவற்றைத் தொகுக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

ஆரம்பகாலத் தொகுப்பு முயற்சியை மேற்கொண்டோரில் சிலர் நாட்டார் மொழியைச் செம்மைப்படுத்தித் தொகுக்கும் அபத்தத்தையும் மேற்கொண்டனர். பேச்சுத்தமிழ் நாட்டார் பாடல்களில் இடம்பெற்ற மையாலும் உரிய செய்யுள் யாப்பு விதிகளுக்கு உட்படாது இருந்தமை யாலும் தமிழ்ப் பாடநூல்களில் நாட்டார் பாடல்கள் இடம்பெறக் கூடாது என்ற எதிர்ப்பு இருந்தது.

தமிழ் நாட்டாரியல் ஆய்வுகளைப் பொறுத்தவரை இரண்டு ஆய்வாளர்கள் விதந்து குறிப்பிடப்பட வேண்டியவர்களாக உள்ளனர். ஒருவர் பேராசிரியர் நா.வானமாமலை. மற்றையவர் டாக்டர் தே.லூர்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுக்கப்பட்ட மக்களின் உணர்வுகள் நாட்டார் கலை இலக்கியங்கள் வழியாக எவ்வாறு எழுகோலம் பெறுகின்றன என்பதை பேராசிரியர் நா.வானமாமலை ஆய்வுக்கு உட்படுத்தினார். தமிழில் நாட்டார் இலக்கியத் தேடல் முன்னோடி அவரேயாவர்.

மேலைப் புலத்தில் வளர்ச்சியுற்ற அமைப்பியல் நோக்கிலும் நவீனத்துவ நோக்கிலும் கலை இலக்கியங்களை ஆராயும் மரபை டாக்டர் தே.லூர்து தொடக்கி வைத்தார். நவீன ஆய்வுப் பரவலுக்குரிய நகர்ச்சி அவரால ஏற்படுத்தப்பட்டது.

1950ஆம் ஆண்டுக்கு முன்னர் நாட்டார் வழக்காற்றியல் அல்லது நாட்டுப்புறவியல் தமிழ்ச் சூழலில் பேசப்படாத ஒரு பொருளாகவே இருந்தது என்பதை தே.லூர்து ஒரு கட்டுரையிலே சுட்டிக் காட்டியுள்ளார். 1950ஆம் ஆண்டில் பேராசிரியர் நா.வானமாமலையே இத்துறையை நோக்கி வெளிச்சம் பாய்ச்சிய முன்னோடியாகவுள்ளார் என்பதையும் தே.லூர்து குறிப்பிட்டுள்ளார்.

நாட்டார் கலை இலக்கியங்கள் மனித உணர்ச்சிகளையும் ஆழ்மனக் கோலங்களையும் புடம் போடாது நேரடியாக வெளிப்படுத்துபவை. அந்த இயல்பு நாட்டார் இலக்கியங்களுக்குரிய பலம். செவ்வியல் இலக்கியங்கள் உணர்வுகளைப் புடமிட்டும் மேலோர் எண்ணங்களுக்கு ஏற்றவாறு செம்மைப்படுத்தியும் வெளிப்படுத்து கின்றன. நாட்டுக்கூத்தையும் பரத நாட்டியத்தையும் ஒப்புநோக்கும் பொழுது இது தெளிவாகப் புலப்படும்.

இச்சந்தர்ப்பத்திலே பிறிதொரு கருத்தையும் குறிப்பிட வேண்டியுள்ளது. மேலைப்புலத்தில் புதிய புதிய கண்டுபிடிப்புக்கள் உருவாக்கம் பெற்றமைக்குத் தேவதைக் கதைகளின் கற்பனைகளே பின்புலமாக அமைந்தன என்ற கருத்து கல்வியியலாளரிடம் எடுத்துக்காட்டாக, விஞ்ஞானமேதை ஐன்ஸ்டீனின் தாயார் அவர்க்குப் பெருமளவு தேவதைக் கதைகளை வாசிப்பதற்குக் கொடுத்தார் என்ற தகவல் உண்டு.

அறிவுக் கையளிப்பு நிலையில் நாட்டார் வழக்காறுகள் "கட்புலனாகாகக் கல்விக் கூடங்களாக" *(Invisible Schools)* செயற்பட்டு வந்துள்ளன. காலங்காலமாகத் திரட்டிவந்த அறிவையும் அனுபவங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகளாக, பாடல்களாக, இசையாக, ஆடலாக, அரங்குகளாக, வழிபாடுகளாக, புழங்கு பொருள்களாக, கருவிகளாக. தொழில் முறைகளாகக் கையளிப்புச் செய்யும் இயக்க பூர்வமான செயயற்பாடுகள் நாட்டார்வழக்காறுகள் வாயிலாக முன்னெடுக்கப்பட்டு வந்தன. இவ்வாறான கட்புலனாகாத கல்விக்கூடச் செயற்பாடும் அறிவுக் கையளிப்பு முறைமையும் தமிழ்ச் சூழலிலே விரிவாக ஆராயப்படவில்லை.

அத்தகைய அறிவுக் கையளிப்பு நிலையில் இழையோடி நின்ற சமூக உளவியற் பரிமாணங்கள் விரிவான ஆய்வுக்குரியவை. வழக்காறுகள் ஒவ்வொன்றும் வாழ்க்கை இருப்பிலிருந்து உருவாக்கம் பெற்ற உளவியல் வடிவங்களாகவுள்ளன.

தேசிய இனங்கள் தொடர்பான கருத்தாக்கங்களும் கருத்து வினைப்பாடுகளும் மேலெழுந்துள்ள பின்காலனியச் சூழலிலும், அடையாள நெருக்கடிகள் தோன்றியுள்ள அரசியல் அழுத்த நிலமைகளிலும், அடையாளத்தை நிலை நிறுத்துவதற்கு நாட்டார் வழக்காறுகள் மிக முக்கியமான சான்றுகளாகவுள்ளமையைக் குறிப்பிட வேண்டியுள்ளது. ஐரோப்பாவில் தேசிய இனங்கள் தமது அடையாளங்களை நிறுவுவதற்கு நாட்டார் வழக்காறுகளைப் பயன்படுத்தியமை மிக முக்கியமான வரலாற்றுச் சான்றாகவுள்ளது.

ஒற்றைப் பரிமாண நிலையில் நாட்டாரியலை ஆய்வு செய்வதன் வாயிலாக முழுமையான தரிசனத்தைக் கண்டுகொள்ள முடியாது. "பல்துறை ஊடு பாய்ச்சல் ஆய்வுகள் *(Interdisciplinary)* வழியாகவே ஒன்றிணைந்த முழுமையான காட்சியைப் பெற முடியும் என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. அதன் வழியாகவே சமூக இயங்கியலையும் மக்களின் இயங்காற்றலையும் புரிதலுக்கு உள்ளாக்க முடியும்.

நாட்டாரியல் அறிவுக் கையளிப்பு நுட்பங்களை நவீன கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளிலே எடுத்தாளும் முறைமை வளர்ச்சி கொள்ளத் தொடங்கியுள்ளது. அவ்வகைச் செயற்பாடு டென்மார்க்கில் முதலிலே முன்னெடுக்கப்பட்டது. அங்கு உருவாக்கப்பட்ட நாட்டார் உயர்கல்லூரியில் *(Folk High School).* நாட்டார் அறிவுக்கையளிப்பு முறைகளும் நுட்பங்களும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அறிவும் அனுபவமும் கையளிக்கப்பட்டு வரும் நிலையில் பரீட்சைகள் அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கப்படுதல் இல்லை. கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் மிகுந்த நெகிழ்ச்சி கொண்டவையாகவும், அழுத்தங்கள் பிரயோகிக்கப்படாத இங்கிதமான இடைவினை அமைப்புக்களைக் கொண்டதாகவும் இருக்கும். அந்த மாதிரிகைகையை இன்று வேறு பல நாடுகளும் பின்பற்றத் தொடங்கியுள்ளன.

தொகுத்து நோக்கும் பொழுது "நாட்டார் வழக்காறுகள்" (Folk Lore) என்பவை "கல்வி வழக்காறுகள்" என்ற ஏற்றங்களுடனேயே இயங்கி வந்துள்ளமையைக் காண முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டார் கலைகளும் அமைப்பியலும் கல்வியும்

*நாட்டார் சிந்தனைகளிலே காணப்படும் ஒழுங்கமைந்த வரன்முறைப்பாங்கானது அமைப்பியல் நோக்கில் அவற்றை ஆராய்கையில் மேலெழுகை கொள்ளலைக் காணலாம்.*

*நாட்டார் கல்வியிலும் கலையாக்கங்களிலும் வரன்முறையான சிந்தனை ஒழுங்கமைப்பு காணப்படுதலை அமைப்பியல் (Structuralism) சார்ந்த ஆய்வுகள் வெளிப்படுத்தத் தொடங்கின. கடந்த நூற்றாண்டிலிருந்து அவ்வகையான ஆய்வுகள் விரிவடையத் தொடங்கின.*

*கலை இலக்கியம் மற்றும் கல்வியியல் ஆய்வுகளிலே உருவம் (Form) உள்ளடக்கம் (Content) இரண்டும் இணைந்த கூறுகள் பேசப்படுதலுண்டு.*

*உருவவாதம் என்பதும் அமைப்பியல் என்பதும் வேறுபட்டவை. வேறுபட்ட அறிகை நோக்கங்களுடன் அவை பயன்படுத்தப்படுபவை. உருவவாதமானது ஆராயப்படும் பொருளை அருவமான விதிகளுக்குக் குறுக்கி நிற்கின்றது. ஆனால் அமைப்பியல் உள்ளடக்கத்தின் அமைப்பைத் தருக்க நிலையில் ஆராய்கின்றது.*

*அமைப்பியலில் அருவமான அல்லது சூக்குமமான விதிகளுக்கு இடமில்லை. உள்ளடக்கத்தின் விதிகளை அறிவியல் நோக்கிலே காண்பதும், விளக்குவதும் அமைப்பியலாகின்றது. திட்டவட்டமாக எடுத்தியம்பப்படும் பரிமாணங்களை அது கொண்டுள்ளது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டார் வழக்காற்றியல் ஆய்வில் அமைப்பியலைப் பயன்படுத்திய முன்னோடியாக விளங்குபவர் ருசிய நாட்டைச் சேர்ந்த விளாமிடிமிர் புரொப் ஆவர். தேவதைக் கதைகளின் அமைப்பை அவர் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டார்.

ருசியாவில் வளர்ச்சிபெற்ற புதிய கல்விச் சூழல் நாட்டார் கலை இலக்கியங்களின் முக்கியத்துவத்தை மீள வலியுறுத்தி நின்றது. நாட்டார் கலை இலக்கியங்களை மீட்டெடுக்கும் முயற்சிகள் அங்கே பரவலாக நிகழத் தொடங்கின. சோசலிச நடப்பியற் கோட்பாட்டாளர் அத்துறையிலே தீவிர கவனம் செலுத்தினர்.

தேவதைக் கதைகளை ஆராய்ந்த புரொப் அக்கதை ஆரம்பிப்பதற்குரிய அமைப்பை ஒரு விதியின் கீழ்க் கொண்டு வந்தார். அதாவது ஒவ்வொரு தேவதைக் கதையிலும் ஒரு குடும்ப உறுப்பினர் வீட்டிலிருந்து வெளியேறுதல் ஒரு தொடக்க விதியாகின்றது. அவ்வாறு வெளியேறிச் செல்பவருக்குக் குறித்த செயல்களைச் செய்யக்கூடாது என்ற கட்டளைகள் இருந்தன. ஆனால் அவற்றை அவன்/அவள் மீறிச் செயற்படும் நிலை ஏற்படும். அவ்வாறாகத் தேவதைக் கதைகள் ஆய்வில் புரொப் முப்பத்தொரு கட்டளைகளை இனங்கண்டார்.

அதாவது, ருசியாவில் காணப்படும் தேவதைக் கதைகள் அனைத்துக்கும் பொதுவானதாக முப்பத்தொரு கட்டளைகள் அல்லது வினைகள் இருத்தலைக் கண்டறிந்தார். தேவதைக் கதைகளின் உள்ளடக்க விதிகளைத் திட்டவட்டமான அமைப்புக்குள் புரொப் கொண்டுவந்தமை ஒரு முக்கியமான அறிகைச் செயற்பாடாக அமைந்தது.

மானிடவியலிலும், மொழியியலிலும் அமைப்பியல் ஆய்வுகள் விரிவாக நிகழத் தொடங்கின. மனித மூளையானது அமைப்பு விதிமுறைகளை உள்ளடக்கிச் செயற்படுகின்றது என்பது மானிட வியலாளரின் கருத்து. மேலும் மொழியியலில் கவிதை மற்றும் கதைகளுக்கு உருவாக்கப்பட்ட தருக்க நிலையான விதிகள் அமைப்பியல் ஆய்வுகளுக்கு மேலும் வலுவூட்டின.

மார்க்சிய நோக்கில் அமைப்பியலை விளக்கிய லூயி அல்துஸ்ஸர் ஒரு முழுமையின் உள்ளுறுப்புக்கள் பல தளங்களிலே ஒன்றுடன் ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவு கொண்டிருக்கும் என விளக்கினார். சமூக விளக்கத்தில் அது புதிய புலக்காட்சியைத் தோற்றுவித்தது.

நாட்டார் கதைகள் மற்றும் புராணக் கதைகள் தொடர்பான ஆய்வுகளுக்கு அமைப்பியல் நெறியைப் பயன்படுத்தியவர்களுள் லெவிஸ்ராஸ் முக்கியமானவர். கிரேக்கத்தின் தொன்மக்கதையாகிய இடிப்பஸ் என்பதைத் தமது ஆய்வுக்கு எடுத்துக் கொண்டார். வாழ்தல் - அழிதல் என்ற எதிர் எதிர் நிகழ்ச்சிகளை அடியொற்றிக் கதைகட்டமைப்புச் செய்யப்பட்டுள்ளமையை ஆய்வின் வழியாக வெளிப்படுத்தினார்.

எதிரும்புதிருமான மனித வாழ்க்கைப் பிரச்சினைகளை தொல் சமூகத்தினர் விளங்கிக் கொள்ள முற்பட்டமையின் வெளிப்பாடுகளாக அவை அமைந்த நிலையைச் சுட்டிக்காட்டினார்.

இயற்கையின் சீற்றங்களால் தொல்குழுவினர் பல்வேறு துயரங்களை அனுபவித்தனர். இயற்கையின் எதிர்ப்பிலிருந்து மனிதர் மேலெழுந்தமையையும், உடல் நிலையான பாதிப்புக்களைத் தாண்டி வாழ்வதையும் இடிபஸ்கதை அர்த்தப்படுத்துவதாகவும் அவர் கண்டார்.

தொன்மக் கதைகள் மற்றும் நாட்டார் கதைகள் ஆகியவற்றை ஆராய்கையில் மேல் அமைப்பை மட்டுமன்றி உள்ளமைப்பை அல்லது ஆழ்ந்த அமைப்பையும் *(Deep Structure)* நோக்க வேண்டும் என்ற கருத்தை அவர் முன்மொழிந்தார்.

தமிழ்ச் சூழலிலே நாட்டார் இலக்கியங்களின் மேல் அமைப்பு நோக்கப்பட்ட அளவுக்கு ஆழ்ந்த உள்அமைப்பு நோக்கப்படாதிருந்த நிலையில் அத்துறையில் ஆய்வை நீட்சிகொள்ளச் செய்தவர் பேராசிரியர் நா.வானமாமலையாவர்.

வாழ்க்கை முரண்பாடுகள் சமூக முரண்பாடுகள் ஆகியவற்றுக்கு ஆழ்ந்த நிலையிலே வடிவம் கொடுக்கும் செயற்பாடுகள் நாட்டாரின் கல்வி மரபில் இடம்பெற்று வந்துள்ளமையைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

நாட்டாரின் அறிகைக் கோலங்களை எதிரும் புதிருமான முரண்பாடுகள் வழியாகவே கண்டுகொள்ளலாம். நல்லவை - கெட்டவை, தேவர் - அசுரர், வெந்தது- வேகாதது, வாழ்தல் - மாழ்தல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வம் - வறுமை, பண்ணையார் - கூலியாள் முதலாம் முரண்பாடுகள் வழியாகத்தான் நாட்டாரின் அறிகைக் கோலங்கள் கட்டமைப்புச் செய்யப்பட்டிருந்தன. கலை இலக்கியங்களிலும் அவை உள்ளமைப்புக் கொண்டிருந்தன.

மொழியியலிலே பயன்படுத்தப்பட்ட "எதிர் இருமை" *(Binary Opposition)* என்ற கருத்து நாட்டார் கலைகளின் ஆழ்ந்த அமைப்பைக் கண்டறிவதற்குப் பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அமைப்பியல் நோக்கில் நாட்டார் இலக்கியங்கள் "குறை" *(Lack)* மற்றும் "குறையொழிப்பு" *(Lack Liquidation)* என்ற அடிப்படைகளிலும் ஆராயப்படுகின்றன. குறைகளைச் சொல்லிக் கடவுளரிடமோ, அரசர் மற்றும் பெரியவர்களிடமோ வரம் கேட்பதும் அக்குறைகள் அவர்களது ஆசியால் நீக்கப்படுதலும் நாட்டார் கதைகளிலும், கதைப் பாடல்களிலும் காணப்படும் ஒரு பண்பு.

அத்தகைய ஒரு நிலையிலே தான் "வேண்டுவன அருள்வான் கண்டாய்" என்றும், "வேண்டத்தக்கது அருள்வோய் நீ" என்றும் தொடர்கள் செவ்வியல் இலக்கியங்களிலே இடம்பெறலாயின.

தொன்மையான பரிமாற்ற முறையானது, கேட்டல் பெறுதலாகவே அமைந்தது. அதனை அடியொற்றியே குறையும் குறை நீக்கலும் வளர்ச்சி கொண்டன. பண்டமாற்றுப் பொருளாதாரத்தில் அது கொடுத்தல் வாங்குதல் என்ற மாற்றத்தைப் பெற்றது. அதாவது "கேட்டல்" என்பது "கொடுத்தலாக" மாற்றம் பெற்றது. தொன்மையான சமூகத்தில் கொடுத்தல் இடம்பெறவில்லை. கேட்டலே இடம்பெற்றது.

நிலமானிய சமூகத்திலேதான் கொடுப்பதும் வாங்குவதும் என்ற பண்டமாற்றுச் செயற்பாடு வளர்ச்சிகொள்ளத் தொடங்கியது.

மகப்பேற்றை எதிர்பார்க்கும் பெண்கள், முதியவர்கள், நோயாளர், குழந்தைகள் ஏதாவது ஒரு பொருளையோ உணவையோ விரும்பிக் கேட்டால் அதற்கு எதுவித கொடுப்பனவும் வேண்டாது கொடுக்கும் மரபு இன்றும் நாட்டார் வழக்கில் இருத்தல் குறிப்பிடத்தக்கது.

நாட்டார் கதைகளையும் கதைப்பாடல்களையும் புராணங்க ளையும் ஆராய்ந்தோர் அமைப்பு நிலையில் மூன்று வகைகளைச் சுட்டிக் காட்டியுள்ளனர். அவையாவன:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஒற்றைவினைவகை - இதில் ஒரு வினைப்பாடு மட்டுமே நடுநாயகமாக மேலோங்கியிருக்கும். ஔவைக்கும் முருகனுக்குமிடையே நிகழ்ந்த சுட்டபழம் சுடாதபழம் கதை ஒற்றை வினையைக் கொண்டது.

2. சிறியவகை - இதில் இரண்டு வினைப்பாடுகளும் முடிவும் வரும். கண்ணகிவழக்குரை காதையில் அரசன் மடிதலும், மதுரை நகர் எரிதலும் என்ற இரு வினைப்பாடுகளும் கண்ணகி இறையடி சேர்தல் என்ற முடிவும் வரும்.

3. பெரியவகை - இதில் செயல் இடம்பெறுதல், தடைகள் வருதல், தீர்வுகளை நோக்கி நகர்தல், முடிவைக் காணுதல் என்ற நான்கு வினைப்பாடுகள் இடம்பெறும். பெரிய கதைப்பாடல்களிலும் புராணங்களிலும் இத்தகைய பண்புகளே காணப்படும்.

அமைப்பு என்பது வரன்முறைப்பட்ட "உள்ளொழுங்கு" ஆகின்றது. வெளிப்பாடுகளுக்கு அடியில் ஓர் உள் ஒழுங்கு உள்ளது என்ற கருத்தை உளமொழியியலாளரும், நவ உளப்பகுப்பு வாதியுமாகிய லகான் வலியுறுத்தியுள்ளார்.

லகானுடைய அணுகுமுறையின் படி நோக்கினாலும் நாட்டார் கலை இலக்கியங்களில் உள் ஒழுங்கு, வெளி ஒழுங்கு என்ற இரு அமைப்புகள் இருப்பதைக் காண முடியும். நாட்டார் சிந்தனை முறைமையிலும் அழகியல் நோக்கிலும் இவ்வகை இரு ஒழுங்குகள் காணப்பட்டன. அவற்றை நனவிலி மனத்தின் இயல்புடனும் அவர் இணைகின்றார்.

கலை இல்ககியங்களைத் தருக்க நெறிக்கு உள்ளாக்கிக் கட்டமைப்புச் செய்யும் செயற்பாட்டை அமைப்பியலார் மேற்கொள்கின்றனர். அந்த அணுகுமுறை நாட்டார் இலக்கிய ஆய்விலே புதிய புலக்காட்சியைத் தோற்றுவித்துள்ளது. அவற்றின் பின்புலத்திலே நாட்டார் கலை இலக்கியங்களை மீள்வாசிப்புக்கு உட்படுத்தும் பொழுது, நாட்டாரின் அறிவுத் தேட்டம் புதிய புரிதலுக்கு உட்படுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டார் கலை இலக்கியங்களை விபரண நிலையிலும் வருணனைநிலையிலும் அணுகி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் "தேய்வியம்பல்" நிலையில் இருந்து விடுபட வேண்டியுள்ளது.

சமூக வளர்ச்சியிலும் மனிதரின் அறிவுக் கோலங்களையும் அவை கையளிக்கப்பட்டு வந்த முறைமைகளையும் கண்டறிவதற்குரிய நம்பகரமான சாதனங்களாக நாட்டார் கலை இலக்கியங்களே விளங்குகின்றன. அந்நிலையில் நாட்டாரியற் கல்வி *(Folk Education)* பற்றிய ஆய்வுகள் உலக அரங்கிலே முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளன.

அமைப்பியல் என்பது இலக்கியம், இசை, ஆடல், நாடகம், ஓவியம் சிற்பம் என்ற அனைத்துத் துறைகளிலும் பிரயோகிக்கப்படக் கூடிய புலமை வலுவைக் கொண்டுள்ளது. அதன் தொடர்ச்சியான வளர்ச்சியில் பின் அமைப்பியல் தோற்றம் பெற்றது.

நாட்டார் கலை இலக்கியங்களில் ஒரு தருக்க அமைப்பு இருக்கின்றது. அமைப்பியலின் வளர்ச்சியோடுதான் அதனைக் கண்டறியும் முனைப்புக்கள் தோற்றம் பெறலாயின. சூழலைப் பகுத்தாராயும் திறன் விலங்குகளையும், பறவைகளையும், ஊர்வனவற்றையும் வகைப்படுத்தி நோக்கும் திறன் அவற்றின் அடியாகச் சொற்களை உருவாக்கிப் பயன்படுத்தும் ஆற்றல் ஆகிய நாட்டார் செயற்பாடுகளை நுணுகி நோக்கும் பொழுது நாட்டார் பண்பாட்டில் வளர்ச்சியடைந்திருந்த விஞ்ஞான எண்ணக்கரு அறிவின் மேம்பாட்டைக் கண்டுகொள்ள முடியும்.

தொல் குடியினரது ஆற்றல்களைத் தாழ்வாக மதித்த மேலைப்புல மேலோங்கிகள் அவர்களது உள்ளத்தை "காட்டுமிராண்டித்தனமான மனம்" *(The Savage Mind)* என்று அடையாளப்படுத்தினர். அமைப்பியல் வாதியாகிய லெவிஸ்ராஸ் அதே தலைப்பில் நூலை எழுதி தொல்குடியினரது விஞ்ஞான ஆற்றல்களை வெளிக்கொண்டு வந்தார். தொல்குடியினரது ஆற்றல்களைத் தாழ்வாகக் கருதும் உளப்பாங்கு நாட்டாரியல் தொடர்பாகவும் நீட்சி கொண்டது. நாட்டார் *(Folk)* என்ற சொல்லே மேட்டுமையினரின் ஆக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டார் சிந்தனை முறைமையினையும், கலையாக்க முறைமைகளையும் விளங்கிக்கொள்வதற்குரிய மாற்று வகையான ஓர் அணுகுமுறையை "அமைப்பியல்" முன்வைத்தது. மேட்டுமையினரின் ஆட்சி அடுக்கமைவில் *(Pradigm)* கீழே தள்ளிவிடப்பட்ட நாட்டார் கலை இலக்கியங்கள் தொடர்பான ஒரு மாற்று ஆட்சி அடுக்கமைவை அமைப்பியல் ஆய்வு உருவாக்கியுள்ளது. ஆட்சி அடுக்கமைவில் அல்லது ஆட்சி நிரலமைப்பில் நவீன அமைப்பியல் ஆய்வுகளும் புதிய சமூக நோக்கும் பெயர்ச்சியை ஏற்படுத்தி வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டார் அறிவுப் பரவலில் குறிகள்

சொல்சார்ந்தவை, சொல்சாராதவை என்ற நிலைகளிலே நாட்டார் வழக்காற்றில் பயன்படுத்தும் குறிகள் நாட்டாரின் வாழ்வு பற்றிய அறிவியல் பதிவுகளை வெளிப்படுத்துகின்றன. குறிகள் பற்றிய ஆய்வு குறியியல் *(Semiology)* என்று குறிப்பிடபடும். நாட்டாரியலிலே குறியியல் பற்றிய ஆய்வு முதன்மைப் புலமாக எழுகோலம் பெற்று வருகின்றது.

சொல் என்பது குறிப்பான் என்றும் அதனால் உருவாக்கப்பெறும் கருத்தாக்கத்தைக் குறிப்பீடு என்றும் சசூர் விளக்கினார். குறிப்பானுக்கும் குறிப்பீட்டுக்குமுள்ள உறவுதான் குறி *(Sign)* ஆகின்றது. குறிகளின் தன்மைகளையும் பண்புகளையும் ஆராய்தல் குறியியலாகின்றது.

வேட்டுவவாழ்க்கை, ஆயர்வாழ்க்கை, வேளாண்மை வாழ்க்கை, வணிக வாழ்க்கை, நிலமானியத் தொழில்முறை வாழ்க்கை என்றவாறு பன்முக வாழ்க்கைக் கோலங்களுக்கு ஏற்றவாறு கருத்துக் கையளிப்புக்கும், தொடர்பாடலுக்கும் சமூக உறவுகளுக்கும் ஏற்றவாறு குறிகள் உருவாக்கப்பட்டன.

நாட்டார் பயன்படுத்திய குறிகள் வாய்மொழி முதன்மையைக் கொண்டிருந்தனவேயன்றி, எழுத்து வடிவைக் கொண்டிருக்கவில்லை. அவர்களின் பேச்சு மொழிக்கும் பாடலாக்க மொழிக்கும் வேறுபாடுகள் இருக்கவில்லை. நாட்டார் கதைகளும் பேச்சு மொழியைத் தழுவியே உருவாக்கம் பெற்றன.

நாட்டார் வழக்காற்றியலில் சொல்சாராக் குறியீடுகளே பயன்படுத்தப்பட்டன. சைகைமொழி, உடல்மொழி, உடைகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியலங்காரம், உடற்பூச்சுக்கள் முதலானவற்றை அடிபொற்றிய கருத்துப் புலப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. சொற்கள் இடம்பெறாத ஒலிக்கூவல்களும் பயன்படுத்தப்பட்டன.

குலக்குழு நிலையில் தமது அடையாளத்தைப் புலப்படுத்துவதற் குரிய குறிகளைக் குழுவினர் தமது உடலிலே பச்சைக் குத்திக் கொண்டனர். எடுத்துக்காட்டாக நாகர் குலக்குழுவினர் நாகத்தைத் தமது உடலிலே வரைந்து கொண்டனர்.

தமது திருமண வேட்கையைப் புலப்படுத்த மடலேறலை ஒரு குறியாகப் பயன்படுத்துதல் தமிழகத்திலே நிலவி வந்தது.

வீட்டில் யாராவது நோய்வாய்ப்பட்டிருந்தால் வீட்டின் வாயிலிலே வேப்பிலையைக் கட்டுச் செய்தியைப் புலப்படுத்தும் வழக்கம் கிராமப் புறங்களிலே இன்றும் காணப்படுகின்றது. வீட்டிலே திருமணம் நிகழவிருக்கும் வேளை வீட்டு வாயிலிலே பழவாழைக்குலையைக் குறியாகக் கட்டிவிடும் கருத்தளிக்கை முறைமை இன்றும் உண்டு.

பூப்பு எய்திய நிலையை எடுத்துக்கூறும் குறிகள் நாட்டார் வழக்காற்றியலில் உண்டு. பூப்புக்குப் பின்னர் வளர்ந்தோர் அணிவது போன்ற ஆடை அணிகலன்களை அணிந்து பூப்பு எய்தியமையைப் பெண்கள் புலப்படுத்தினர்.

அவர்களின் பண்பாட்டில் பூப்படைந்தமைக்குப் பின்னரே ஆண்கள் வளர்ந்தோர் அணிவது போன்ற சால்வை (துப்பட்டி) அணிந்தனர்.

திருமணமாகிய பெண்ணை அடையாளப்படுத்தும் குறிகள் பல நாட்டார் மரபிலே பயன்படுத்தப்பட்டன. அவ்வகையில் நெற்றியிலே குங்குமப் பொட்டிடுதல், கழுத்திலே மஞ்சள் கட்டியிருத்தல், கால்விரலிலே மெட்டி அணிந்திருத்தல் முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

நாட்டார் மரபிலே மனக்கிளர்ச்சியை அருட்டி விடுவதற்கும் தூண்டி விடுவதற்குமுரிய குறிகளும் பயன்படுத்தப்பட்டன. செய்திக் கையளிப்பிலே பயன்படுத்தப்பட்ட முழவு, குழல் முதலாம் இசைக் கருவிகளின் ஒலிப்பு முறைமையால் மனவெழுச்சியைக் கையளிப்புச் செய்தனர்.



Arasady Public Library
Municipal Council
Class No:
Acc No 1573
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடங்குகள் கருத்துப் புலப்பாட்டுக்கும் உணர்ச்சிப் புலப்பாட்டுக்கு முரிய குறிகளின் தொகுதிகளாக அமைந்துள்ளன. சடங்குகளிலே செய்தியைப் புலப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட ஒற்றைக்கை, இரட்டைக்கை முத்திரைகளே பின்னர் வரன்முறையான ஆடல்களிலும் எடுத்தாளப்பட்டன.

அழகியற் செய்திகளைக் கையளிப்பதற்குரிய குறிகளும் நாட்டார் வழக்காற்றில் இடம்பெற்றிருந்தன. அவர்களின் பாடலில் சொற்களுக்கு ஒலி அசைவுகளைச் சேர்த்து அழகு சார்ந்த கருத்துக் கையளிப்பு மேற்கொள்ளப்பட்டது. நவீன இசை மரபில் அத்தகைய குறிகள் "கமகங்கள்" என்று குறிப்பிடப்படும்.

அழகியல் சார்ந்த குறிகளின் தொகுதியே கவிதையும், பாடலு மாகின்றன. அழகியலையும் மனவெழுச்சியையும் கையளிக்கும் குறிகளில் மிகைப்படுத்தலும், நளினங்களும் கலந்திருக்கும். கருத்தும் உணர்ச்சியும் கலக்கப்பட்டிருக்கும். அகவயப் பண்புகள் மேலோங்கல் கொண்டிருக்கும். கருத்தும் விருப்பும் கலந்திருக்கும். பல நிலைகளில் அசாதாரணப் பண்புகள் இழையோடியிருக்கும்.

அகவயமான அழகியற் குறிகளில் இருந்து புறவயமான குறிகள் வேறுபட்டிருக்கும். பகுத்தறிவுப் பண்புகளும், மரபுசார்ந்த அடையாளங்களும் அங்கே மேலோங்கியிருக்கும். தருக்க நிலை அல்லது அளவை நிலைகளுடன் தொடர்புபட்டிருக்கும். பொதுமைப்பாடு கொண்டிருத்தல் புறவயப்பண்புடைய குறிகளுக்குரிய சிறப்புப் பண்பு.

ஒலிப்பை குறியாக்கிச் செய்தியை வழங்கும் செயற்பாட்டை நாட்டுப்புற மக்கள் வாழ்க்கை அனுபவங்களில் இருந்து உருவாக்கிக் கொண்டனர். அழுத்த வொலி, மெல்லொலி, தடையொலி, மூக்கொலி, பிரிவளிஒலி, வருடொலி, தட்டையொலி, அகல்ஒலி முதலாம் ஒலிப்பு முறைகள் நாட்டார் மரபில் இடம்பெற்றன.

சடங்குகளிலே, சடங்கு நிகழ்த்தியோர் தேவை கருதி ஒவ்வொரு வகையான ஒலிப்பை எடுத்தாண்டனர். சடங்கில் பங்குபற்றுவோரை ஒருமுகப்படுத்தி ஈடுபாடு கொள்ளச் செய்வதற்கு முணுமுணுப்பு ஒலியைக் கையாளும் முறைமை இன்றும் வழக்கில் உண்டு.

Class No:
Acc No 15873



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குறியால் பல செய்திகளைப் புலப்படுத்துதல், பல குறிகளால் ஒரு செய்தியைப் புலப்படுத்துதல் என்ற இருநிலைகள் நாட்டார் தொடர்பாடலிலே காணப்படுகின்றன. கிராமத்துத் தெய்வங்களுக்குரிய விழா, "விளக்கேற்றலுடன்" ஆரம்பிக்கும். விளக்கேற்றல் என்ற குறி பல செய்திகளைப் புலப்படுத்தி நிற்கும். கிராமத்து மக்கள் எவற்றை மேற்கொள்ள வேண்டும் என்ற செய்திகள் "விளக்கேற்றல்" என்ற குறியினால் தெரிவிக்கப்படும்.

"விளக்குவைத்தல்" என்ற செய்திக் குறிவாயிலான கருத்தளிக்கை இன்றும் கிராமங்களில் இடம்பெற்று வருகின்றது.

கிராமத்து கூத்துக்களில் அரசர் பற்றிய பல குறிகள் கூறப்படுதல் அரசரின் வருகையைக் குறிப்பிடுவதாக அமையும். நாடகத்துக் கட்டியங்காரர் பொதுவாக பல குறிகளைப் பயன்படுத்தி ஒரு செய்தியைக் கையளிக்கும் செயற்பாட்டையே மேற்கொள்வர்.

தாவரங்களையும், விலங்குகளையும் செய்தியைக் கையளிக்கும் குறிகளாகப் பயன்படுத்துதல் நாட்டார் மரபிலே நிலவி வந்தது. திருமணத்துக்கு முன்னதாக முள்முருக்க மரத்தை நாட்டுதலும் அதனைச் சுற்றி நவதானியங்களை விளைவித்தலும் வளப்பெருக்கச் செய்தியைக் கையளிக்கும் குறிகளாகவுள்ளன.

திருமணத்திலே பாற்பசுவை காட்டும் சடங்கும் வளப்பெருக்கை மேற்கொள்வதற்குரிய செய்திக் குறியாகின்றது.

பொருள்களின் உடைமையை அடையாளப்படுத்துவதற்குக் குறிகளைக் கையாளுதலும் நாட்டார் மரபிலே காணப்பட்டது. மாட்டுச் சொந்தக்காரர் தமக்குரிய மாடுகளை அடையாளப்படுத்துவதற்கு குறியிடுதல் இன்றும் காணப்படுகின்றது.

கிராமங்களிலே உடைகளைத் தோய்த்து சுத்தம் செய்வதற்கு எடுத்துச் செல்வோர் ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒவ்வொரு குறிகளை இடுவர். கழுவினாலும் அழிந்துவிடாத ஒருவித இயற்கைச் சாயத்தினால் அத்தகைய குறிகள் இடப்பட்டன.

புறவயப் பொருள் உணர்த்துக்குறிகள் அகவயப் பொருள் உணர்த்தும் குறிகளைக் காட்டிலும் கூடிய தெளிவுடையதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறே ஒருபொருள் உணர்த்தும் குறியானது பல பொருள் உணர்த்துவதைக் காட்டிலும் கூடிய தெளிவுடையதாகவும் திட்டவட்டமானதாகவும் அமையும்.

நாட்டார் மரபில் உருவாக்கம் பெற்ற குறிகளில் இரட்டைப் பொருள் உணர்த்துதல் என்ற பண்பும் இடம்பெற்றிருந்தது.

அத்தகைய ஓர் அறிகைத் தளத்தில் இருந்தே எழுத்துவழி இலக்கிய மரபில் "சிலேடை அணி" வளர்ச்சி கொண்டது. நாட்டார் மரபில் உருவாக்கம் பெற்ற இருபொருள் கொண்ட ஒரு குறியை எடுத்துக்காட்டாக நோக்கம். "பெரிய மாடு பட்டியை அறுக்கும்" என்ற குறியில் 'மாடு' என்பது கொழுத்த மாட்டையும் குறிக்கும் பண்ணையாரையும் குறிக்கும். பண்ணையார் தமக்குரிய செல்வாக்கினால் கிராமத்துக்குரிய விதிகளையும் மீறுவார் என்ற இன்னொரு பொருளும் அதில் உண்டு.

அத்தகைய ஓர் அறிகைத் தளத்தை அடியொற்றியே பண்ணையாரைக் கிண்டல் செய்யும் புனைவுகள் பள்ளு இலக்கியங்களிலே இடம்பெற்றன.

குறிகளின் உருவாக்கம் பற்றி ஆராய்ந்த உளப்பகுப்பு உளவியலாளர், நனவிலி மனமே குறிகளின் உருவாக்கத்துக்குரிய தளமாக விளங்குவதைச் சுட்டிக் காட்டுகின்றனர். அதாவது அமுக்கப்பட்ட மனித உணர்வுகள் நனவிலி மனத்திலே தேக்கி வைக்கப்பட்டுள்ளனவென்றும் குறிகளின் வடிவில் அவை வெளிப்பாடு கொள்கின்றனவென்றும் விளக்குகின்றனர்.

குறிகளுக்குரிய உளவியல் பரிமாணங்கள் உளவியலாளரால் விளக்கப்படுகின்றன. வயலிலே விளைந்த பயிர்களுக்குக் காவலாக வெருளியைக் காட்சிப்படுத்துதல் சிதைந்த மனித உருவில் அமைக்கப்படுகின்றது. அந்த உருவைக் கண்டு பறவைகள் விலங்குகள் வரமாட்டா என்ற நம்பிக்கை ஒருபுறமும், மனிதரின் கண்ணூறுபடாது இருக்கும் என்ற எண்ணம் பிறிதொரு புறமுமாக உள்ளன. எதிர்பார்ப்பு நிலை உளவியல் அவ்வாறான குறிகளிலே ஏற்றம் கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொன்மங்களில் இடம்பெறும் குறிகள் கூட்டு நனவிலி மனத்தின் வெளிப்பாடு என்றும், அவை தலைமுறை தலைமுறையாகக் கையளிக்கப்பட்டு வருவதாகவும் உளப்பகுப்பு உளவியலாளர் யுங் குறிப்பிட்டுள்ளார். குறிகளுக்கும் நனவிலி மனத்துக்கும் உள்ள தொடர்பினை அவர் பிறிதொரு தளத்தில் விளக்கியுள்ளார். விவாதத்துக்குரிய ஒரு கருத்தாக அது இருப்பினும், குறிகள் தொடர்பான புதிய காட்சியொன்றினை அவரது ஆய்வுகள் முன்வைத்துள்ளன.

குறிகள் மரபுகளுக்கு உட்பட்டவையாய் இருப்பினும், நாட்டார் சிந்தனைகள் மரபை மீறிய குறிகளையும் உருவாக்கியுள்ளன. சிந்தனை என்பது வரம்புகளை மீறி உடைப்புக் கொள்ளும் என்பதற்கு அவ்வாறான செயல் பொருத்தமான எடுத்துக்காட்டாகவுள்ளது.

தொன்மையான தமிழ்ச் சூழலிலே உருவாக்கம் பெற்ற மடலேறல் என்ற குறி, மரபை மீறித் தோற்றம் பெற்றது.

நாட்டாரின் அறிவுப் பெருக்கையும், அறிகை முறைமையையும் கண்டறிவதற்கு அவர்கள் பயன்படுத்திய குறிகள் சான்றாகவுள்ளன. சொற்குறிகளுக்கு வடிவம் கொடுக்க முற்பட்ட நிலையிலேதான் நாட்டார் ஓவியங்களும், சிற்பங்களும் உருவாக்கம் பெற்றன.

நாட்டார் இசையும் ஆடல்களும் சொற்குறியீடுகளுக்கு வடிவம் கொடுத்தலின் வெளிப்பாடாகவே தோற்றம் பெற்றன. அத்தகைய ஒரு தளத்தில் இருந்து தான் இந்திய மரபில் இராகங்களுடன் நிறங்களைத் தொடர்புபடுத்தியமையும், இராகங்களுக்கு ஓவியம் வரைந்தமையும் தோற்றம் பெற்றன.

குறித்த காலத்தில் குறிப்பிட்ட இராகம் பாடப்பட வேண்டும் என்ற நியதி உருவாக்கப்பட்டமையும் அருவமான குறியீட்டை உருவமான காட்சிப்படுத்தலுக்குக் கொண்டுவரும் அறிகைச் செயற்பாடு என்று குறிப்பிடலாம்.

நாட்டார் உருவாக்கிய கதைகளும், சடங்குகளும், தொன்மங்களும் கலப்புக் குறிகளின் வகைப்பாட்டில் அடங்கும். கலப்புக்குறியீடுகள் பலவிதமான வாசிப்புக்களுக்கு இட்டுச் செல்லக் கூடியவை. அதனை அடியொற்றியே ஒரு பனுவலின் "பல நிலை வாசிப்பு" என்பதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கட்டுடைப்பு" என்பதுமான பின்னைய நவீனத்துவக் கருத்துக்கள் எழுச்சி கொண்டன.

நாட்டாரின் அறிகைச் செயற்பாடுகளையும் கருத்துக் கையளிப்புச் செயற்பாடுகளையும் அறிந்து கொள்வதற்குரிய சாதனங்களுள் குறிகள் முதன்மைப் பெற்று நிற்கின்றன. தமிழில் இத்துறையில் விரிவான ஆய்வுகள் வேண்டப்படுகின்றன.

கல்வி வளர்ச்சியோடு குறிகளின் வளர்ச்சியும் தொடர்புற்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டார் விழாக்களும் கல்வியும்

நாட்டார் விழாக்கள் தெய்வங்களுடனும் தொன்மங்களுடனும் இணைந்தவை. மேற்போக்காகப் பார்க்கும் பொழுது அவற்றிலே களியாட்டத் தன்மை காணப்பட்டாலும் ஆழ்ந்து பார்க்கும் பொழுது, அவை கற்பித்தலை மேற்கொள்ளும் பலத்தையும் உள்ளடக்கியிருத்தல் குறிப்பிடத்தக்கது.

நாட்டார் வழிபாட்டிலே பலதெய்வங்கள் இடம் பெற்றாலும் அவர் தம் வழிபாட்டுக்குரிய குலதெய்வங்களோடு இணைந்த விழாக்களும் பொதுவான தெய்வங்களோடு இணைந்த விழாக்களுமாக "விழாப்பெருக்கம்" ஒரு முக்கியமான பரிமாணமாகும்.

குலதெய்வ வழிபாடும் விழாக்களும் பற்றிய செய்திகள் சங்கச் செய்யுள்களில் இடம்பெற்றுள்ளன. குன்றக்குறவர் முருகனையும், முல்லை நிலத்து ஆயர் மாயோனையும் தமது தெய்வமாக வழிபட்டு விழாவெடுத்த செய்திகள் நற்றிணையிலும் (9) கலித்தொகையிலும் (132) காணப்படுகின்றன.

நாட்டார் அறிவுக் கையளிப்பில் திருவிழாக்கள் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன. தமிழரின் சாதிமுறைக்கேற்பவும், தொழில்முறைகளுக்கு ஏற்பவும் வாழ்விடங்களுக்கு ஏற்பவும் விழாக்கள் கட்டமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

தொன்மக் கதைகள் தலைமுறை தலைமுறையாகக் கையளிப்புச் செய்யப்படுவதற்குரிய பொறி முறையை விழாக்கள் கொண்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரக்கரின் வீழ்ச்சியும் தேவர்களின் எழுச்சியும் வைதிக வழிபாட்டுடன் இணைந்த திருவிழாக்களின் கருத்துநிலை உள்ளடக்கங்களாக அமைந்துள்ளன.

நாட்டார் சமயமும், வழிபாடுகளும், விழாக்களும் கூட்டு உளவியலின் வெளிப்பாடுகளாகின்றன. மனித உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளும் கல்விச் செயற்பாடு விழாக்களிலே முன்னெடுக்கப்படுகின்றது.

நாட்டார் சமய வாழ்விலும் சமூக வாழ்விலும் விழாக்கள் உச்சக் கட்ட நிகழ்வாக அமைகின்றன.

நாட்டார் வாழ்க்கையில் எதிர்கொள்ளப்படும் நெருக்கீடு சார்ந்த ஆட்சிகளை *(Domains)* தளமாற்றம் செய்யும் அறிவை அவை வழங்குகின்றன.

தமிழ்ச் சூழலைப் பொறுத்தவரை மாரியம்மன் வழிபாடும் அதனோடு இணைந்த விழாக்களும் அனைத்துச் சாதியினருக்குமுரிய பங்கேற்புடன் நிகழ்ந்து வருகின்றன. வரட்சி, நோய் முதலானவற்றுடன் இணைந்த துன்பியல் மனக்கோலங்களில் இருந்து விடுபடும் அறிகைமுறையோடு மாரியம்மன் வழிபாடும் விழாக்களும் அமைந்துள்ளன.

அந்த விழாவிலே மக்களின் கூட்டுமனவுணர்வு மீண்டும் தொடங்கும் மிடுக்குடன் புதுப்பிக்கப்படுகின்றது.

நாட்டார் விழாக்கள் பெரும்பாலும் அவர்களுக்குரிய தெய்வ வழிபாடுகளுடன் தொடர்புடையவை. அவர்களின் தெய்வவழிபாடு குடும்பத் தெய்வங்களில் இருந்து ஆரம்பிக்கின்றது. வீட்டில் நிகழும் விழாக்கள் அனைத்தும் குடும்பத் தெய்வங்களை முன்னிலைப்படுத்தியே நிகழ்த்தப்படும்.

குடும்ப உறவுகளைப் பலப்படுத்தல், சமூகமயமாக்கலை முன்னெடுத்தல், அடிப்படை வழிபாட்டுத்திறன்களை வளர்த்தல், ஒழுக்கங்களை மீள வலியுறுத்துதல் முதலிய கல்விச் செயற்பாடுகளை வளர்ப்பதிலே குடும்ப விழாக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

தனியாள் வளர்ச்சி தொடர்பான நிலைமாற்ற இசைவாக்கலில் குடும்ப விழாக்களின் பங்கு விதந்து குறிப்பிடப்படுகின்றது. குடும்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாக்கள் ஒவ்வொன்றும் அதற்குரிய சடங்குடன் தொடர்புபட்டிருக்கும். பிறப்பிலிருந்து வாழ்க்கையின் நீட்சி வரை ஒவ்வொரு நிலை மாறும் கட்டத்துக்குரியவாறு சடங்குகளும் அவற்றுடன் தொடர்புடைய விழாக்களும் கட்டமைப்புச் செய்யப்பட்டிருக்கும். குடும்பச் சடங்குகளிலும் விழாக்களிலும் குறியீடுகள் வாயிலான கருத்துக் கையளிப்பும் நிகழ்த்தப்படும். எடுத்துக்காட்டாக கருவுற்ற பெண்ணுக்கு நிகழ்த்தப்படும் வளைகாப்புச் சடங்கு மகப்பேற்றுப் பயத்தை நீக்கி மனத்திடத்தை உருவாக்கும் சடங்காகவும் குடும்ப விழாவாகவும் அமைகின்றது. காப்பு என்பது காவலைக் குறியீட்டுப்படுத்தும்.

பூப்புனித நீராட்டுச் சடங்கிலும் விழாவிலும் முதியோர் அணியும் ஆடை அணிகள் அணிவதற்குக் கொடுக்கப்படுதல், வளர்ந்தோருக்குரிய அங்கீகாரத்தை வழங்கும் குறியீடுகளாகின்றது.

நாட்டார் தெய்வவழிபாடுகளுடன் இணைந்த விழாக்கள் பலர் பங்கு கொள்ளும் பெரு விழாக்களாகின்றன. பத்தினியம்மன், காளி, ஏழுகன்னிமார், மதுரைவீரன், மாடாசாமி, முனியாண்டி, ரோதைமுனி, ஐயனார், வேட்டைக்கருப்பு, செண்டாக்கட்டி, மலைசாமி, மின்னிடையான், வைரவர், இடும்பன், வனத்துச்சின்னப்பர், மாரியாத்தா முதலிகள், இளந்தாரிகள், அண்ணமார் முதலிய நாட்டார் தெய்வங்களை அடியொற்றி விழாக்கள் இடம்பெறும்.

அத்தகைய விழாக்கள் பன்முகப் பரிமாணங்களைக் கொண்டவை பொங்கல், படையல், ஆடல், பாடல், கூத்து, உடுக்கடி. தப்படி, செண்டை, கும்பி, கரகம், காவடி முதலாம் பல்வேறு பரிமாணங்களை அவை கொண்டிருக்கும்.

கல்வியேற்றம் மற்றும் உளவியல் ஏற்றம் முதலாம் செயற்பாடுகள் அவ்வகை விழாக்களுடன் தொடர்புபட்டிருக்கும். கல்வி ஏற்றங்களாகப் பின்வருவன இடம்பெறும்.

1. ஆற்றல்களை வெளிப்படுத்துதல்
2. சமூக வகிபாகங்களுக்குப் பயிற்சிதருதல்
3. சமூக உறவுகளைப் பராமரித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கூட்டு வாழ்க்கையைப் பலப்படுத்துதல்

5. தொன்ம அறிவைக் கையளித்தல்

மகிழ்ச்சியோடும் பங்குபற்றலோடும் அறிவுக்கையளிப்பை மேற்கொள்ளல் விழாக்களின் கல்வி இலக்குகளாக அமைகின்றன.

வழிபாட்டுடன் இணைந்த விழாக்களின் உளவியற் கையளிப்பு பலநிலைகளிலே இடம்பெறும் அவையாவன:

1. மீண்டும் செயற்படும் ஆற்றலை வளமும் வலுவும் படுத்துதல்.

2. தீங்குகள் வராது தடுக்கப்படும் என்ற மனவுறுதியைக் கொடுத்தல்.

3. வந்த நோய்கள் போய்விடும் என்ற நம்பிக்கைக்கு வலுவூட்டுதல்.

4. வானம் பொய்க்காது என்ற நம்பிக்கையை மேலோங்கச் செய்தல்

5. விளைச்சல் பெருகும், கால்நடைகள் பெருகும் என்ற பொருண்மிய நடைகள் பெருகும் என்ற பொருண்மிய நம்பிக்கைகளுக்கு உறுதியூட்டல்.

நாட்டார் தெய்வவழிபாடுகளோடும் விழாக்களோடும் சாதியம் தொடர்புபட்டிருத்தல் அவற்றின் பிறிதொரு நிபந்தனைப்பாடு. சாதிய வேறுபாடுகளுக்கிடையே சில பொதுத்தன்மைகளும் காணப்படுதல் குறிப்பிடத்தக்கது.

நாட்டார் வழிபாட்டு முறையிலும், விழாக் கட்டமைப்பு முறையிலும் சாதிய நிலையில் அதிக வேறுபாடுகளைக் காண முடியாது.

விளிம்புநிலையினரது விழாக்களில் மேட்டுக் குடியினரைக் கிண்டல் செய்யும் ஆடலும் பாடலும் நிகழ்த்தப்படுதல் உண்டு. அடக்கப்பட்ட ஆழ்மன உணர்வுகளை வெளியிடுவதற்குரிய ஏற்பாடுகள் விழாக்களிலே காணப்படுதல் குறிப்பிடத்தக்கது.

மேட்டுக்குடியினர் அணிவது போன்ற தலைப்பாகை அணிதல், சதங்கை கட்டுதல், நில விரிப்பு விரித்து நடத்தல் முதலியவை மேற்கொள்ளப்படுகின்றன. அவை சடங்குகளோடு தொடர்புபட்ட மரபுகளாக இருப்பதனால் மேட்டுக் குடியினரால் தலையீடு செய்ய முடியாதுள்ளது. தலையீடு செய்தால் தெய்வசாபம் நிகழும் என்ற பயமும் மேட்டுக் குடியினரிடத்தே நிலைபேறு கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாக்களும் வழிபாடுகளும் நாட்டார் தெய்வங்களை வீரம் மிக்கவை என்ற உணர்வுக்கு வலுவூட்டுகின்றன. வீரத்தைக் குறியீட்டுப்படுத்தும் ஆயுதங்களும் கடவுளருடன் வைக்கப்படுகின்றன. "இறை அச்சம்" என்ற உணர்வின் வலுவூட்டல் வாழ்க்கையிலே தவறு செய்யாது வாழ்தல் என்ற செயற்பாட்டுக்கு வலுவூட்டுகின்றது. அந்தவகையில் நாட்டார் வழிபாடுகளும் விழாக்களும் கல்விக்கும் உளவியலுக்குமுரிய கருத்துநிலைச் சூழமைவை *(Context of Meaning)* ஏற்படுத்துகின்றன.

"தொழில்களை விட்டு நீங்குதல்" என்ற செயற்பாடு நாட்டார் விழாக்களில் நிகழ்த்தப்படும் ஒரு முக்கியமான செயற்பாடு தொழில்களை அடிப்படையாகக் கொண்ட சாதிய முறைமை நிலவுகின்ற சமூகத்திலே "தொழில்களை விட்டு நீங்குதல்" என்பது சமூக நிலையிலும் கல்வி நிலையிலும் ஒரு முக்கியமான செயற்பாடாகவுள்ளது. நாட்டார் வழிபாடுகளிலும் விழாக்களிலும் அவர்கள் மேற்கொள்ளும் தொழிற்கருவிகள் வைக்கப்படாதிருத்தல் தொழில்களை விட்டு நீங்குதல் என்ற செயற்பாட்டைக் குறியீட்டுப்படுத்துகின்றது. மேலோர் அழுத்தங்களில் இருந்து விடுபடும் உளக் கோலத்தையும் அது உருவாக்குகின்றது. கருத்தைப் புலப்படுத்தும் தொடர்பாடல் சூழலின் உருவாக்கமாகவும் அது அமைகின்றது.

(வைதிக வழிபாட்டு முறையிலேதான் ஆயுதங்களை வைத்து வழிபடும் ஆயுத பூசை இடம்பெறுதல் குறிப்பிடத்தக்கது)

ஒவ்வொரு சாதியினருக்குமுரிய தெய்வ வழிபாடும் விழாக்களும் பிறிதொரு வகையில் முக்கியத்துவம் பெறுகின்றன. சமூகத்தின் தாழ் அடுக்கினருக்கும் உயர் அடுக்கினருக்குமிடையேயுள்ள முரண்பாட்டை தாழ் அடுக்கினர் எதிர்கொண்டு மேலெழும் ஏற்றத்தை விழாக்கள் கையளிக்கின்றன. அவர்களது சமூகத்தைச் சேர்ந்தவர்களே பூசகராக இருத்தலும் அவர்களே தலைமையேற்று விழாவை நடத்துதலும் ஒடுக்கப்பட்டோரிடத்துக் கிளர்ந்தெழும் பண்பாட்டு விசையாகின்றது. அங்கீகரிப்புக்கு உள்ளான இந்த விசை சமூகக் கல்வி நிலையில் முக்கியத்துவம் பெறுவதாகும்.

விழாக்களுக்கும் அறிவுக் கையளிப்புக்குமுள்ள தொடர்புகளை சூழலியற் கண்ணோட்டத்தில் ஆராயும் செயற்பாடுகளும்

Arasady Public Library
Municipal Council
Batticaloa.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No:
Acc No 1573

வளர்ச்சியடைந்து வருகின்றன. பருவமாற்றங்களுக்கும் விழாக்களுக்கு மிடையே நேரடியான தொடர்புகள் உண்டு. பயன்தரு மரங்கள் பூக்கும் காலம், அறுவடைகள் நிகழும் காலம் முதலியவை தொடர்பான அறிவூட்டல் விழாக்களால் முன்னெடுக்கப்படுகின்றன. ஆடலும் பாடலும் பருவநிலை மாற்றங்களைக் குறியீட்டுப்படுத்தும் வகையில் அமைக்கப்படுகின்றன.

நாட்டாரின் காலங்காட்டியாக (Calender) வழிபாடுகளுடன் இணைந்த விழாக்கள் விளங்குகின்றன. ஒவ்வொரு மாதம் ஒவ்வொரு நாட்டார் தெய்வத்துக்குரிய விழா தொடர்புபட்டிருக்கும். அவ்வாறே ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தெய்வத்துக்குரிய சிறப்பான நாளாகக் கொள்ளப்படும். அவ்வகையில் விழாக்களும், வழிபாடுகளும் காலம் காட்டும் குறியீடுகளாக நாட்டார் வாழ்க்கையிலே கட்டமைப்புச் செய்யப்பட்டிருத்தல் தமிழர் தேசிய அடையாளங்களாகின்றன.

நாட்டார் விழாக்கள் சமூகவியற் கண்ணோட்டத்தில் ஆராயப்பட்ட அளவுக்கு கல்வியியல் நோக்கில் விரிவாக ஆராயப்படவில்லை. அத்தகைய ஆய்வுகள் அறியப்படாத பயனுள்ள தகவல்களை வெளிக்கொண்டு வருவதற்குத் துணை செய்யும் நாட்டார் பண்பாடு பன்முகமான கல்விச் செயற்பாடுகளின் ஒன்றிணைந்த களஞ்சியமாக இருத்தல் நடப்பியல் நிலவரமாகின்றது.



Class No: 
Acc No 15473
Arasady Public Library
Municipal Council
Batticaloa.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டார் கதைகள் மற்றும் கதைப் பாடல்கள் வாயிலான அறிவுக்கையளிப்பு

கதைகள் வழியாகக் கற்பித்தலை மேற்கொள்ளல் நாட்டார் வழக்காற்றிலே இடம்பெறும் தனித்துவமான கல்வி நடவடிக்கை கதைகள் வழியாக "அறிவூட்டல்" மனித வரலாற்றின் தொன்மையான தொடர்பாடல் செயல்முறையாக அமைந்தது. தனித்து "பொழுது போக்கு" என்ற ஒற்றைப் பரிமாணத்துடன் மட்டும் கதையளிக்கை இடம்பெறவில்லை. அதற்கு அறிவுக்கையளிப்புப் பரிமாணமும் இருந்தது.

நாட்டார் கதைகள் உரைவடிவிலும் அமைந்தன, பாடல் வடிவிலும் அமைந்தன. இரண்டும் இணைந்த ஒட்டுமையாகவும் அமைந்தன.

தொன்மையான கதைகள் பட்டறிவின் தெறிப்பாக அமைந்தன. பட்டு அனுபவித்த தளமே கதைத்தளமாக அமைந்தது. அனுபவமும் புனைவும் வாயிலாக ஒருவரின் அறிகை நிலை கதை என்ற ஊடகத்தினால் கையளிப்புச் செய்யப்பட்டது.

செவிவழியாகக் கையளிப்புச் செய்யப்பட்ட கதைகள் நீட்சி கொண்டு நெடுங்கதைகளாகவும், காவியங்களாகவும் பரவலுற்றன. மனித அசைவியத்தோடு நாட்டார் கதைகள் ஆள்புல எல்லைகளையும் கடந்து பரவலுற்றன.

வாய்மொழிக்கதைகள் எப்போ தோன்றியவை என்பதைக் கண்டறிவதற்குப் பல குறுக்கு முக ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதாவது அரசியல் நிலை. குறித்த நிகழ்ச்சிகளின் காலம், வரலாற்றுப் பின்புலம் முதலாம் நிகழ்ச்சிகளுடன் குறுக்குமுகமாகத் தொடர்புபடுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தைக் கண்டறியும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆயினும் அது மிகுந்த சிக்கலான பணி.

ஒரே சமயத்தில் நாட்டார் கதைகள் நிலைத்த நூலியத்தையும் *(Fixed Text)* மாறும் நூலியத்தையும் கொண்டிருக்கும். குறித்த கதை அல்லது நூற்கருவாய் மொழியாகப் பரவிச் செல்கையில் திரிபடைந்தும் மாற்றமடைந்தும் செல்வதுண்டு. அத்தகைய ஒரு மாற்றம் அறிவுக் கையளிப்பின் தேவை கருதி நிகழ்த்தப்படுகின்றது. அந்நிலையில் அது கட்டற்ற நூலியமாக *(Free Text)* மாற்றம் பெறுகின்றது.

நாட்டார் கதைகளில் நடப்பியற் பண்பு மேலோங்கியிருப்பதனால் நம்பகத் தன்மையும் மேலோங்கியிருக்கும். பாத்திரங்களும் நிகழ்ச்சிக் கூறுகளும் உறு நேர்வுகளாக *(Real)* இருப்பதனால், அவற்றின் வழியாகக் கையளிக்கப்படும் அறிவு நம்பிக்கை கலந்ததாகவே இருக்கும்.

நாட்டார் கதைகளோடு ஒப்பிடும் பொழுது கதைப்பாடல்கள் காலத்தால் பிந்தியவை. மேலைநாட்டுக் கதைப் பாடல்களை ஆராய்ந்தவர்கள் அவை வீரயுகத்தோடு *(Heroic Age)* தோன்றியிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

இலியட், ஒடிசி போன்ற பெருங்காவியங்கள் வாய்மொழிக் கதைப்பாடல்களில் இருந்தே உருவாக்கம் பெற்றவை என்பது ஆய்வாளரின் முடிவு. இக்கருத்து மகாபாரதம், இராமாயணம் முதலாம் காவியங்களுக்கும் பொருந்தும்.

வாய்மொழிக் கதைகளுக்கும் கதைப்பாடல்களுக்குமிடையே உருவ நிலையில் மட்டுமன்றி உணர்த்தும் நிலைகளிலும் வேறுபாடு உண்டு. உதாரணமாக சிறுவர்களுக்குரிய கதைகள், நோய்வாய்ப் பட்டவர்களுக்குத் துணிவூட்டும் கதைகள் போன்றவாறான உணர்த்தும் நிலை கதைகளிலே காணப்படுகின்றது. ஆனால் கதைப்பாடல்கள் அனைவருக்கும் "பொதுவான இயம்பலைக்" கொண்டுள்ளன.

நாட்டார் கதைப்பாடல்கள் நிகழ்த்துகைப் *(Performing)* பாங்கானவை. நிகழ்த்துகைக் களத்துடன் தொடர்புடையவை. இசைக் கருவிகளோடு இணைத்துப் பாடப்படுபவை.

நாட்டார் கதைகளின் அறிவுக் கையளிப்பு நிலைகளை அடியொற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை பின்வருமாறு பாகுபாடு செய்யப்படுகின்றது.

1. மனித உழைப்போடு தொடர்புடையவை

2. அறம் உரைப்பவை

3. சிறுவர்க்கு உரைப்பவை

4. சமயச்சார்புடையவை

5. வரலாற்றுச் செய்திகளைக் கூறுபவை

6. நோய்வாய்ப்பட்டவர்க்கு மனவுறுதி கொடுப்பவை

7. சமூகப் பொறுப்புக்களை உரைப்பவை

8. வீரர்களைப் பற்றியவை

9. நகைச்சுவை தழுவியவை

10. புத்தூக்கம் கொடுப்பவை

இவற்றின் வாயிலான அறிவுக் கையளிப்பு பலதளங்களிலும் பல பரிமாணங்களிலும் நிகழ்வதை மேற்குறித்த விபரப் பிரிப்பு தெளிவு படுத்துகின்றது.

நாட்டார் கதைப்பாடலில் கதை மட்டுமன்றி, கதைகூறும் வடிவமும் முக்கியத்துவம் பெறுகின்றது.

எடுத்துக்காட்டாக வீரபாண்டிய கட்ட பொம்மனைப் பற்றிப் பின்வரும் கதைப்பாடல் வடிவங்கள் வழக்கில் உள்ளன. (தகவல், அ.பாண்ரங்கன், 1993)

1. வீரபாண்டியக் கட்டப்பொம்மு கதைப்பாடல்

2. கட்டப் பொம்மு கும்மிப்பாடல்

3. கட்டப் பொம்மு இராமநாதபுரம் பேட்டி விருத்தம்

4. கட்டப் பொம்மன் கதைப்பாடல்

5. கட்டப் பொம்மு கூத்து

6. கட்டப் பொம்மு துரைக்கதை

7. பஞ்சாலங்குறிச்சி சண்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்குமுறைகளையும் அநீதிகளையும், மேலாதிக்கத்தையும் எதிர்க்கும் பண்புகள் நாட்டார் கதைப்பாடல்கள் கையளிக்கும் அறிவு சார்ந்த செய்திகளில் முக்கியத்துவம் பெறுகின்றன.

புராணங்களை ஒட்டிய கதைப்பாடல்கள் நாட்டாரின் அறிவுத் தளத்தில் நின்று அறம் உரைப்பனவாய் அமைந்துள்ளன. அவ்வகையில் பாரதத்தை அடியொற்றி அல்லியரசாணி மாலை, புலந்திரன் களவு மாலை, பவளக்கொடி மாலை, ஏணியேற்றம், கர்ணமகாராசன் சண்டை, ஆரவல்லி சூரவல்லி, திரௌபதி குறம், மின்னொளியாள் குறம், பொன்னுருவி மசக்கை, அபிமன்னன் சுந்தரிமாலை ஆகியவை தோற்றம் பெற்றன என்பது பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரின் குறிப்பு.

கதைப்பாடல்கள் நாட்டார் கூத்துக்களின் வளர்ச்சியோடு மட்டுமன்றி, வில்லுப்பாட்டு என்ற கலைவடிவத்தின் வளர்ச்சியோடும் தொடர்புபட்டுள்ளன. வினா விடை வடிவிலே கதையை நகர்த்திச் செல்லல் வில்லுப்பாட்டு நிகழ்த்துகையின் ஒரு சிறப்புப் பண்பு. கதைப்பாடல்களை அடியொற்றியே கதாப்பிரசங்கமும் வளர்ந்தது.

வில்லுப்பாட்டு என்பது வில்லடிப்பாட்டு என்றும் அழைக்கப்படும். வில்லை அடித்துப்பாடிக் கதைசொல்வதால் அந்தப் பெயர் வழங்கப் பெற்றது. வில்லுப் பாட்டின் பிறிதொரு பரிமாணம் உரையும் பாடலும் இணைந்த வகையில் கதையை நிகழ்த்துதல்.

தொன்மக் கதைகளைப் பாடுதல், கிராமியத் தெய்வங்களைப் பாடுதல், அரசர்களைப் பாடுதல், வீரர்களைப் பாடுதல் என்ற நிலைகளிலே கதைப்பாடல்கள் பாகுபடுத்தப்படும்.

தொன்மக் கதைப்பிரிவில் அல்லி அரசாணி மாலை, புலேந்திரன் தூது, பவளக்கொடிமாலை, அபிமன்னன் சுந்தரிமாலை, ஏணியேற்றம், பஞ்சபாண்டவர் வனவாசம், சீதாதேவி, கர்ணமகாராசன், இராமகதை, சித்திரபுத்திர நாயனார்கதை, காமன்கதை, இரணியன்கதை முதலியவை உள்ளடங்கும்.

தொன்மங்கள் பற்றிய அறிவைப் பரவல் செய்தலும் அவற்றின் வழியாக வாழ்வதற்குரிய கருத்தேற்றங்களைச் செய்தலும் நாட்டார் கல்வியின் நோக்கங்களாகவுள்ளன. சமூக ஒழுங்கை நிலை நிறுத்தும் கல்விச் செயற்பாடும் அவற்றின் வழியாக முன்னெடுக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரர்களைப் புனைத்துரைக்கும் கதைப் பாடல்களில் மதுரைவீரன் கதை, முத்துப்பாட்டன் கதை, மம்பட்டியான் கதை, காத்தவராயன்கதை, மாடாசுவாமி கதை, அண்ணமார் சுவாமி கதை, குருசுவாமி கதை முதலியவை இடம்பெறுகின்றன. வீரர்களை முன்மாதிரிப் பாத்திரமாதிரிகை *(Role Model)* களாகக் கொள்ளும் வீரமூட்டல் கல்விச் செயற்பாடுகளுக்குக் கதைப்பாடல்கள் துணை செய்கின்றன.

அரசர்களைப் பற்றிய கதைப்பாடல்களுள் வீரபாண்டிய கட்டப்பொம்மன்கதை, தேசிங்குராசன் கதை, ஐவர் இராசாக்கள் கதை, இராமப்பையன் கதை முதலியவை அடங்குகின்றன. அரசர்களைச் சாதாரண மக்கள் நிலையில் வைத்துப் புனைதல் நாட்டார் கதைகளின் பொதுவியல்பு. அப்படிக்கூறும் பொழுது கல்வி நிலையில் எத்தகைய கருத்தேற்றம் நிகழ்கின்றது என்ற கேள்வி எழலாம்.

அரசர்களை தேவர்களின் பிரதிநிதிகளாகக் கருதுதல் வைதிகப் புனைவுகளின் ஒரு பரிமாணம். ஆனால் நாட்டார் கதைகள் தமக்கு இணையான வகையில் அசுரர்களை காணுகின்றன. "அனைவரும் எங்களைப் போன்றவர்களே" என்ற சமத்துவச் சிந்தனைகளுக்கு நாட்டார் கதைகளும் கதைப்பாடல்களும் வலுக்கொடுக்கின்றன.

நாட்டார் தெய்விகக் கதைப்பாடல்களாக மாரியம்மன் கதை, வள்ளியம்மன் கதை, பத்திர காளியம்மன்கதை, முனியாண்டிகதை, கருப்பண்ணாசாமிகதை முதலியவை வளர்ச்சிபெற்றுள்ளன. வேண்டுமென்றே தவறுகள் செய்யாது வாழ வேண்டும் என்ற நடத்தை சார்ந்த அறிவூட்டல் தெய்வக் கதைகளின் கல்வி நோக்காக அமைகின்றது. தவறு செய்பவர்கள் தெய்வச்சீற்றத்துக்கு உட்படுவார்கள் என்று மீள வலியுறுத்தலும் அத்தகைய கதைகளால் மேற்கொள்ளப்படும் கருத்தேற்றமாகவுள்ளது.

தெய்வக் கதைப்பாடல்கள் தெய்விக வழிபாட்டு இடங்களில் பாடப்படுதல் அவற்றுக்குரிய பிறிதொரு பரிமாணம். அவ்வாறு பாடும் பொழுது அவை செவிமடுக்கும் பாடல்களாக மட்டும் அமையப் பெறாது, பக்திப் பாடல் என்ற ஆக்கத்தையும் பெறுகின்றன. ஆனால் வைதிகமரபினர் நாடர் சமயக் கதைப்பாடல்களைப் பக்திப் பாடல்களாக ஏற்றுக் கொள்வதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய முரண்பாட்டின் பின்புலத்திலேதான் ஆறுமுக நாவலருக்கும் வள்ளலாருக்குமிடையே "அருட்பா", "மருட்பா" மோதல் எழுந்தது.

கல்வி நிலையில் நாட்டார் கதைப்பாடல்களின் பரிமாணங்கள் முக்கியமானவை. அவற்றில் பக்தியும் அழகியலும் வழிபாடும் ஒன்றிணைக்கப்படுகின்றன. வேலைகளில் மூழ்கிய கிராமத்து உழைப்பாளருக்கு அவை நெருக்கீடுகளைத் தணித்து உளச் சுகத்தை வழங்குகின்றன.

நாட்டார் கதை மரபில் சிறுவருக்கான கதைகள் உளவியல் முக்கியத்துவம் கொண்டவை. சிறுவர்களின் கற்பனைகளை வளர்த்தல், பிரச்சினை விடுவிக்கும் திறன்களை வளர்தல், அழகியல் உணர்வுகளை வளர்த்தல் ஆகியவற்றுடன் அவர்களின் உள அழுத்தங்களைத் தணித்துக்கொள்வதற்கும் அவை துணை செய்கின்றன.

நல்ல செயல்கள் நல்ல நடத்தைகள் முதலியவற்றை வளர்த்துக் கொள்வதற்குரிய கல்விச் சாதனமாகவும் நாட்டார் கதைகள் அமைகின்றன. நல்லவை/ தீயவை, அறம்/மறம், அறிவுடைமை/ அறியாமை முதலிய இருமை நிலைகளை உய்த்தறியவைக்கும் அறிவுச் சாதனங்களாகவும் கதைகள் அமைந்துள்ளன.

கதைகளின் முக்கியத்துவம் நாட்டார் பண்பாட்டில் மேலோங்கி யிருந்தமையால் "கதை சொல்லிகள்" என்ற பிரிவினரும் கிராமங்களிலே தோற்றம் பெற்றனர். இந்தியாவிலே "கதகர்" எனப்படும் கதை சொல்லும் சாதியினர் உருவாக்கம் பெற்றனர். கதை சொல்லும் தொழில் வாயிலாக அத்தகைய சாதியம் தோற்றம் பெற்றது.

தமிழ்ச் சூழலில் அவர்கள் "கதைகட்டிகள்" என அழைக்கப் பட்டனர். கதை சொல்லுதல் கதை கட்டுதல் எனப்பட்டது. அவர்களின் புனைவு ஆற்றல் காரணமாக ஒரே கதை பல்வேறு வடிவங்களில் வளர்ச்சியடைந்தது. சம்பவங்களை அடியொற்றிப் புதிய புதிய கதைகளைப் படைக்கும் ஆற்றலும் அவர்களுக்கு இருந்தது. கதை சொல்லும் மூத்த பெண்களைக் "கட்டு விச்சி" என்று சொல்லும் மரபு இருந்தது.

அறிவு மற்றும் அனுபவங்களை அழகியல் முனைப்புடன் நாட்டாரிடத்துப் பரவல் செய்வதில் கதைகளும் கதைப்பாடல்களும் பயன்மிக்க கல்விச் சாதனங்களாக இருந்து வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டார் பாடல்களும் அறிவுப் பரவலும்

நாட்டார் கல்விச் செயல்முறையில் அவர்களின் வகிபாகம் முக்கியமானது. அறிவூட்டல், சீர்மியம் செய்தல், வழிகாட்டல், உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ளல் முதலாம் பல்வேறு கல்விச் செயற்பாடுகளை நாட்டார் பாடல்கள் தாங்கிய வண்ணமுள்ளன. அறிவும் செயலும் கலந்த நிலை அப்பாடல்களுக்குரிய பிறிதொரு கல்விப் பரிமாணம்.

பொழுது போக்கு இன்பம் என்ற ஒற்றைப் பரிமாணத்தில் அந்தப் பாடல்களை நோக்குதல் தவறானது. படிப்பறிவில்லாதவர்கள் என்று நாட்டாரைச் சுட்டுதல் மேலும் தவறானது. ஏட்டுக்கல்வியை அவர்கள் பெறாதிருந்த பொழுதிலும் நாட்டார் கல்வியோடு *(Folk Education)* அவர்கள் உறவாடிக் கொண்டிருப்பவர்கள். வாழ்க்கையோடு இணைந்த அந்தக் கல்வி மேலாதிக்க அழுத்தங்களில் இருந்தும் விடுபட்டது.

நாட்டார் பாடல்களை அவற்றின் உள்ளடக்கத்தை பாகுபடுத்தும் நிலை காணப்பட்டது. அந்த வகைப்பாட்டிலும் சிக்கல்கள் உள்ளன.

அ. சமூகப் பாடல்கள்

ஆ. உழைப்பு மற்றும் தொழிற்பாடல்கள்

இ. வாழ்த்துப் பாடல்கள்

ஈ. தெய்வப் பாடல்கள்

உ. தாலாட்டுப் பாடல்கள்

ஊ. விளையாட்டுப் பாடல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ. திருமணப் பாடல்கள்

ஏ. குடும்பப் பாடல்கள்

ஐ. ஒப்பாரிப்பாடல்கள்

ஒ. வேடிக்கைப் பாடல்கள்

ஓள. கதை மற்றும் நாடகப் பாடல்கள்

ஆக ஒன்றன்மேல் மற்றையது மேற்பதியும் பண்பும் அந்தப் பாகுபாட்டிலே இடம்பெற்றுள்ளது.

சமூகத்தில் இடம்பெறத் தொடங்கிய சமனற்ற வளர்ச்சி காரணமாக சமூகம் முரண்படும் ஏற்றங்களைப் பெறத் தொடங்கியது. ஒரு துருவத்தில் மேட்டுக்குடியினரும் எதிர்த்துருவத்தில் நாட்டார் எனப்படும் விளிம்பு நிலையினரும் இடம்பெறத் தொடங்கினர்.

மேட்டுக்குடியினருக்குரிய அறிவுக் கையளிப்பில் செவ்வியல் இலக்கியங்களும் விளிம்புநிலையினரின் அறிவுக்கையளிப்பில் நாட்டார் இலக்கியங்களும் முதன்மை பெறத் தொடங்கின. இரண்டு செயற் பாடுகளிலும் அழகியலும் அறிவுக் கையளிப்பும் ஒன்றிணைக்கப் பட்டிருந்தன. இரண்டும் முற்றாக அறுபட்டவையன்று. அவற்றுக கிடையே இடைத் தொடர்புகளும் காணப்படுகின்றன.

சமூக உறவுகளையும் சமூகத் தொடர்புகளையும் விளக்கும் சமூக மயமாக்கற் கல்வியை நாட்டார் பாடல்கள் மேற்கொள்கின்றன. வரன்முறைக் கல்விநிலையங்களில் எழுத்தறிவு முதன்மைப்பாட்டுடன் இச்செயல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. எழுத்தறிவு வளர்ச்சியுறாத சமூகங்களில் வளர்ந்தோரின் வாய்மொழிப் பேச்சுக்களும் பாடல்களும் நடத்தைகளும் சமூகமயமாக்கலில் வளமான பங்களிப்பை மேற்கொள் கின்றன. எழுத்தறிவுச் சமூகத்திலே சமூகமயமாக்கல் ஒரு "செயற்பாடாக" முன்னெடுக்கப்பட நாட்டார் சமூகத்தில் அது இயல்பாகவே நிகழ்த்தப்பட்டது.

மனவெழுச்சிகளுக்குப் பயிற்சிகொடுத்தாலும், மனவெழுச்சிகளைச் செயற்பாடுகளுடன் இணைத்து விளைவை அதிகரிக்கச் செய்தலும் நாட்டார் பாடல்களினால் வளமாக முன்னெடுக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாகக் கூத்துக் காவடிச் சொற்கட்டுகள் மனவெழுச்சித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டலினை அருட்டி விடும் ஆற்றலினைப் பின்வரும் அடிகளில் இருந்து அறிந்து கொள்ளலாம். (பொன்னுத்துரை, 1988, ப.5)

"தகணக சொம் சொம் தித்தா தித்தெய்
தரிகு சொம் சொம் தித்தா தித்தெய்
தகண சொம் சொம் தரிகு சொம் சொம்
தக்கரம் டக்கரம் டண்ட டிங்கிட
டகண டிங்கிட கிறுதா தத்தித் தொம்"

செவ்வியல் ஆடல்களிலே பயன்படுத்தும் ஜதிகள் நாட்டார் செயற்பாட்டுச் சொற்களை அடியொற்றியே மேலெழுந்தன. ஏனெனில் நாட்டார் சொற்கட்டுகள் காலத்தால் முந்தியவைதான்.

அறிமுறை நிலையிலும் ஆற்றுகை நிலையிலும் மக்களின் செயற்பாடுகளை வினைத்திறன் படுத்துதல் கல்விப் பயன்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

"ஆழ உள வேணும்
அடுக்கடுக்கா நடவு வேணும்
கூனல் விழுந்த பயிர்
குலை விட்டு முழிக்க வேணும்"

மேற்படி பாடல் சின்னப் பாரதி அவர்களின் தொகுப்பிலிருந்து பெறப்பட்டது. விலகலான பயிரை மீட்டெடுத்து விளைவைப் பெருக்கும் செய்றபாட்டுக்குப் பாடல் வழியாக வலுவூட்டப்படுகிறது.

செயற்பாடுகளை ஒழுங்கு வரிசைப்படுத்தி மேற்கொண்டு செய்யப்பட வேண்டியவற்றுக்கும் வலுவூட்டல் நாட்டார் பாடல் வழியான அறிவுக் கையளிப்பின் பிறிதொரு பரிமாணம்.

"மயிலை எருது பூட்டி - அண்ணன்
வயலை உழுதிட்டான்
வயலை உழுதிட்டான்
வாழை சம்பா நாத்தெடுத்து
வகையா நாட்டுங்கோடி
வகையா நாட்டுங்கோடி - (ரா.ஐயாசாமியின் தொகுப்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலை மீளமீளச் சொல்லுதல் என்பது உழைப்பை வெளிப்படுத்தும் ஒலிப்பெருக்கு. அது "ஓலம்" என்றும் குறிப்பிடப்படும் உழைப்பின் வலிமை அதனாற் புலப்படுத்தப்படும் படகுவலிக்கும் பாடல்களில் இந்த ஓலம் மிகையாகக் காணப்படும்.

நாட்டார் பாடல்கள் கல்வி நிலையில் பின்வரும் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றன.

1. புராணச் செய்திகைளக் கையளிப்புச் செய்தல். புராணச் செய்திகளின் சிதறிய துண்டங்களாக அவ்வகைப் பாடல்கள் அமைகின்றன. பெரும் இருப்பான அறிவைப் பொருத்தமான துண்டங்களாக வகுத்துக் கையளித்தல் நவீன கற்பித்தலில் மேற்கொள்ளப்படும் ஒரு நுண்முறையாகும் எடுத்துக்காட்டாக திருமால் உலகளந்த தொன்மம் பின்வரும் பாடலால் அறிபரவல் செய்யப்படுகின்றது.

"சங்கு சக்கரச் சாமிவந்து
சிங்குசிங்கென ஆடுமாம்
உலகம் முழுதும் அளக்குமாம் - அது
ஓங்கி வானம் பிளக்குமாம்"

2. வரலாற்றுக் கல்வியும் நாட்டார் பாடல்கள் வழியாகப் புகட்டப்படுகின்றது. எடுத்துக்காட்டாக மலையக நாட்டார் பாடல் ஒன்று வருமாறு:

"அடி அளந்து வீடுகட்ட
ஆண்ட மனை அங்கிருக்க
பஞ்சம் பொழைப்பதற்கு
பாற்கடலைத் தாண்டிவந்தோம்
பஞ்சம் பொழச்சு நம்ம
பட்டணம் போய்ச் சேரலையே
கப்பல் கடந்து
கடல்தாண்டி அங்க வந்தோம்
காலம் செழிச்சு நம்ம
காணிபோய்ச் சேரலியோ"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய பாடல் சாரல்நாடன் தொகுப்பிலிருந்து பெறப்பட்டது.

நாட்டார் பாடல்களின் கல்விப் பரிமாணங்களிலே சிறப்பான ஒரு கூறாக அமைவது சமூகம் பற்றிய உற்றறிகை. சமூகத்தின் சமனற்ற இருப்பும், மேலாதிக்க நிலவரங்களும் பாடல்கள் வாயிலாகத் துல்லியமாக வெளிப்படுத்தப்படுகின்றன. பாதிக்கப்படுபவர்களின் கண்ணோட்டத்தில் சமூகம் திறனாய்வு செய்யப்படுதல் சமூகப் புலக்காட்சியை மேலும் வலிமைப்படுத்துகின்றது.

எடுத்துக்காட்டாக பின்வரும் பாடல்களை நோக்கலாம் (சாரல்நாடன், 1995)

"கோணக்கோண மலையேறி
கோப்பிப்பழம் பறிக்கையிலே
ஒரு பழம் தப்பிச்சின்னு
ஒதைச்சானய்யா சின்னதொரை"

"எண்ணிக்குழி வெட்டி
இடுப்பொடிஞ்சி நிக்கையிலே
வெட்டு வெட்டு என்கிறானே
வேலையத்த கங்காணி"

இழந்தவற்றை மீள உருவாக்குதல் தொலைத்தவற்றை மீள நிரப்புதல் முதலாம் மனத்துக்கு வலுவூட்டும் செயற்பாடுகள் நாட்டார் பாடல்கள் வழியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மனத்துக்கு வலுவூட்டுதல் என்பது கல்வி நிலையிலும், உளவியல் நிலையிலும் செயற்பாடுகளுக்கு வலுவூட்டும் மனிதவள விருத்திச் செயல்முறையாகின்றது.

"ஊரான ஊரிழந்தோம்
ஒத்தை தோப்பிழந்தோம்
நேரான காலம் வரும்
நேத்திக்கடன் முடிக்க"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறித்த பாடல் சின்னப்ப பாரதியின் தொகுப்பிலிருந்து பெறப்பட்டது. மேலும் தெம்மாங்குப் பாடல்களில் உளவலுவூட்டல் இறைநம்பிக்கையுடன் இணைந்ததாகக் காட்டப்படுகின்றது. கீழ்வரும் பாடல் ஆறு அழகப்பன் நூலில் (1999) இருந்து பெறப்பட்டது.

"காட்டு வழிதனிலே - அண்ணே
கள்ளர் பயமிருந்தால் - எங்கள்
வீட்டுக் குலதெய்வம் - தம்பி
வீரம்மை காக்குமடா

நிறுத்து வண்டியென்றே - கள்வர்
நெருங்கிக் கேட்கையிலே - எங்கள்
கருத்த மாரியின் பேர் - சொன்னால்
காலனும் அஞ்சுமடா"

நாட்டார் வழக்காறுகள் எழுத்தறிவு பெறாத மக்களிடத்து அடிப்படைக் கல்விமுறையாகத் தொழிற்பட்டு வந்துள்ளன. வரன்முறைக் கல்வியிலே காணப்பெற்ற தேர்வுகள் போன்ற செயற்கையான கட்டமைப்புக்கள் அற்றநிலையிலே கல்வியை இயற்கையாகக் கையளிப்புச் செய்தல் நாட்டார் வழக்காறுகளின் சிறப்புப்பண்பு.

தாலாட்டுப் பாடல்கள் நாட்டார் வழக்காற்று உளவியலை உட்கொண்ட கல்விச் செயற்பாடுகளுடன் தொடர்புடையவை. எண்ணங்களை நிலைமாற்றுதல், மாற்றீடு காணுதல், படிமங்களாக மாற்றுதல், இணக்கல் (Simulation) நிலைப்படுத்தல், சுருக்கி ஒடுக்குதல், ஏற்றிக்காணுதல் (Projection) முதலிய செயற்பாடுகளால் அவை பின்னப்படுகின்றன. காதற்பாட்டுக்களிலும் அதே பண்புகளைக் காணலாம்.

தாலாட்டுப் பாடல்கள் குழந்தையை நடுநாயகப்படுத்தித் தமது உளவியல் நெருக்கீடுகளைப் பகிர்ந்து பரவல் செய்வன. எடுத்துக் காட்டாகப் பின்வரும் பாடலைக் காட்டலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாலும் அடுப்பிலே பாலகனும் தொட்டிலிலே
பாலகனைப் பெத்தெடுத்த பாண்டியரும் முள்ளுக்குத்த
வேலைக்குப் பிந்தினேன்னா வெரட்டிடுவார் கங்காணி
தூங்கடா என் மகனே எனதுயரைப் பாடிவாரேன்"

(சாரல் நாட்டன் திரட்டு)

தன்னிலை *(Self)* வெளிப்பாட்டைத் தூண்டுதல் கல்வியால் முன்னெடுக்கப்படுகின்ற ஒரு செயல்முறையாகும். அந்தச் செயற்பாட்டை நாட்டார் பாடல்கள் மிக நெகிழ்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதைக் காணலாம்.

நாட்டார் பாடல்கள் பல்வேறு சூழமைவுகளில் உருவாக்கம் பெற்றவை. பாதிக்கப்பட்டவர்கள் பாடுதல் பாதிக்கப்பட்டவர்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொம்மலாட்டமும் தோற்பாவை நிழற்கூத்தும்

பொம்மலாட்டமும் தோற்பாவை நிழற்கூத்தும் நாட்டார் வாழ்வில் ஆழ்ந்து தடம்பதித்த கலைகள். அவை மக்கள் சிந்தனையினதும் உளவியலினதும் வெளிப்பாடுகளாகவும், கல்விச் சாதனங்களாகவும் மேலெழுந்தன. பொம்மைகளை அடிப்படைகளாகக் கொண்ட மாயவித்தைகளும், சடங்குகளும் பிறிதொரு புறம் நாட்டார் பண்பாட்டில் வளர்ச்சியடைந்துள்ளன. பொம்மலாட்டமும், பொம்மைச் சடங்கும் வெவ்வேறு தளங்களிலே நிகழ்ந்தன.

பொம்மைகளைப் பயன்படுத்திக் கருத்துக்களைக் கையளித்தலும், முரண்பாடுகளை வெளிப்படுத்தலும், ஒழுக்கங்களை வலியுறுத்துதலும், உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளலும் பொம்மலாட்ட நிகழ்த்துக் கலையின் பரிமாணங்களாகவுள்ளன.

நாட்டார் மரபில் பொம்மை செய்வதற்கு களிமண், மரம், தானியக் கதிர்கள், துணி, தேங்காய், படர் கொடிகள், இயற்கை நார் வகைகள், முருகைக்கல், கிளிஞ்சல்கள், சங்கு, விலங்குகளின் தோல், பறவைகளின் இறக்கைகள் முதலியவை பயன்படுத்தப்பட்டன.

அதாவது சூழலிற் கிடைக்கப்பெறும் பொருள்களை எடுத்து மனக்கோலங்களுக்கு வடிவம் கொடுக்கும் உளவியற் செயற்பாடு கல்வியும் உளவியலும் கலந்த பெறுமானங்களைப் பெற்றிருந்தது.

சிறுவர்களுக்குப் பொம்மைகளை உறவாடக் கொடுத்தல் நீண்டகாலமாக நிகழ்ந்துவரும் ஓர் உளவியற் செயற்பாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரையின் மறைவிலே வெளிச்சத்தில் தோல் பாவையை ஆட்டி அவற்றின் நிழல் மூலம் கதை சொல்லல் ஆழ்மனத்தோடு உறவாடச் செய்யும் தொன்மையான ஒரு கலைநுட்பமாகும். அதனை நிழலாட்டம் என்றும் குறிப்பிடுவர். சில எழுத்தாளர்கள் (வானதீபன், 2009) அதனை ஏழைகளின் கலை என்றும் விபரிக்கின்றனர்.

நாட்டார் கலைகளைத் தமது திருவாசகப் பாடல்களிலே விதந்து குறிப்பிடும் மணிவாசகர் ஆனந்தமாலையில் (3) தோலின் பாவைக் கூத்தைத் தொடர்புபடுத்திக் காட்டியிருத்தல் நோக்குதற்குரியது.

மனித உணர்வுகளைப் பொம்மைகள் பிரதிநிதித்துவப் படுத்துவதால் பொம்மலாட்டங்கள் வழியான கருத்தாடல்கள், உணர்வு கலந்த கற்றற் செயற்பாடுகளுக்கு இட்டுச் செல்கின்றன.

பொம்மலாட்டமும், தோற்பாவை நிழற் கூத்தும் நாட்டார் தொழில்நுட்பவியலும் அழகியலும் கலந்த செயற்பாடுகளாகின்றன. பொம்மைகளை ஆட்டும் கயிறு கருமை நிறமுடையதாக இருக்கும். பின்திரையும் கருமையாகக் கட்டப்பட்டிருக்கும். அந்நிலையில் ஆட்டுவிக்கும் கயிறு பார்வையாளருக்குப் புலப்படாதிருக்கும். மேடையின் பின் புறமான திரைக்குப் பின் நின்று பொம்மைகளை ஆட்டுவிப்பர். அதில் கட்புல மாயை (Illusion) நுட்பங்கள் கலந்திருக்கும்.

ஆட்டுவிக்கும் தொழில்நுட்பத்தை அடியொற்றிப் பொம்மைகள் தலைப்பகுதி, உடற்பகுதி, கைகள், கால்கள் என வகுக்கப்பட்டு அவற்றை ஆடச் செய்வதற்குரிய வலுப்புள்ளியில் (Energy Point) கயிறு கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கும்.

கதைக்கேற்றவாறு பொம்மைகளை அசைவித்து இயக்கும் கயிறு "சுண்டிக் கயிறு" எனப்படும். சுண்டி இழுத்து இயக்குவதனால் அத்தகைய பெயர் இடப்பட்டது.

ஆட்டுவிப்பவரே பொம்மைகளுக்காகக் குரல் கொடுத்துப் பேசும் மரபு உண்டு. சில பொம்மலாட்டங்களில் ஆட்டுவிப்பவர் ஒருவராகவும் குரல் கொடுப்பவர் வேறொருவராகவும் இருப்பர். ஆடலும் பாடலும் நிகழ்த்தப்படும் வேளை அவற்றுக்குப் பொருத்தமான இசையும் இசைக் கருவிகளும் பயன்படுத்தப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டார் தொழில்நுட்பக் கல்வி அறிவும் அழகியற் கல்வியறிவும் பொம்மலாட்டத்தில் மிக நுட்பமான பிரயோகநிலையைப் பெற்றுள்ளன.

பொம்மைகளுக்கு உயிரூட்டல் *(Animation)* செய்யும் உபாயங்களை நாட்டுப் புறக்கலைஞர்கள் மிக நுட்பமாகப் பயன்படுத்தினர். பாத்திரங்கள் நிலைத்த நிலையில் நிற்காது அசைவுகளுடன் இணைந்த பாத்திரங்களாகவே இயக்கப்பட்டன. உரையாடல்களின்போது துலங்களைக் *(Response)* காட்டுவதற்கு பாத்திரங்களில் தலையசைவு இயக்கம் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் கீழும் சுண்டியிழுத்தல் பக்கவாட்டுக்களில் அசைத்தல் அசைவுகளுடன் ஒலிக்கோலங்களை இணைத்தல் முதலியவை மிக நுட்பமாக மேற்கொள்ளப்பட்டன.

பார்வையாளருக்கு மகிழ்வூட்டுவதற்கும், நகைச்சுவையோடு சிந்தனையை அருட்டி விடுவதற்கும் பொம்மலாட்டக் கலையில் கோமாளிப் பாத்திரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

நகைச்சுவையோடு உலக நிலவரங்களைத் திறனாய்வு செய்யும் கல்விச் செயற்பாடு கோமாளிகளினால் முன்னெடுக்கப்பட்டது. வகை மாதிரிக்கு கோமாளி தோன்றும் காட்சியென்று வருமாறு:

"நாடு விளைய வேணும்
நல்ல மழை பெய்ய வேணும்
பூமி விளைய வேணும்
பொன்னு மழை பெய்ய வேணும்"
"நாடும் பூமியும்
அப்ப இருந்த மாதிரி
இப்ப ருக்கா?
சொத்து ஆருக்கோ
சுகமும் ஆருக்கோ
பூமி விளைஞ் சென்ன
பொன்னு விளைஞ்சென்ன"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடித்துக் கொண்டு பேசும் நாடகக் கலையைக் காட்டிலும் நடிப்பை பொம்மைகள் வாயிலாக இயக்கிக் கொண்டு பேசுதலும், பேச்சை ஒன்றிணைத்தலும் மிகுந்த கடினமான பணிகள்.

பொம்மலாட்டத்தில் நிகழ்த்தப்பட்ட கதைகளே தோற்பாவை நிழற் கூத்திலும் நிகழ்த்தப்பட்டன. ஆயினும் தோற்பாவை நிழற்கூத்து அதற்குரிய தனித்துவமான கல்விச் செயற்பாடுகளுடன் இணைந்தது. அது நாட்டார் ஓவியக் கல்வியுடன் தொடர்புடைய காட்சி வடிவம். ஆட்டின் தோல்கள் காயவிடப்பட்டு அவை உலர்ந்த பின் அவற்றில் உருவங்கள் வெட்டியெடுக்கப்படுகின்றன. அவ்வாறான உருவங்களே நிழற் கூத்தில் பயன்படுத்தப்படும்.

ஒளி - நிழல் - உருவம் - உயிர்ப்பூட்டல் என்ற தொடர் நிலை அறிவுடன் தோற்பாவை நிழற் கூத்து இயக்கப்படுகிறது. நாட்டார் கண்டறிந்த "ஒளியின் கலை" என்று இது குறிப்பிடப்படும்.

பார்வையாளரும் இயக்குவோரும் திரையால் பிரித்து வைக்கப்படுகின்றனர். ஒளியும் நிழலும், குரலும் இசையும் பார்வையாளரின் ஈடுபாட்டுக்கு வலுவூட்டுகின்றன. கரிய நிழலும், இருண்ட சூழலும் பார்வையாளரை ஆழ்மனம் அல்லது நனவிலிமன உரையாடலுக்கு இட்டுச் செல்ல வல்லவை. அதுவே இந்தக் கலைக்குரிய உளவியற் பலமாகின்றது.

பொம்மலாட்டமும் தோற்பாவை நிழற் கூத்தும் இரண்டுவிதமாக அளிக்கை செய்யப்படுகின்றன. அவை:

1. ஒரு கதையை ஒரே இரவில் நிகழ்த்திக்காட்டுதல் - இது ஓரிரவு ஆட்டம் எனப்படும்.
2. பல நாட்களுக்குத் தொடர்ச்சியாக ஒரு கதையை நிகழ்த்திக் காட்டுதல். எடுத்துக்காட்டாக இராமாயணம் அவ்வாறு நிகழ்த்திக் காட்டப்படுகின்றது.

நவீன விளக்குகள் வருவதற்கு முன்னர் எண்ணெய் விளக்குகளே நிழல் உருவாக்கத்துக்குப் பயன்படுத்தப்பட்டன. புன்னைக்காய் எண்ணெய், தேங்காய் எண்ணெய், ஆமணக்கு எண்ணெய் ஆகியவை பயன்படுத்தப்பட்டன. வெளிச்சத்தை அதிகரிக்கும் பொருட்டு விளக்குக்குப் பல திரிகள் இடப்பட்டன. நவீன விளக்குகளான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெட்ராமாக்ஸ், மின்விளக்கு ஆகியவை பிற்காலத்திலே பயன்படுத்தப்பட்டன.

பாவைகளை இயக்குபவர் "பாவையாட்டிகள்" எனப்பட்டனர். அவர்கள் இரு கால்களிலும் கட்டைகளைக் கட்டியிருப்பர். தேவையேற்படும் பொழுது கட்டைகளை மோதி ஒலியெழுப்புவர். அவ்வாறே கையிலும் சதங்கைகளைக் கட்டியிருப்பர். பொருத்தமான காட்சிகளில் கைகளைக் குலுக்கி ஓசை எழுப்புவர்.

ஒளி ஊடுருவக்கூடிய ஊடகங்களில் உருவங்களைச் செய்து நிறவடிவிலான பாத்திரங்களைப் படைக்கும் கலை நுட்பத்தையும் கலைஞர்கள் பயன்படுத்தினர். ஆபரணங்களைக் காட்டுவதற்கு துளை நுட்பத்தைக் கண்டறிந்தனர். தொடர்ச்சியாகத் துளைகளை இட்டு அவற்றனூடாக ஒளியை எறிவு செய்கையில் அவை ஆபரணத் தோற்றத்தைக் கொடுத்தன.

பொருத்தமான நிலைகளில் பின்னணிக் குரலும் இசையும் நிறுத்தப்பட்டு நிசப்தமான நிலையிலே காட்சிகள் இயக்கப்படும். நுட்பம் பயன்படுத்தப்பட்டது. திடீரென்று ஒலி நிறுத்தப்படுகையில் பார்வையாளரின் கவனம் மேலும் கூர்ப்படையும். அந்த நிலையை "அடங்குதல்" என்று குறிப்பிடுவர்.

தோற்பாவை நிழற் கூத்திலே பயன்படுத்தப்படும் நகைச்சுவைப் பாத்திரங்கள் "உளுவத்தலையன்", "உச்சிக்குடும்பன்", "கேலிக்கூத்தன்" போன்ற பெயர்களால் அழைக்கப்படும். அவற்றின் வடிவமைப்பே நகைச்சுவையைத் தூண்டுவதாக அமையும்.

பாத்திரங்களோ தேர்களோ ஓடிச்செல்வதைக் காட்டுவதற்கு "வலம் - இடம் நுட்பம்" பயன்படுத்தப்படும். அதாவது திரையின் வலப்புறமுக ஓடச் செய்து பின் இடப்புறத்திலிருந்து ஓட்டம் தொடரும் முறையை அந்த நுட்பம் குறிப்பிடும்.

தொடக்க காலத்தில் புராணக் கதைகள், நீதிக்கதைகள், அரசர் கதைகள், வீரர்கள் கதைகள் என்பவை பொம்மலாட்டத்தினதும், தோற்பாவை நிழற் கூத்திலும் அளிக்கைப் பொருள்களாக அமைந்தன. கிறிஸ்தவ சமய வரவோடு வேதாகமக் கதைகளும் இடம்பெறலாயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து விடுதலைப் போராட்டம், சமூக நீதி தொடர்பான அளிக்கைகளும் வளர்ச்சியடையத் தொடங்கின.

தோற் பாவை நிழற் கூத்தும், பொம்மலாட்டமும் சிறுவரின் ஈடுபாட்டை ஈர்க்கத் தொடங்கியமையால், சிறுவருக்கான கதைகளும், பாடல்களும் அவற்றில் இடம்பெறத் தொடங்கின.

நாட்டுப்புறக் கலை சார்ந்த கல்விக் கையளிப்பில் அவற்றின் வகிபாகம் மிகவும் முக்கியமானது. அறிவு பூர்வமாகச் சிந்திக்க வைத்தல் கலார்பூர்வமாகச் சிந்திக்கச் செய்தல் சமூக இசைவாக்கத்தை முன்னெடுக்கச் செய்தல் முதலிய செயற்பாடுகளை அவை இங்கிதமாக வளர்த்தன.

அத்தகைய வளமான பின்புலத்தில் இருந்துதான் சிறுவருக்கான நவீன பொம்மை அரங்கு வளர்ச்சி கொள்ளத் தொடங்கியது. அதன் பிறிதொரு வளர்ச்சியாக மனிதரும் பொம்மைகளும் கலந்து நடிக்கும் "கலப்பு அரங்கு" முகிழ்த்தெழுந்தது. சிறுவருக்கான பொம்மை அரங்கு கற்றல் கற்பித்தலை மேற்கொள்வதற்குரிய ஏற்பாடாக அண்மைக் காலத்தில் மேலும் வளர்ச்சியுற்று வருகின்றது.

நாட்டார் பொம்மலாட்டக் கலையிலும் தோற்பாவை நிழற் கூத்திலும் கிராமத்துமக்களின் பேச்சு மொழியே பயன்படுத்தப்பட்டது. மேட்டுமையினர் அதனைக் "கொச்சைமொழி" என்றும் குறிப்பிட்டனர்.

சமூக அசமத்துவம் அல்லது சமூக ஏற்றத்தாழ்வுகள் கலைகளின் மொழியாட்சியிலும் செல்வாக்குச் செலுத்தி வருதலைக் காணலாம். செவ்வியல் இசையும் பரத நாட்டியமும் மேட்டுக்குடியினருக்குரிய கலைகளாகவே இயங்கி வருகின்றன. அவற்றில் பேச்சுமொழி பயன்படுத்தப்படுதல் இல்லை. செம்மொழியே பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் நாட்டார் கலைகளிலே பேச்சு மொழியே முன்னுரிமை பெற்றுநிற்கின்றது.

மொழிக்கும் சமூக அடுக்கமைவுக்கும் எப்பொழுதுமே தொடர்பு இருந்து கொண்டே வருகின்றது. அதன் நீட்சியாக மேட்டுமையினர் நாட்டாரின் பேச்சு மொழியை மட்டுமன்றி, பேச்சு மொழியுடன் இணைந்த நாட்டார் கலைகளையும் தரங்குறைந்ததென ஒதுக்கி விடுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்லுப்பாட்டும் இசைக்கதையுரைப்பும்

நாட்டார் வழக்காற்றியலில் இசையும் உரையும் கலந்த நிகழ்த்துகை வடிவங்களுள் "வில்லுப்பாட்டு", "இசைக் கதையுரைப்பு" ஆகிய இருவடிவங்களும் முக்கியமானவை. பாடலுடன் இணைந்த கதை சொல்வோர் இன்றும் கிராமங்களில் வாழ்ந்து வருகின்றனர். அந்த மரபின் வளர்ச்சியை அடியொற்றியே செவ்வியல் இசைபயின்றோர் "கதா காலேட்சபம்", "ஹரிகதா" "சிவகதை" முதலியவற்றை உருவாக்கினர். அவ்வாறு உருவாக்கிய வேளை நாட்டார் இசையையும், நாட்டுப் புறக்கதைகளையும் புறந்தள்ளியதுடன் அவை தரம் குறைந்தது என்ற போலி அடையாளத்தையும் சூட்டினர்.

கதைச்சுவையையும் கதை வழியான கருத்துக் கையளிப்பினையும் மக்கள் மனங்களிலே நிலைத்திருக்கச் செய்வதற்கு வில்லுப்பாட்டில் "இசைச்சுவை" எடுத்தாளப்படுகின்றது. அந்த நுட்பம் இசைக்கதை யுரைப்பிலும் மேற்கொள்ளப்படுகின்றது.

வில்லுப்பாட்டிலே மேற்கொள்ளப்படும் கூட்டிசையானது இசைச் சுகத்தையும் கருத்துக் கையளிப்பையும் வினைத்திறன் படுத்துகின்றது. வில்லுப்பாட்டில் இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுவதுபோல், இசை கலந்த கதை சொல்லிகளும் ஒற்றைத் தந்தி வீணையை நாட்டார் மரபிலே பயன்படுத்தினர்.

வில்லுப்பாட்டு மரபின் பிறிதொரு பரிமாணம் வினாவும் விடையும் வழியாகக் கதை சொல்லலாகும். கதையிலே சுவையை வரவழைப்பதற்கும், ஆவலைத் தூண்டுவதற்கும், கருத்தை மீள வலியுறுத்துவதற்கும் கதைப்போக்கிலே பொருத்தமான வினாக்கள் எழுப்பப்படும். கதையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெடுப்போர் விடைகளைக் கதைகளுடனும் பாத்திரங்களுடனும் தொடர்புபடுத்திச் சொல்வர்.

பின்புலம், கரு, பாத்திரங்கள், சந்தர்ப்பங்கள், வினைப்பாடு *(Action)* என்ற பொதுவான ஐந்து பண்புகளைக் கதைகள் கொண்டிருக்கும். நாடகப் பாங்குடன் கதை சொல்லல், வில்லுப்பாட்டிலும், இசைக்கதை மரபிலும் இடம்பெறும். தொய்வின்றிக் கதையை நகர்த்திச் செல்வதற்கு நாடகப் பாங்கும், இசைப்பாங்கும், திடீர்த் திருப்பங்களும் "கதையுள்ளே கதைகளும்" துணை செய்யும்.

கதையுள்ளே கதை என்பது "உபகதை" என்றும் குறிப்பிடப்படும். காவியப் பெருங் கதைகளில் உபகதைகள் பரவலாகத் தொடர்புபடுத்தப்பட்டிருக்கும்.

வில்லுப்பாட்டுக்கும், கதைக்கும்மி, உடுக்கடிப்பாட்டு, கணியான் கூத்து, இலாவணி, சிவகதை, ஹரிகதை முதலியவற்றுக்குமிடையே ஊடு தொடர்புகள் உண்டு.

வல்லரக்கன் கதை, சுடலை மாடாசாமிகதை, முத்துப்பாட்டன் கதை, சின்னணைஞ்சிகதை, சின்னத்தம்பிகதை போன்ற கதைகள் வில்லுப்பாட்டில் இடம்பெறும்.

கணியன் கூத்தில் ஆண்கள் இருவர் பெண் வேடமிட்டு ஆட, பாடகர் கதைப்பாடல் பாட, மகுடம் என்ற தோற்கருவி பாடலுக்கு ஏற்றவாறு இசைக்கப்படும். அது மகுடாட்டம் என்றும் சொல்லப்படும்.

உடுக்கடிப் பாடல்களில் பொன்னர் சங்கர் கதை, குன்னுடையாக் கவுண்டன் கதை, அண்ணமார் சுவாமி கதை, நல்லதங்காள் கதை முதலியவை சிறப்பாக நிகழ்த்தப்படும். உடுக்கடிப்பாடலின் செல்வாக்கு வில்லுப்பாட்டில் நிகழ்த்தும் ஊடு தலையீடு *(Inter Textuality)* சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

காமன் கூத்தும் தனித்துவமான இசையும் கதையும் கலந்த வடிவம். இலாவணியில் எரிந்த கட்சி, எரியாதகட்சி என்ற இருபிரிவாக காமன் எரிந்தான் எனவும் எரியவில்லை எனவும் வாதிடும் கதை சொல்லல் நிகழ்த்தப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லுப்பாட்டு உட்பட இசையும் கதையும் கலந்த வடிவங்கள் நிகழ்த்துகையை முதன்மையாகக் கொண்டவை. அவ்வாறான நிகழ்த்துகையில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. கலைமரபு, நிகழ்த்தப்படும் கிராமத்தின் பண்பாட்டுச் சூழல், பங்கு பற்றுவோரின் சாதியப் பின்புலம், சாதிய முரண்பாடுகள், வழிபாட்டு வழக்காறுகள், மேட்டுக்குடியினரது பொருண்மிய ஆதரவு முதலாம் பல காரணிகளுடன் நாட்டார் நிகழ்த்துக் கலைகள் தொடர்புடையவை.

வில்லுப்பாட்டும் ஏனைய இசைக் கதைப்பாடல்களும் வாய்மொழி வாயிலாகப் பாதுகாக்கப்பட்டும் கையளிக்கப்பட்டும் வருபவை. நிகழ்த்துவோரின் கலையாற்றலுக்கும், திறன்களுக்கும் ஏற்றவாறு அவற்றிலே புதுமைகள் புகுத்தப்படுதல் உண்டு.

இக்கலைகள் பொதுவாக சமூக அடுக்கமைவின் தாழ்மட்டங்களில் வாழ்ந்தோரால் நிகழ்த்தப்பட்டன. கல்வி வளர்ச்சியோடு மேட்டுக்குடியினரும் இக்கலைகளைத் தத்தெடுக்கத் தொடங்கினர்.

(அவ்வாறு தத்தெடுக்கப்பட்ட நிகழ்த்துக் கலைகளுள் ஒன்றாக விளங்குவது தேவரடியார் ஆடல் என்ற பரத நாட்டியம்)

மேட்டுக்குடியினர் இசைவழியான கதை சொல்லலைத் தத்தெடுத்த வேளை அதன் உருவநிலையிலும் உள்ளடக்க நிலையிலும் மாற்றங்களைச் செய்தனர். மரபு சாரா இசைக்கருவிகளையும் அதனுடன் இணைத்தனர்.

தமிழ்நாட்டு மரபுவழிக் கதைகளைக் கைவிட்டு, வேதாகமக்கதைகளையும், புராணக் கதைகளையும் நிகழ்த்துகைக்கு உட்படுத்தினர். வாய்மொழி வாயிலான கதையை ஏட்டில் எழுதும் செயற்பாடுகளுக்கும் இட்டுச் சென்றனர்.

வில்லுப் பாட்டும், இசைசார்ந்த கதையுரைப்புச் செயற்பாடுகளும் பண்பாட்டுத் தொடர்பாடலையும் பண்பாட்டுக் கையளிப்பையும் முன்னெடுத்தன. அவற்றின் ஒழுங்கமைப்பு பண்பாட்டுச் சூழலில் நிகழ்ந்த அகவயமான ஒழுங்கமைப்பாகும்.

நாட்டார் வாழ்க்கை முறையினையும், சிந்தனை முறைமையையும் நடத்தை முறைமையினையும் ஒழுங்குபடுத்தி அமைப்பதற்கு அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணை செய்தன. அந்நிலையில் அவை வலிமையான கல்விச் சாதனமாகவும் ஆற்றுப்படுத்தற் சாதனமாகவும் அமைந்தன.

சமூகமயமாக்கற் செயல்முறையைக் கிராமிய மட்டத்திலே வளர்த்தெடுப்பதற்கும் அவற்றின் வகிபாகம் முக்கியமானதாகும். நாட்டார் வழிபாடுகள் தொடர்பான அறிவுறுத்தலையும் வில்லுப்பாட்டு உள்ளிட்ட நாட்டார் கலை வடிவங்கள் மேற்கொண்டன.

கதையோடு இசை கலந்த அறிவூட்டலையும் மேற்கொள்வதால் நாட்டார் மரபில் அவை பொழுதுபோக்கினையும் கடந்த தேவைகளாக எழுகோலம் பெற்றுள்ளன. கதை என்பது ஒரு தேவையாக நாட்டார் மரபிலே முகிழ்ப்புக் கொள்கின்றது.

தமிழ் மரபிலே வளர்ச்சிகொண்ட வீர நிலைப்பண்புகளும், மாயவித்தைப் பண்புகளும் வில்லுப் பாட்டிலும் ஏனைய இசைக்கதைப் பாடல்களிலும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

மாயவித்தை என்பது நாட்டார் மரபிலே விரிந்த பொருள் கொண்டது. கலையாக்கங்கள் அனைத்தும் மாயவித்தைச் செயற் பாடுகளாகவே கொள்ளப்படுகின்றன. புத்தாக்கங்களும் மாயவித்தையின் நீட்சிகளாகவே கருதப்படுகின்றன. கிராமத்துக்கதை சொல்லிகள் மாயவித்தைக்காரர்களாகின்றனர்.

வில்லுப்பாட்டு அதற்குரிய தனித்துவமான எடுத்துரைப்பு முறைமையைக் கொண்டது. கதைசொல்வோர். வினாவெழுப்புவோர், "ஆமா" போடுவோர், இசைக்கருவிகளை இசைப்போர் ஆகியோர் எடுத்துரைப்பிலே பங்கு கொள்கின்றனர். அவர்களது இடைவினைக ளுக்கிடையே சமநிலையைப் பராமரித்தல் அந்தக் கலைக்குரிய தனித்தும் பாடுவோருக்கிடையே குரல் சமநிலையை ஏற்படுத்துவதற்கு ஆதார சுருதி துணை செய்தது. ஆதார சுருதி நாட்டார் மரபில் "அடிக்குரல்" என்று அழைக்கப்பட்டது.

இந்திய விடுதலைப் போராட்ட காலத்திலே வில்லுப்பாட்டு சமூகச் சிக்கல்களை எடுத்தியம்புவதற்கு ஊடகமாக வளர்ச்சி கொண்டது. பின்வரும் உள்ளடக்கப் பண்புகள் அவற்றில் இடம்பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. சாதி அடக்குமுறை

2. கலப்பு மணமும் அதன் விளைவுகளும்

3. தந்தைவழிக் கூட்டுக் குடும்ப அமைப்பிலே பெண்கள் படும் துயரங்கள்

4. நிலவுடைமையாளரின் சுரண்டலுக்கு உட்பட்ட விவசாயி

5. ஆங்கிலத் துரைமாரின் மேலாதிக்கமும், எதிர்ப்பியக்க வீரச்செயல்களும்

மேற்கூறியவற்றின் தொடர்ச்சியாக அரசியற் பரப்புரைக்குரிய கருவியாக வில்லுப்பாட்டு வளர்ச்சியுறத் தொடங்கியது. திராவிட இயக்கத்தின் கொள்கைத் திட்டங்களைக் கிராமங்களுக்கு எடுத்துச் செல்வதற்கு அது பெருமளவிலே துணை செய்தது.

இலங்கையிலே தமிழரசுக் கட்சியின் கொள்கைகளை எடுத்துக் கூறுவதற்கு வடிவேலு என்ற வில்லிசைக் கலைஞர் தமது வில்லுப்பாட்டுக் கலைச் செயலமைப்பை வடிவமைத்துச் செயற்படுத்தினார்.

தமிழகத்து சமூகக்கதை கூறலையும் பாடல்களையும் பேராசிரியர் வானமாமலை ஐந்து வகையாகப் பிரித்து நோக்குகின்றார். (1969:110-11)

1. கலப்பு மணமும் அவற்றின் துன்பியலும்: முத்துப்பாட்டன்கதை, மதுரைவீரன்கதை, சின்னநாட்டான் கதை

2. சாதியக் கொடுமைகள் தழுவியவை: சின்னத்தம்பிகதை

3. தாய்வழி, தந்தைவழிச் சமூகங்களிடையே மண உறவு தொடர்பாக நிகழும் சண்டைகள் : தோட்டுக்காரி அம்மன் கதை, வெங்கல ராசன் கதை

4. பெண்களுக்குரிய சொத்துரிமை மறுப்பும் துன்பியல் விளைவுகளும் தொடர்பான கதை: நல்லதங்காள் கதை

5. சமயக்கட்டுப்பாடுகளைக் கடந்த மனிதாபிமானக் கதை: கௌதல மாடன் கதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைகலந்த கதை சொல்வோரும், வில்லுப்பாட்டு நிகழ்த்துகையை மேற்கொள்வோரும் சமூகப் பிரச்சினைகளை அழகியல் வெளிக்குக் கொண்டுவந்து கலை நயத்துடன் அவற்றைக் கையளிக்கின்றனர். கலைஞர்களின் கற்பனையும் அவற்றுக்குரிய கலைப்பாங்கான மொழியும் இசைக்கோல வடிவமைப்பும் சமூகப் பிரச்சினைகளை அழகியல் வெளிக்கு நகர்த்திச் சென்றன. அவற்றோடு கலைஞருக்குரிய சமூகக் கருத்தியலும் கலைக்குள்ளே கலையாக ஒன்றிணைந்தது.

சமூக வளர்ச்சியின் போது அளிக்கை உள்ளடக்கத்திலும், நிகழுமிடத்திலும் நிகழ்த்துவோரிடத்திலும், பங்குகொள்வோரிடத்தும் மாற்றங்கள் நிகழத் தொடங்கின.

இசை கலந்த கதையுரைக்கும் மரபு கதாகாலேட்சபம், சிவகதை, ஹரிகதை முதலாம் வடிவங்களாக மேட்டுக்குடியினர் வசப்பட்டது. நாட்டார் இசைக்குப் பதிலாக கர்நாடக இசை அவற்றிலே புகுத்தப்பட்டது. நாட்டார் கதைகளுக்குப் பதிலாகப் புராணக்கதைகள் பேசும் பொருளாக மாற்றம் பெற்றது. மேலைப்புல இசைக்கருவியாகிய வயலினும் அளிக்கைக்குப் பயன்படுத்தப்படும் நிலை தோற்றம் பெற்றது. கர்நாடக சங்கீதத்தின் கச்சேரி அமைப்பும் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியது. தமிழ்ப் பாடல்களுக்குப் பதிலாக வடமொழி மற்றும் தெலுங்குக் கீர்த்தனைகளும், சுலோகங்களும் உள்ளடக்கப்பட்டன.

வேதாகம வழிபாடு நிகழ்த்தப்படும் ஆலயங்களே அவற்றின் நிகழ்த்துகை இடமாக்கப்பட்டது. பொது இடங்களிலே அவற்றை நிகழ்த்துதல் தவிர்க்கப்பட்டது.

அவற்றுக்கு மாறாக வில்லுப்பாட்டுக் கலையானது முன்னைய நாட்டார் கலை மரபுகளைத் தக்கவைத்துக் கொண்டு செயற்படும் நிகழ்த்துகைக் கலையாக நீட்சி கொண்டுள்ளது. தமிழ்ப்பாடல்களும் நாட்டார் கதைகளும் தொடர்ந்து எடுத்தாளப்பட்டு வருகின்றன.

நாட்டார் வழிபாட்டிடங்களிலும், பொதுவிடங்களிலும், அரசியல் அது நிகழ்த்துகை செய்யப்பட்டு வருகின்றது.

சமூக மேனிலையாக்கம் இசைக்கதை கூறும் வடிவத்தில் ஏற்பட்டமை போன்று, வில்லுப்பாட்டு வடிவத்தில் ஏற்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் செவ்வியல் இசை வடிவங்களும், செவ்வியல் இலக்கியங்களும் நாட்டார் வழக்காற்றியலைத் தளமாகக் கொண்டே எழுகோலம் பெற்றன. ஆனால் அவற்றின் தோற்றம் மறைப்புக்கு உட்படுத்தப்பட்டது.

சமூக அடுக்கமைவின் வளர்ச்சியில் நாட்டார் கலைகள் அடித்தளத்து மக்களோடும், செவ்வியற் கலைகள் உயர்மட்டத்து மேட்டுக்குடியினரோடும் இணைப்புக் கொண்டன. அந்த நிலை சமூக முரண்பாடாக மட்டுமன்றி, கலைப் பெறுமானங்கள் தொடர்பான முரண்பாடாகவும் வளர்ச்சி கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதைகள் வாயிலாக அறிவேற்றம் செய்தல்

*நுண்மதித் தூண்டலுக்குரிய குறுகிய வடிவங்களாக இருக்கும் விடுகதைகள் நாட்டார் அறிவுப்பரவலில் சிறப்பார்ந்த இடத்தை வகிக்கின்றன. விடுகதைகள் (Riddles) பலவாறு பாகுபடுத்தி விளக்கப்படும் நிலையில் அவற்றின் கல்விப்பயன்களும் விரித்து நோக்கப்படுகின்றன.*

*அவற்றின் பாகுபாடு வருமாறு:*

*அ. விளக்க வகைகள்*

*ஆ. நகைப்பு வகைகள்*

*இ. கதையமைப்பு வகைகள்*

*ஈ. உரையாடல் வகைகள்*

*உ. சொல் விளையாட்டுக்கள்*

*ஊ. அறிவூட்டும் வகைகள்*

*எ. புதிர்கள் (Puzzles)*

*மொழிகளை வளஞ் செய்யும் வடிவங்கள் என்று விடுகதைகள் குறிப்பிடப்படும். அதன் காரணமாக இலக்கண ஆசிரியரின் கவனத்தை அவை ஈர்த்தன. தொல்காப்பியத்தில் விடுகதை என்பது "பிசி" என்ற சொல்லினால் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*சிறுவரின் நுண்மதியாற்றலை வளர்க்கவும், அறிவு மற்றும் அனுபவங்களைக் கற்றுக்கொடுக்கவும் விடுகதைகள் உருவாக்கம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றன. ஒப்புமைப் பண்புடனும் உருவகப் பண்புடனும் அறிவைப் பரப்பும் வடிவில் அமைந்த விடுகதைகள் வியப்பும் விருப்பும் கலந்த கற்பித்தலை முன்னெடுப்பதற்குத் துணை செய்கின்றன.

விடுகதையில் அமைந்துள்ள உருவகப் பண்பு மாணவரின் சிந்திக்கும் திறனை வீரியப்படுத்துகின்றது. எண்ணக்கருக்களின் ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டறியும் திறனை வளர்க்கும் மகிழ்நிலைக் கற்றலையும் உருவாக்கிக் கொடுக்கின்றது.

கற்பித்தலில் விடுகதை என்பதன் முக்கியத்துவம் நாட்டார் மரபுகளில் இருந்து எழுகோலம் பெற்றது. தொன்மையான கல்வியியலாளர் அரிஸ்ரேட்டில் அதன் முக்கியத்துவத்தை உருவகத்துக்கும் விடுகதைக்குமுள்ள நெருங்கிய உறவால் வெளிப்படுத்தினார்.

விடுகதை வாயிலாக அறிவை மகிழ்வுடன் பரவல் செய்யும் மொழிக்கருவிகளாக உவமையும் உருவகமும் அமைகின்றன. வினாவும் - விடையும் என்ற மரபுவழிக் கற்பித்தல் முறையின் நீட்சியாகவே விடுகதைகள் உருவாக்கம் பெற்றன. குறித்தபொருள் உவமை வாயிலாகவோ, உருவகத்தின் வாயிலாகவோ விடுகதையில் வினாவாக அமைக்கப்படுகின்றது. அவற்றை அடியொற்றிய விபரிப்பிலிருந்து விடைதேடப்படும்.

ஒத்த பண்புகளைக் காணும் எண்ணக்கருவாக்கச் செயற்பாட்டு முன்னெடுக்கப்படுகின்றது. பொருத்தமான விடையைக் கண்டறியும் பொருள் கோடலை அடிப்படையாகக் கொண்ட மகிழ்ச்சிதரும் அறிகைச் செயற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.

எளிமையான விடுகதையில் இருந்து சிக்கலானவை வரை அதன் வழியான கற்றல் கற்பித்தல் வீச்சு நீண்டு செல்லும்.

எளிமையான விடுதலை ஒன்றை முதலில் நோக்கலாம்.

*அ. வெள்ளைக்காரனுக்கு மஞ்சள் - ஆடை : அது என்ன?*

விடை :வாழைப்பழம் இங்கு வாழைப்பழத்தின் உட்பகுதி வெள்ளைக்காரனுக்கு உருவகப்படுத்தப்பட்டுள்ளது. வாழைப் பழத்தோல் ஆடைக்கு உருவகப்படுத்தப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவகமும், உவமையும் இன்றி விடுகதைகள் இல்லையென்றே கூறலாம். சிறுவர் விடையைக் கண்டறிவதற்கு வசதியாக அங்கே "அறிகுறிப்பும் (Clue) கொடுக்கப்பட்டுள்ளது. அவன் யார் என்று கேட்காது அது என்ன என்று அஃறிணைப் பொருளைச் சுட்டிக் காட்டுதல் ஓர் அறிகுறிப்பு.

பொருந்தும் பண்பு பொருந்தாத பண்பு என்ற அடிப்படைகளிலும் எளிமையான விடுகதைகள் ஆக்கப்படுகின்றன. அதற்கு ஓர் எடுத்துக்காட்டு வருமாறு:

ஆ. *வெண்பட்டுச் சேலை, கட்ட முடியாது, அது என்ன?*

விடை: முகில்/ வெண்முகில் பண்பு. கட்ட முடியாது என்பது பொருந்தாத பண்பு... பொருந்தும் பண்பையும் பொருந்தாத பண்பையும் ஒப்பு நோக்கி இந்த விடுகதை மாணவரைச் சிந்திக்கச் செய்கின்றது.

சிக்கலான விடுகதைகள் தொகுப்பு நிலையில் அமைந்திருக்கும் வகை மாதிரிக்கு ஓர் எடுத்துக்காட்டு வருமாறு:

இ. *வெய்யிலுக்கு நிழல் கொடுக்கும்,*
*மழைக்குக் குடை பிடிக்கும்,*
*காற்றுக்கு வேலிகட்டும்,*
*கள்வனுக்கு அஞ்சாது,*
*மரம் போல் வளராது,*

*அது என்ன?*

விடை : வீடு

பல விடைகளை வினவி நிற்கும் சிக்கலான விடுகதைகளும் உள்ளன. இதற்கு ஓர் எடுத்துக்காட்டு வருமாறு:

ஈ. *பொன்னொச்சிப் பூ பரவியிருக்கு*
*பொறுக்க ஆருமில்லை*
*மகாராணி எழுந்து வாறார் இருப்பதற்குக் கதிரையில்லை*
*கம்பளத்தை விரிக்கக் காற்றோடு சுருளுது*
*அவை என்ன?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு விடைகளாக, நட்சத்திரம், நிலா, முகில் ஆகியவை அமைந்துள்ளன. இது பன்மைக் கூறுகளைக் கொண்ட விடுகதை.

இருமைக் கூறுகளைக் கொண்ட விடுகதைகளும் வழக்கில் உள்ளன. ஓர் எடுத்துக்காட்டு:

உ. *பவளக் குண்டைக் கடிக்க என்ன?*

ஓர் ஒற்றைப் பல்லு இடுக்கி - அவை அதற்குரிய இரண்டு விடைகளாகப் பாக்கும், பாக்கு வெட்டியும், அமையும். நகைச்சுவை சார்ந்தவை, கதை தழுவியவை, உரையாடல் வகைப்பட்டவை, கணக்கு வகைப்பட்டவை என்றவாறும் விடுகதைகள் கட்டமைப்புச் செய்யப்படுகின்றன.

நகைச்சுவை விடுகதைக்கு ஓர் எடுத்துக்காட்டு:

ஊ. *விலைகொடுத்து வாங்க முடியாத பாய் எந்தப் பாய்?*

விடை: கோப்பாய் (அது ஓர் ஊரைக் குறிக்கும்)

"விக்கிரமாதித்தன் கதை" என்பது கதைவடிவில் அமைந்த விடுகதையாகும். அதில் வேதாளம் செல்லும் புதிர்களுக்கு விக்கிரமாதித்தன் விடை சொல்லி வென்று விடுகின்றான்.

அரச அவைகளிலே ஒருவனுக்குத் தண்டனை வழங்குவதற்குப் புதிர்கள் அல்லது விடுகதைகள் கேட்கப்படுவது உண்டு. நுண்மதி மிக்கோர் அவற்றுக்கு விடை சொல்லித் தண்டனை பெறாது தம்மைக்காப்பாற்றிக் கொள்வர்.

கணக்கு விடுகதைகள் நுண்மதி ஆற்றலுடன் தொடர்புடையவை. முகநூல்களில் இவ்வாறான விடுகதைகள் பரவலாகக் கையளிக்கப்பட்டும் வருகின்றன.

கிராமிய வழக்கில் கணக்கு விடுகதைகளுக்கு விரைந்து பதில் சொல்ல வேண்டும் என்றவிதி உண்டு. நுண்மதியாற்றலில் விரைந்து தொழிற்படலும் ஒரு பரிமாணமாகக் கொள்ளப்படுதல் குறிப்பிடத்தக்கது.

கணக்கு விடுகதைக்கு ஓர் எடுத்துக்காட்டு வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ. ஒரு மரத்தில் பழங்கள் பழுத்துக்கிடக்கின்றன. குருவிகள் வந்து அவற்றின் மேல் இருக்கின்றன. ஒரு பழத்துக்கு இரண்டு குருவிகள் அமர்ந்தால் ஒரு பழம் மிஞ்சும் ஒரு பழத்துக்கு ஒரு குருவி அமர்ந்தால் ஒரு குருவி மிஞ்சும் - பழங்கள் எத்தனை? குருவிகள் எத்தனை?

விடை: பழம் மூன்று

குருவிகள் நான்கு

மொழி நுட்பங்களோடு இணைந்த விடுகதைகளும் உள்ளன. சொல்லையும் பொருளையும் ஆழ்ந்து நோக்கியே அவற்றுக்கு விடை கூற வேண்டும். வகை மாதிரிக்கு ஓர் எடுத்துக்காட்டு:

ஏ. ஒரு பேருந்து ஓட்டி, அனுமதிப்பத்திரம் இன்றி வருகிறார். எதிரே நின்ற பொலிஸ்காரர் அவரைக் குற்றத்துக்குப் பிடிக்கவில்லை ஏன்?

விடை: பேருந்து ஓட்டி வண்டியை ஓட்டிக் கொண்டு வரவில்லை. தானாக வருகின்றார்.

பாட்டு வடிவில் அமைந்த விடுகதை, பாவோடு இணைந்த கற்பனை வளத்தையும், நுண்மதியையும் ஒரே நேரத்தில் வளர்க்கக் கூடிய வடிவமைப்பைக் கொண்டுள்ளது. அதற்கு ஓர் எடுத்துக்காட்டு:

ஐ. அள்ள அள்ளக் கொட்டுவார்

அகலக் கொள்ளும் வேளை

ஊசிக் காலூன்றி

உலகமெல்லாம் கொட்டுவார் கொட்டுவார்

அதறக்குரிய விடை : மழை

ஒவ்வொரு மொழியிலும் அந்த அந்த மொழிகளின் பண்பாட்டுச் சூழலுக்கு ஏற்றவாறு விடுகதைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. சிந்திக்கும் திறனுடன் சோர்வு நிலையை அகற்றும் ஆற்றலும் விடுகதைகளுக்கு உண்டு. அவ்வகையில் ஆங்கிலச் சூழலில் உருவாக்கம் பெற்ற சில விடுகதைகளைப் பார்க்கலாம்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1. உணவை எடுப்பார் ஆனால் சாப்பிடமாட்டார். அவர் யார்?*

விடை: கரண்டி

*2. புத்தகத்தை வைத்திருப்பார் ஆனால் வாசிக்க மாட்டார். அவர் யார்?*

விடை: புத்தக அலுமாரி

*3. ஆங்கில அகராதியில் மிக நீண்ட எழுத்து எது?*

விடை -மைல் *(Mile)*

தருக்க வழியானவை, கணித வழியானவை. நகைச்சுவை சார்ந்தவை சிறுவருக்குரியவை, தொழில் முறை சார்ந்தவை பண்பாடுகளுக்குரியவை, எளிமையானவை சிக்கலானவை என்று ஆங்கிலக் கல்வி மரபில் விடுகதைகள் பாகுபடுத்திக் கூறப்படுகின்றன.

விடுகதைகள் கல்விச் சாதனங்களாக மட்டுமன்றி உளவியற் சாதனங்களாகவும் பயன்படுகின்றன. மகிழ்நிலைக் கற்பித்தலை மேற்கொள்ளும் ஓர் ஆசிரியர் மாணவரிடத்து மகிழ்ச்சியைத் தோற்றுவித்துக் கற்பித்தலை முன்னெடுப்பதற்கு விடுகதைகளைப் பயன்படுத்தலாம்.

நாட்டார் வழக்காற்றியலில் விடுகதைகள் முதன்மை இடங்களைப் பெறுகின்றன. எவ்வகை நுட்பங்களோடு அவர்கள் மொழியைப் பிரயோக நிலைக்குக் கொண்டு சென்றார்கள் என்பதை விடுகதைகள் வாயிலாக அறிந்து கொள்ளலாம். மொழி தொடர்பான நாட்டாரின் புலக்காட்சியில் தோற்றம்பெற்ற விநோதமான முகிழ்ப்பே விடுகதையாகின்றது.

விடுகதைகள் மகிழ்வூட்டலோடு மட்டும் நின்றுவிடவில்லை. அறிவூட்டல் என்ற பரிமாணத்தோடும் எழுகோலம் பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசைக் கருவிகள் வாயிலான அறிவுத் தொடர்பாடல்

தொன்மையான தொடர்பாடல் முறைமையோடு இணைந்து வளர்ச்சிகொள்ளத் தொடங்கிய இசைக்கருவிகள் அறிவுக் கையளிப்பிலும் அழகியல் மற்றும் மனவெழுச்சிக் கையளிப்புகளிலும் முதன்மைக் கூறுகளாக விளங்குகின்றன. நாட்டார் சடங்குகளில் அவை மேலும் செறிவுடன் இயக்கப்படுகின்றன.

தமிழ்ச் சூழலில் முதலிலே தோற்றம் பெற்ற இசைக் கருவி "கனக் கருவி" அல்லது களிக்கருவி எனப்படும். கிடைக்கும் பொருட்களைக் கையில் எடுத்து ஒன்றுடன் மற்றையதை மோதி ஒலி எழுப்புவது கனக்கருவி எனப்பட்டது. தொடர்பாடலோடும் மனவெழுச்சிகளோடும் அவ்வகைத் தட்டற் கருவிகள் தொடர்ப்புபட்டிருந்தன. ஒலி ஒழுங்கில் தட்டப்பட்ட வேளை அவை இசைக் கருவிகள் என்ற ஏற்றத்தைப் பெற்றன.

வாழ்க்கைச் சூழலில் இருந்தும் தொழில் முறைகளில் இருந்தும் தொழிற்கருவிகள் செய்யும் அனுபவங்களை அடியொற்றி இசைக் கருவிகள் செய்யும் முயற்சிகள் மேலெழுந்தன.

தமிழரின் தொன்மையான நூல்களுள் ஒன்றாகிய பஞ்ச மரபு கூறும் இசைமரபில் இசைக் கருவிகள் நான்கு வகையாக வகைப்படுத்தப பட்டுள்ளன.

"சொல்லிய நற்றோல் துளைதுய்ய மென்னரம்பு கல்வி மிகுகஞ்சம்"

என்றவாறு இசைக்கருவிகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதாவது தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி என்று நான்கு வகை குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேட்டுவ வாழ்க்கைப் பின்புலத்திலே தான் மேற்குறித்த கருவிகள் உருவாக்கம் பெறத் தொடங்கின. மிருகங்களின் தோலில் இருந்து பறை, தப்பட்டடை, முழவு முதலாம் கருவிகள் செய்யப்பட்டன. செய்திகளைப் பரிமாற்றம் செய்யும் தொடர்பாடலோடு அக்கருவிகள் வளர்ச்சியடைந்தன.

ஒரு பக்க முரசு, இருபக்க முரசு, மூன்று பக்கமுரசு என்றவகையில் முரசின் வளர்ச்சி நீட்சி கொண்டது. ஒரு பக்க முரசின் ஒலிப்பு விலங்குகளின் ஒலிப்பைக் குறித்தது. இருபக்க முரசில் ஒருபக்கம் ஆணின் ஒலிப்பையும் மறுபக்கம் பெண்ணின் ஒலிப்பையும் குறித்தது. இதன் அடிப்படையிலேதான் தண்ணுமை, தவில் முதலாம் கருவிகள் வளர்ச்சியடைந்தன. மூன்று பக்க முரசில் தாய், தந்தை, சேய் என்ற முத்தரப்பினர் இடம்பெற்றனர்.

ஆபிரிக்கப் பழங்குடியினரிடத்து ஆண்முழவு, பெண்முழவு என்ற இருவகைகள் வழக்கில் உள்ளன. ஆண்முழவை இசைக்கும் பொழுது ஆது ஆண்பேசுவதாகவும், பெண் முழவை இயக்கும் பொழுது அது பெண்பேசுவதாகவும் அமையும்.

தோற்கருவிகள் தாள இசைக் கருவிகள் என்றும் குறிப்பிடப்படும் கணித வளர்ச்சிக்கும் தாள இசைக்கருவிகளின் வளர்ச்சிக்கும் நேரிய தொடர்பு உண்டு. எண்ணளவைகளை ஒலிக்கணக்கிலே எடுத்துக்கூறுவதற்குத் தோற்கருவிகள் பயன்படுத்தப்பட்டன.

ஒரெண் இடைவெளியில் தட்டுதல், ஈரெண் இடைவெளியில் தட்டுதல் என்றவாறு எண்ணலும், தட்டலும் தோற்கருவிகளின் இசைப்பில் மேற்கொள்ளப்பட்டன. எண்களுக்கும் சொற்களுக்கும் இசைக்குமுள்ள தொடர்புகளைத் தோற்கருவிகள் செவ்விதாக மேற்கொண்டன.

புவியியற் சூழலுக்கும் பண்பாட்டுச் சூழலுக்கும் ஏற்றவாறு பலவிதமான தோற்கருவிகள் தமிழ்ச் சூழலிலே உருவாக்கப்பெற்றன.

பேரிகை, உடுக்கை, இடக்கை, படகம், மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடம், தக்கை, பறை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தாவில், தடாரி, இயந்திரி, முழவு, கண்விடு, தூம்பு, துடுமை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறை, சிறுபறை, அடக்கம், ஆசில், தகுணிச்சம், விரலேறு, பாகம், உபாங்கி, துடி, தட்டி, கிடுக்கிட்டி, குடமுழா என்றவாறு நாட்டார் தோற்கருவிகள் பலவாறு அமைந்திருந்தன.

தோற்கருவிகளுக்கும் கால அளவுக்குமுள்ள தொடர்புகள் ஆடலுக்கும் கூத்துக்கும் வலிமையான இணைப்பை ஏற்படுத்தின.

துணைக் கருவிகள், காற்றுக் கருவிகள் எனவும் அழைக்கப்படும். துளை நிரம்பிய மரக்கிளைகளில் இருந்தும் மூங்கில் செடிகளில் இருந்தும் மேற்கிளம்பிய ஓசையைக் கண்டறிந்த வேடரும் ஆயரும் அவற்றை இசைக் கருவிகளாக்கினர். தமிழர்களிடத்து வழங்கிய துளைக்கருவிகள் பன்னிரண்டு என்று "பரதசங்கிரகம்" என்ற நூல் குறிப்பிட்டுள்ளது.

வேட்டுவ வாழ்க்கையைக் காட்டிலும் ஆயர் வாழ்க்கையில் ஒப்பீட்டளவில் கூடுதலான ஓய்வு நேரம் கிடைக்கப் பெற்றது. குழல் என்ற துளைக் கருவியின் பயன்பாட்டை அவர்களே விரிவாக முன்னெடுத்தனர். ஆயர் வாழ்க்கைப் பின்புலத்திலிருந்தே பாணர், பாடினி முதலாம் இசை மரபினர் வளர்ச்சி கொண்டனர்.

தொன்மையான நாட்டார் வழக்கில் ஒலியை அலகிடுதலில் துறைக்கருவிகள் முதன்மையான பங்கினை வகித்தன. அதனை அடியொற்றியே மூங்கில் குழாய்களுக்குத் துளைகள் இடப்பட்டன. அவை ஒலித்துளைகள் எனப்பட்டன. இசைக்குரிய சுர வரிசைகள் அந்த அனுபவத்திலிருந்தே வடிவமைக்கப்பட்டன.

ஒலியை அலகிடும் அனுபவங்களில் இருந்தே நரம்புக் கருவியாகிய யாழ் தோற்றம் பெற்றது. நரப்பின் நீட்சியும் தடிப்பமும் ஒலி உருவாக்கலில் மேற்கொள்ளும் பங்கு பற்றிய ஒலியியற் கல்வியறிவை இசைக் கருவிகள் வழங்கின.

தமிழர் கண்டறிந்த துளைக் கருவிகளைப் பன்னிரண்டாக பரத சங்கிரகம் (ப.6T) குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்குரிய பதிவு வருமாறு.

"பூரிகை நாககரம் பொற்சின்னம் எக்காளை
தாரை நவரிசங்கு வாய்வீணை - வீரியஞ்சேர்
கொம்பு தித்தி காளை குழலுடன் ஈராறும்
என்பார் துளைக் கருவி யென்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் என்பது தமிழரின் வாழ்க்கைச் சூழலிலே தோற்றம் பெற்ற தொன்மையான இசைக்கருவி, குறிஞ்சியாழ், முல்லையாழ் முதலியவை நிலத்தின் இயல்பை அடியொற்றித் தோற்றம் பெற்றவை.

வில் யாழ் என்பது வேட்டுவ வாழ்க்கை நிலையில் இருந்து தோற்றம் பெற்றது. வில்லின் நாணில் இருந்து தோற்றம் பெற்ற அதிர்வுகளின் உற்றுநோக்கல் வில்யாழின் தோற்றத்துக்குரிய அனுபவப் பாய்ச்சலாயிற்று. வில்லின் வளைவுகளுக்கு ஏற்றவாறு நரம்புகளின் நீட்சி மாறுபட்டிருந்தமையால் ஒலிப்பிலும் வேறுபாடுகள் ஏற்பட்டன. அந்த அனுபவங்கள் சுரங்களைத் தொகுத்துப் பண்களை உருவாக்கும் பிற்காலச் செயற்பாடுகளுக்கு அடிப்படையாக அமைந்தன.

நரம்புகளின் எண்ணிக்கைக்கு என்றவாறு யாழுக்குப் பெயரிடும் மரபு தமிழகத்தில் நிலவியது. இருபத்தொரு நரம்புகளைக் கொண்டது. "பேரியாழ்" எனப்பட்டது. பெரிய யாழே பேரியாழ்.பத்தொன்பது நரம்புகளைக் கொண்டது "மகர யாழ்". பதின்நான்கு நரம்புகளைக் கொண்டது "சகோட யாழ்". ஏழு நரம்புகளைக் கொண்டது. "செங்கோட்டு யாழ்".

நரம்புகளின் எண்ணிக்கைக்கும் ஒலி எழுப்பலுக்குமுள்ள தொடர்புகளை அடியொற்றிய தொன்மக் கதைகளும் தமிழில் தோற்றம் பெற்றன. அவ்வகையில் ஆயிரம் நரம்புகளைக் கொண்டது ஆதியாழ் என்றும் "நாரத யாழ்" என்று அழைக்கப்பட்டது.

இசைக் கருவிகளை இசைத்தல் "கொட்டுதல்" என்றே நாட்டார் வழக்ககிலே குறிப்பிடப்பட்டது. மேட்டுக்குடியினரது வழக்கிலேதான் "வாசித்தல்" என்று அச்செயல் குறிப்பிடப்படுகின்றது.

வரலாற்று நீட்சியில் சமூகத்தில் நிகழ்ந்த அடுக்கமைப்பு முறைமை இசைக் கருவிகளின் பயன்பாட்டிலும் ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தியது. தமிழகத்துக்கு வீணையின் வரவோடு சமூக ஏற்றத் தாழ்வுகளுக்கும் இசைக்கருவிகளுக்குமுள்ள தொடர்புகள் மேலும் துலக்கமாயின.

வீணை மேலோருக்குரிய கருவியாகவும், யாழும், குழலும், முழவும் சமூகத்தின் விளிம்பு நிலையினருக்குரிய கருவிகளாகவும் மாற்றம் பெற்றன. சமூக அடுக்கமைவின் தாழ்நிலைகளில் வாழ்ந்தோரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றை மீட்டினர். பாணர் வாழ்வும் தாழ் அடுக்கினருக்குரிய தங்கி வாழும் வாழ்வாயிற்று.

புலவர்கள் சமூக அடுக்கமைவில் உயர் நிலையிலும், பாணர் தாழ்ந்த நிலையிலும் வாழ்வோராயினார். அதன் நீட்சியாகவே பிற்காலத்தில் நாட்டார் இசை, செவ்வியல் இசை என்ற பாகுபாடுகள் சமூக அடுக்கமைவோடு நேரிய இணைப்புக் கொண்டு வளர்ந்தன. செவ்வியல்இசை சார்ந்தோர் நாட்டார் இசையையும் இசைக் கருவிகளையும் புறந்தள்ளும் நிலை தோற்றம் பெற்றது.

நாட்டாரது தொழிற் செயற்பாடுகளை ஊக்குவித்தலிலும் இசைக்கருவிகளும் பாடல்களும் முதன்மை இடங்களைப் பெற்றிருந்தன. ஆனால் மேலோர் தொழிற்பாடுகள் இசைக்கருவிகளினாலோ, மிடற்றிசைகளினாலோ ஊக்குவிக்கப்படவில்லை. அவர்களுக்கு இசை என்பது பொழுதுபோக்குக்குரிய சாதனமாகவே நீடித்தது. தொழில் முறைப் பாடல்கள் என்பவை நாட்டாருக்குரியவையாகவே அமைந்தன.

உள வலுவூட்டல் என்ற உளவியற் செயற்பாட்டில் நாட்டார் இசைக் கருவிகள் முதன்மையான இடத்தை வகிக்கின்றன. வழிபாட்டுச் செயற்பாட்டை வலுவூட்டுதல் தொடக்கம், நோய்வாய்ப்பட்டவர்களின் உளவலுவை மேம்படுத்துதல் ஈறாக நாட்டார் இசைக்கருவிகளின் வகிபாகம் முக்கியமானது.

வழிபாட்டில் உருவந்து ஆடல் என்ற செயற்பாட்டில் உருவேற்றம் செய்வதற்கும், உருவேறிய நிலையில் உடல் உள, மனவெழுச்சி வெளிப்பாடுகளை நீட்சி பெறச் செய்வதற்கும் நாட்டார் இசைக் கருவிகள் பயன்பட்டன.

நாட்டார் இசைக் கருவிகள் தொடர்பான பிறிதொரு செயற்பாடு விதந்து குறிப்பிடத்தக்கது. அதாவது, வளர்ந்தோரால் சிறுவருக்குரிய இசைக்கருவிகள் இணக்கல் *(Improvisation)* முறையில் செய்து வழங்கப்பட்டமையாகும். குழல், மேளம், கிலுகிலுப்பை, ஒற்றைத் தந்திவீணை முதலியவற்றைச் சூழலிற் கிடைக்கப்பெறும் பொருள்களைக் கொண்டு உருவாக்கி சிறுவருக்குக் கொடுத்தனர். அவை விளையாட்டுப் பொருள்களாக மட்டுமன்றி இசைக் கல்விக்குரி யவையாகவும் அமைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கருவிகளைப் பயன்படுத்தி எண்விளையாட்டு, மொழிவிளையாட்டு முதலியவற்றைச் சிறுவர் மேற்கொண்டனர். அந்நிலையில் அந்த விளையாட்டுக் கருவிகள் கல்விப் பேறு உடையனவாய் அமைந்தன.

சிறுவர் தமது மனவெழுச்சிகளை வெளிப்படுத்திக்கொள்வதற்கும் அந்த இசைக் கருவிகளின் வாசிப்புத் துணை செய்தது. கூர்ந்த பாவனைச் செயற்பாடுகள் அவர்களிடத்தே வளர்வதற்கும் அவை உதவின. பெரியோர் இசைக் கருவிகளை வாசித்தலைச் சிறாரும் அச்சொட்டாகப் பாவனை செய்து வாசித்தனர்.

சிறுவருக்குரிய இசைக்கருவிகளைச் செய்வதன் வாயிலாகக் கைவினைத் திறன்களும் பயிற்றுவிக்கப்பட்டன. சூழலிற் கிடைக்கப் பெறும் பொருள்களுள் தொடர்பான ஆக்கப்புலக்காட்சி வளர்வதற்கும் அந்தச் செயற்பாடு துணை செய்தது.

வீட்டுப் பாவனைப் பொருட்களை இசைக் கருவிகளாக்கும் பிறிதொரு செயற்பாடும் நாட்டார் பண்பாட்டில் இடம்பெற்றது. பானையை இசைக்கருவியாகப் பயன்படுத்தியமையின் நீட்சியாகவே "கடம்" உருவாக்கம் பெற்றது. தண்ணீர் குவளைகளைத் தட்டி ஒலி எழுப்புதலில் இருந்து "சலதரங்கம்" தோற்றம் பெற்றது. அவை இணக்கல் செய்யும் ஆற்றலுக்குச் சான்றாக அமைந்தன.

நாட்டார் மொழியில் இசைக் கருவிகள் "அறிகருவிகள்" என்றும் அழைக்கப்பட்டது. அதாவது, அறிவிப்புச் செய்தல், அறியத்தருதல் அறிவைப் பகிர்தல் முதலாம் செயற்பாடுகள் அவற்றால் முன்னெடுக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No:
Acc No

# வழிபாட்டு முறையாக ஆடல்

உடல், உள்ளம், மனவெழுச்சி ஆகிய தளங்களில் இருந்து இறை அனுபவங்களை நோக்கி நீட்சி கொண்டமை, இந்திய ஆடல்களிலே காணப்படும் ஒரு சிறப்புப்பண்பு. உடல் மொழித் தொடர்பாடலே ஆதி ஆடல்களுக்கு அடிப்படையாக அமைந்தது. சொல்மொழி தோன்றுவதற்கு முன்னரே உடல் மொழி தோன்றிவிட்டமையால், ஆடலே உலகின் தொன்மையான கலைவடிவம் என்ற அடையாளத்தையும் பெறுகின்றது. சமூக வளர்ச்சியில் இடம்பெற்ற அடுக்கமைவை அடியொற்றி நாட்டார் ஆடல்கள் செவ்வியல் ஆடல்கள் என்ற இருமைப்பாடு வளர்ச்சியடையத் தொடங்கியது.

தொன்மையான தமிழர்களின் வீரயுக வாழ்க்கையில் இடம்பெற்ற ஆடல்கள் உலகியல் உள்ளடக்கத்தைப் பெருமளவில் உட்கொண்டிருந்தன. அவ்வகையில் வெறியாட்டு, துணங்கை, குரவை முதலாம் ஆடல்கள் வீரயுக வாழ்வில் இடம்பெற்றிருந்தன. தேரின் முன்னால் ஆடிச் செல்வது முன்தேர்க்குரவையென்றும் பின்னால் ஆடிச் செல்வது பின்தேர்க்குரவை என்றும் விரித்துரைக்கப்பட்டது.

வீரம் செறிந்த வடிவினராகவே வீரயுகத் தமிழர்கள் கடவுளரையும் கண்டனர். அந்நிலையில் வழிபாட்டு ஆடல்களும் வீரவெளிப்பாட்டைச் சுற்றி மேலெழுந்தன. வளச்சடங்கு *(Fertility Ritual)* அடல்கள், போர் ஆடல்கள், வழிபாட்டு ஆடல்கள் என்ற வகைகளிலே தொன்மையான ஆடல்கள் வளர்ச்சி கொண்டு வந்தன.

அறநெறிக் காலத்தில் செவ்வியல் ஆடல், நாட்டார் ஆடல் என்ற பிரிவு துல்லியமாக வளர்ச்சி கொள்ளத் தொடங்கியது. செவ்வியல் ஆடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No
Acc No

வரன்முறைக் கல்வியோடு *(Formal Education)* இணைந்து வளர்ச்சி கொண்டது. மாதவி பதினோராடலைப் பயின்று ஆடிய செய்தி சிலப்பதிகாரத்திலே இடம்பெற்றுள்ளது. ஆடல் தெய்விகமயப்படல் என்ற செயற்பாடு அறநெறிக்காலத்திலும் பக்திநெறிக் காலத்திலும் ஆழ்ந்து விரவி வளர்ச்சிகொள்ளத் தொடங்கின.

கோயில் வழிபாட்டு மரபோடு தேவரடியார் ஆடல் என்ற பரத நாட்டியமும் வழிபாட்டு முறையாக வளர்ச்சி கொள்ளத் தொடங்கியது. வேதாகம வழிபாட்டு முறையில் செவ்வியல் ஆடலாகிய தேவரடியார் ஆடல் செழித்து வளர்ச்சி கொண்ட செய்தி சோழர் காலத்துக் கல்வெட்டுக்களில் இருந்து அறியக் கூடியதாகவுள்ளது.

நாட்டார் வழிபாட்டு முறையில் நாட்டார் ஆடல்கள் சிறப்பிடம் பெறத் தொடங்கின. கரகாட்டம், காவடியாட்டம், தேவராட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், தப்பாட்டம், கோலாட்டம், கணியன் ஆட்டம், களியாட்டம், ஊஞ்சலாட்டம், சிலம்பாட்டம், களரியாட்டம், களியலாட்டம், உறியடியாட்டம், கும்மியாட்டம், கழைக்கூத்து, காளையாட்டம், புலியாட்டம், கரடியாட்டம், சிம்ம ஆட்டம், ஒயிலாட்டம், அனுமன் ஆட்டம் என்றவாறான நிலைகளில் நாட்டார் ஆடல்கள் பக்தியோடு செறிந்து பன்முகமாக வளர்ச்சி கொண்டன.

செவ்வியல் ஆடல்களிலே ஒன்றுகுவிதல் *(Convergent)* என்ற செயற்பாடும் நாட்டார் ஆடல்களிலே பன்முகமாகிப் பரவுதல் *(Divergnt)* என்ற பன்முகப்பாடும் நிகழ்ந்து வந்துள்ள கலித்தொகைக் கடவுள் வாழ்திலே குறிப்பிடப்பட்ட கொடுகொட்டி, பாண்டரங்கம், காபாலம் ஆகிய ஆடல்களும், மாதவி ஆடிய பதினொரு வகையாடல்கள் வளர்ச்சியில் ஒன்று திரண்டு தேவரடியால் ஆடலாகப் படிமலர்ச்சி கொண்டது.

பேச்சு நிலையில், ஒவ்வொருவரும் ஆடலின் ஒரு சிறுபகுதியுடன் தான் பேசிக் கொள்கின்றனர் என்பது நாட்டாரின் அவதானிப்பு, அதாவது, பேசும் பொழுது கையசைவு, கண்ணசைவு, முகக்கோல வெளிப்பாடு ஆகியவை கலந்து நிற்பதால் நாட்டார் வழக்காற்றில் மேற்கூறிய கருத்து நிலைபேறு கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மரபில் ஆடலின் தோற்றம் பற்றிய இருவேறு நம்பிக்கைகள் நிலவுகின்றன. செவ்வியல் ஆடல் மரபினர் இறைவனால் ஆடல் அருளப்பட்டது என்றும், இறைவனையும் இறைவியையும் ஆடல் வடிவினராகத் தொழிற்பாடுகளை வெளிப்படுத்துகின்றனர் என்றும் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

நாட்டார் மரபில் ஆடல் என்பது மனித முயற்சியின் இயல்பான வெளிப்பாடு என்று கொள்ளப்படுகின்றது. மனித முயற்சிக்கும் ஆடலுக்குமுள்ள தொடர்பு தொன்மையான குகை ஓவியங்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நாட்டார் மரபில் ஆடல் என்பது மனித முயற்சியின் இயல்பான வெளிப்பாடு என்று கொள்ளப்படுகின்றது. மனித முயற்சிக்கும் ஆடலுக்குமுள்ள தொடர்பு தொன்மையான குகை ஓவியங்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மனிதரின் கூட்டு முயற்சியினால் உருவாக்கம் பெற்ற ஆடலை ஒரு வழிபாட்டு முறையாக மாற்றியமைத்தமை நாட்டார் வழிபாட்டில் ஏற்பட்ட ஒரு முதன்மையான வளர்ச்சி. இந்த வளர்ச்சியில் தமிழர் நாட்டார் ஆடல்களுக்கும் ஆபிரிக்கப் பழங்குடியினரது ஆடல்களுக்கு மிடையே ஒப்புமைகள் காணப்படுகின்றது. ஆபிரிக்கப் பழங்குடியினர் கைகளை மேலுயர்த்தி ஆடுதல் இறைவனை நோக்கிய விளிப்பாக அமைகின்றது. *(Gunther,J. 1953, 308-9)*

தமிழ் நாட்டுப்புற ஆடல்களினாலும் கைகளைத் தூக்கி ஆடுதல் கடவுளரை வேண்டுதலாக இருத்தல் குறிப்பிடத்தக்கது. கரக ஆட்டத்தில் இறையியல் நோக்கு உலகியல் நோக்கு என்ற இருநிலைகள் காணப்படல் ஆய்வு நோக்கிலே முக்கியத்துவம் பெறுகின்றது.

இறையியல் நோக்கை முதன்மைப்படுத்துவது "சக்திக்கரகம்" எனப்படும். அது அம்மன் வழிபாட்டை முன்னிலைப்படுத்தி ஆடப்படுகின்றது. அம்மன்குட ஆட்டம், கும்ப ஆட்டம் முதலாம் பெயர்களாலும் அது அழைக்கப்படும்.

செவ்வியல் ஆடலாகிய தேவரடியார் ஆடலில் அவ்வகை இருமைத் தன்மையைக் காண முடியாது. அது முற்றிலும் இறைவனுக்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்கையாகவே மேற்கொள்ளப்படுகிறது. செவ்வியல் ஆடல் ஒருமை நோக்கோடு மட்டும் தொடர்பு கொண்டு ஆடப்படுகின்றது.

நாட்டார் கரக ஆடலில் உலகியலை முதன்மைப்படுத்துவது "ஆட்டக்கரகம்" எனப்படும். இருவகைக் கரகங்களிலும் இருபத்தைந்துக்கு மேற்பட்ட அடைவுகள் (அடவுகள்) மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழர் செவ்வியல் ஆடலில் வரையறுக்கப்பட்ட ஆடல் விதிகளை மீறி ஆடமுடியாதவாறு இறுக்கமான கட்டமைப்பு முறை உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் நாட்டார்ஆடல்களில் ஆடுவோர் தமது திறமையைப் பயன்படுத்தி புதிய உடலியக்கச் செயல்களை நிகழ்த்திக்காட்டுவர். (வானதீபன், 2009, 23)

கரகத்தைத் தலையிலிருந்து பின்கழுத்து வழியாக இறக்கியும் முதுகிலும் தோள்பட்டைகளிலும் கூட நிறுத்திக் காட்டுவர். கரகத்தைத் தலையில் சுமந்தபடியே தரையில் வைக்கப்பட்டுள்ள கைக் குட்டையை வாயால் கவ்வி எடுப்பர். கண்ணிமையால் நிறுத்தப்பட்டிருக்கும் ஊசியை எடுப்பர். ஏணியை நேராகவோ அல்லது சாய்த்து வைத்தோ, தலையில் உள்ள கரகம் கீழே விழாமல் சாதுரியமாகச் செயற்படுவர். தரையில் விரிக்கப்பட்டுள்ள சேலையை கரகம் வைத்துள்ளபடியே மெல்லப்படுத்து அச்சேலையைத் தமது உடம்பில் சுற்றிக் கொண்டு ஆடுவர்.

மேற்கூறிய ஆடற் செயற்பாடுகள் நாட்டார் ஆட்டக்கலையின் விநோதமான தனித்துவத்தை ஒரு வகையிலே புலப்படுத்துகின்றது. உடல் வெளிப்பாடுகளை உருவாக்குதல், அழகியல் வெளிப்பாடுகளில் இருந்து ஆன்மிக விசையைத் தூண்டுதல் ஆகியவை கரகம், காவடி முதலாம் ஆட்டக்கலைகளின் முப்பரிமாணங்களாகவுள்ளன.

நாட்டார் காவடியாடலும் உலகியல், இறையியல் என்ற இருநிலைகளைக் கொண்டது. பொருள்களைக் காவிச் செல்லும் காவுதடியில் இருந்து காவடி ஆடல் தோன்றியதென்பது உலகியல் விளக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைலாசத்தில் உள்ள சிவகிரிசக்திகிரி ஆகிய இருமலைகளையும் இடும்பன் தூக்கிவந்த தொன்மக்கதையோடு காவடியைத் தொடர்புபடுத்தி விளக்குதல் அதற்குரிய இறையியல் விளக்கம்.

நாட்டார் ஆடல்களுக்குரிய பன்மைநிலை காவடி ஆட்டக் கலையிலே துல்லியமாக வெளிப்பாடு கொள்கின்றது. அமைப்பும் தொழிற்பாடுகளும் என்ற நிலையில் காவடியாட்டம் பின்வருமாறு பாகுபடுத்தப்படுகின்றது.

அ. பாற்காவடி

ஆ. பழக்காவடி

இ. அன்னக்காவடி

ஈ. செடிற்காவடி

உ.தூக்குக்காவடி

ஊ. ஆட்டக்காவடி அல்லது கூத்துக்காவடி

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

காவடி ஆடல் முருகவழிபாட்டுடன் இணைந்த நாட்டார் கலைச் செயற்பாடாக இருந்தாலும் ஆட்டக்காவடி கலைச்செயற்பாடாக இருந்தாலும் ஆட்டக்காவடி பொது விழாக்களிலும் ஆடப்படும் நிலையில் வளர்ச்சியடைந்தது.

கரகம், காவடி ஆகியவை ஆடுபவர், குயிலுவக் கலைஞர்கள், பாடுபவர், பார்வையாளர் ஆகியோருடன் இணைந்த தமிழரின் தொன்மையான "அசையும் அரங்காக" *(Moveing Theatre)* அமைந்தன. அவற்றின் பிறிதொரு சிறப்பு வழிபாட்டுடன் இணைந்த அசையும் அரங்காக இருத்தல்.

வழிபாட்டு ஆடல்களாக விளங்கும் அவை உருவந்து மிளிரும் ஆடலாகவும் பயின்றாடும் ஆடலாகவும் இருநிலைகளிலே வளர்ச்சி கொண்டுள்ளன.

அன்னக்காவடி என்பது ஆடுபவர் தமக்கு சந்நியாசிகளுக்கும் உணவு தேடிவரும் பொருட்டு ஆடப்படுவது பிச்சையெடுத்து உண்ணும் துறவு மரபு பௌத்தம், சமணம் முதலாம் சமயங்களிலும் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிச்சை எடுத்தலை இறையியலுடனும், அழகியலுடனும் இணைக்கும் தனித்துவ வடிவமாக அன்னக் காவடியுள்ளது. அன்னக்காவடி எடுப்போர் பிச்சை வழங்குபவர்களுக்கு ஆடல் வழியாக மகிழ்வூட்டி பிச்சையைப் பெற்றுக்கொள்ளல் ஒருவித கைம்மாறாக அமைந்துள்ளது.

தமிழர்களது ஆடல் மரபிலே வரன்முறையான கற்றலுடன் இணைந்த ஆற்றுகை வடிவங்களுள் கூத்துக்காவடியும் ஒன்றாகும். அதனைக் கற்பிப்போர் முருக வழிபாட்டுடன் ஈடுபாடு கெண்டவர் களாகையால் "தாள முருகர்" என அழைக்கப்பட்டனர். நாட்டார் வழக்கில் அவர்கள் "அண்ணாவியார்" எனவும் அழைக்கப்பட்டனர்.

தாள முருகர் என்று அவர்களை அழைப்பதற்குக் காரணம் கூத்துக்காவடி வரன்முறையாள தாளக் கட்டுக்கோப்புக்களுக்கு உட்பட்ட வகையில் நிகழ்த்தப்படுதலாகும்.

தமிழரின் செவ்வியல் ஆடலாகிய தேவரடியார் ஆடலும் வரன்முறையான தாளக்கட்டுக்கோப்புடன் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தாளம் என்பது திட்டவட்டமான கால இடைவெளிகளுடன் கட்டமைப்புச் செய்யப்பட்டுள்ளமையால் அதனைக் "காலத்தூக்கு" என்றும் அழைத்தனர். சுருக்கமான நிலையில் அது "தூக்கு" எனவும் அழைக்கப்பட்டது. காலம் பற்றிய அறிகையைக் கலைகளுக்குள் கொண்டு வந்தமை தமிழர்களிடத்து நிகழ்ந்த ஒரு முதன்மையான கல்விச் செயற்பாடாயிற்று.

காலம் பற்றிய அறிகையை ஆடலுடன் மட்டுமன்றி இறை அனுபவங்களுடன் இணைத்தமை தமிழரின் ஆடலுக்குரிய பிறிதொரு தனித்துவம். அந்தச் சிந்தனையின் ஆழ்ந்து பெருக்கெடுத்த வடிவமே சிவனை அடல் வல்லவனாக் கண்டமையும் சிவனது ஆடலைப் பிரபஞ்ச நிகழ்த்துகையின் வடிவமாகக் கண்டமையுமாகும்.

சமய அழகியலின் ஒப்புமை நோக்கிலே பார்க்கும் பொழுது, வேறு சமயங்களிலே காணப்படாத தனித்துவம் வழிபடும் தெய்வத்தை ஆடல் வடிவினராகக் காணும் இந்துசமய மரபாகும்.

பயின்றாடும் கூத்துக் காவடியில் சிக்கலானதும் நீண்டதுமான தாளக் கட்டுக்கள் பயன்படுத்தப்படுகின்றன. வகை மாதிக்கு ஓர் எடுத்துக் காட்டு வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகணக சொம் சொம் தித்தா தித்தெய்
தரிகு சொம் சொம் தித்தா தித்தெய்
தகணக சொம் சொம் தரிகு சொம் சொம்
தக்கரம் டக்கரம் டண்ட டிங்கிட
மணக டிங்கிட கிறுதா தத்தித்தொம்

கூத்துக்காவடிச் சொற்கட்டுக்களைத் தொகுத்த கலைஞர்களுள் எ.ரி.பொன்னுத்துரையவர்கள் முதன்மையானவர்.

தமது உடலை வருத்தித் தெய்விக இன்பங்காணல் தொல் குடியழனரது வழிபாட்டு முறைகளுள் ஒன்றாக இருந்தது. வாழ்க்கையின் துன்பங்களோடு உறவாடுவதற்குரிய பயிற்சியாகவும் அது அமைந்தது. அவற்றின் அடிப்படையிலே தான் தூக்குக் காவடியும், பறவைக்காவடியும், செடிற்காவடியும் வளர்ச்சியடைந்தன.

முருக வழிபாட்டோடு மட்டுமன்றி ஏனைய தெய்வ வழிபாடுகளோடும் அவை தொடர்புடையவை. உடலில் ஊசிகளை ஏற்றுதல் ஒரு மருத்துவ முறையாகவும் சீனாவில் வளர்ச்சியடைந் துள்ளமை குறிப்பிடத்தக்கது. வழிபாட்டு முறைமை, நோய்தீர்க்கும் முறைமை ஆகியவற்றுடன் மேற்கூறிய காவடி வகைகள் நேரடியாக இணைந்துள்ளன.

காவடி ஆடலின் கடினமான பகுதிகள் செவ்வியல் ஆடலிலே அசைவுகளாலும், உடல் மொழிகளாலும் முத்திரைகளாலும் எடுத்தாளப்படுகின்றன. நாட்டார் ஆடல்கள் செவ்வியல் ஆடலிலே பல நிலைகளிலே செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

கரகம், கும்மி, கோலாட்டம் முதலாம் நாட்டார் ஆடல் வகைகளும் செவ்வியல் ஆடலிலே எடுத்தாளப்படுகின்றன. அவ்வாறு ஆடும் பொழுது அவை முற்று முழுதாகச் செவ்வியல் ஆடற் கட்டுக்கோப்புக்குள் கொண்டு சென்று விடப்படுகின்றன.

கும்மியும், கோலாட்டமும் வளச் சடங்குகளுடன் இணைந்து வளர்ச்சிபெற்ற நாட்டார் ஆட்டக் கலைகளாகும். கும்மி ஆடல் தானிய விளைச்சலுடன் இணைந்தது. தானியங்களை அளந்து கொட்டுதல் மும்முதல் என்று கூறப்பட்டது. கோலாட்டம் வயல்களிலே பறவைகளை விரட்டும் செயற்பாடுகளில் இருந்து தோற்றம் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகியலோடு தொடர்பு கொண்டிருந்த ஆடல்கள், வழிபாடு நிகழ்த்தும் ஆடல்களாகப் பெயர்ச்சி கொண்டன.

உலகியல் நோக்கில் தோற்றம் பெற்ற நாட்டார் ஆட்டக் கலைகள் நாட்டார் வழிபாடுகளுடன் இணைந்து நீட்சிகொண்ட வேளை, கோயில் வழிபாடும் வேதாகம நெறிகளும் தமிழகத்தில் வளர்ச்சியுற்ற வேளை கோயிலின் புற வீதியில் இடம்பெறும் ஆடல்களாக அவை இடம்பெறத் தொடங்கின.

கோயிலின் உட்புறத்தில் தேவரடியாரின் செவ்வியல் ஆடலே இடம்பெற்று வந்தது. தமிழகத்து ஆடல் வரலாற்றின் இருவகைக் கூத்து முறைமை நெடுங்காலமாகவே இருந்து வந்துள்ளது.

சிலப்பதிகாரம் வேத்தியல், பொதுவியல் என்ற இருவகைக் கூத்துக்கள் பற்றிய செய்தியைக் குறிப்பிட்டுள்ளது. (சிலம்பு 3:5) வேத்தியல் ஆடல் கோயில் ஆடல் தோன்றுவதற்கு அடிப்படையாயிற்று. அரசரைத் தேவர்களின் பிரதிநிதிகளாகக் கொள்ளும் வடநூல் மரபு வேத்தியலுக்கும் இறையியலுக்கும் இணைப்பை ஏற்படுத்தியது.

செவ்வியல் ஆடல் செவ்வியல் இசைக்கட்டுக் கோப்பினுக்குள் அமைந்திருக்க, நாட்டார் ஆடல்கள் நாட்டார் இசையுடன் இணைந்து இயங்கியது. செவ்விய ஆடலில் சிவன், திருமால், முருகன் முதலான கடவுளர் இறை இலக்காகக் கொள்ளப்படுகின்றனர். நாட்டார் ஆடல்களில் முருகன் உட்பட நாட்டுப்புறத் தெய்வங்களே இலக்காகக் கொள்ளப்படுகின்றனர்.

நாட்டார் ஆடலும் செவ்வியல் ஆடலும் சமூக அடுக்கமைவை நேரடியாக வெளிப்படுத்தும் ஆடல்களாகவுள்ளன. அவை மேற்கொள்ளும் அறிவூட்டல்களும், இறையியற் புலக்காட்சியும் சமூக அடுக்கமைவின் இயல்போடு தொடர்பு கொண்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் செயற்பாடாக நாட்டார் அரங்கு

நாட்டார் அரங்கு என்பது ஒருவகையில் நாட்டாரின் கல்வி அரங்காகவே அமைந்தது. ஒவ்வொரு பண்பாட்டுக்குமுரிய தேசிய கலைவடிவம் என்ற எல்லைக்குள் மட்டும் அது கட்டுப்பட்டு நிற்கவில்லை. அழகியலோடு இணைந்த கல்விக்கையளிப்பு அதற்குரிய வகிபாகத்தை மேலும் கூர்மைப்படுத்துகின்றது.

சமூகத்தின் அடிநிலை மக்களின் அழகியல் அனுபவங்களுடன் இணைந்த கல்வி அவற்றினூடாக ஊட்டப்படுகின்றது. வரன்முறையான கல்வி நிலையங்கள் வளர்ச்சியடைந்த வேளை அடிநிலை மக்கள் அதன் வீச்சுக்கு உட்படுத்தப்படாதிருந்தனர். அந்நிலையில் நாட்டார் வழக்காறுகளும் அரங்குமே அவர்களுக்குரிய கல்விக் கையளிப்பில் முக்கிய பங்கு வகித்தன.

நாட்டார் அறிகை வீச்சுக்குள் நின்று வலுவூட்டுதலும், அறிவூட்டுதலும், நாட்டார் அரங்கினால் மேற்கொள்ளப்படுகின்றன. அரங்கப் பரிமாணங்களே அந்த வளர்ச்சியைச் சுமந்த வண்ணமுள்ளன.

நாட்டார் அரங்கு பிரதேசங்களுக்குரிய செழுமையினையும் தனித்துவங்களையும் கொண்டிருத்தல் கல்விச்செயல்முறையானது பிரதேசத் தனித்துவங்களோடு பின்னப்பட்டிருத்தலைக் காட்டுகின்றது.

"நாட்டார் அரங்கு" என்பது செவ்வியல் நிலைப்பட்ட தொடர். "கூத்துக்களரி" என்பதே மக்கள் வழக்கில் உள்ள சொல். கூத்துக்கள் சமூகச் செயல்முறையாகவும் கல்விச் செயல்முறையாகவும் அமைகின்றன. அவை சமூக நிறுவனம் என்ற பரிமாணத்தையும் பெற்றுக்கொள்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி கற்பிப்பவரைக் குரு என்றும் ஆசிரியர் என்றும் கூறுதல் வரன்முறையான கல்வியோடு இணைந்த சொற்குறியீடுகள், நாட்டார் மரபில் அறிவைக் கையளிப்பவர் "அண்ணாவியார்" என்றே குறிப்பிடப்பட்டனர். அறிவோடும் அழகியற் பரவலோடும் உறவாடுபவர் அண்ணாவியார்.

தமிழ் மரபில் போர் என்பதை அடியொற்றிய கூத்துக்கள் சமூகத்தின் உயர் அடுக்கினருக்கு உரியதாகவும் சடங்குகளை அடியொற்றிய கூத்துக்கள் சமூகத்தின் அடித்தளத்தினருக்குரியதாகவும் வளர்ந்து வந்தன. உயர் அடுக்கினரின் வீரம் போற்றப்பட்ட அளவுக்கு தாழ் அடுக்குனரின் வீரம் பெரிதும் பாராட்டப்படவில்லை. (பேராசிரியர் க.கைலாசபதி, வீரநிலைக்கவிதை) அந்த முரண்பாடுகளூடே தான் நாட்டார் அரங்கின் அறிவுக்கையளிப்பு நிகழ்ந்து வந்தது.

"நாட்டார் அரங்கு" என்பது கற்றல் கற்பித்தல் நிகழும் கல்விக்கூடத்துக்கு ஒப்பானதாக இருந்தது. அறிவையும் அனுபவங்களையும் பகிர்ந்துகொள்ளல், திறன்களைப் பகிர்ந்து கொள்ளல், அவற்றை ஒருங்கிணைத்து ஓர் ஆக்கத்தை உருவாக்குதல் போன்ற செயற்பாடுகள் நாட்டார் அரங்கை ஒரு கல்விநிலையத்துக்கு ஒப்பானதாக மேலெழச் செய்கின்றன. கல்வி நிலையங்களில் நிகழ்த்தப்படும் ஒழுங்குபடுத்தப்பட்ட இடைவினைகள் நாட்டார் அரங்கிலும் நிகழ்த்தப்படுகின்றன.

தொன்மையான சமூகங்களில் அறிவும் மாயவித்தையும் *(Magic)* ஒன்றிணைக்கப்பட்டிருந்தன. சடங்கு செய்தோர் மாயவித்தை செய்வோராயும் அறிவுக் கையளிப்பை மேற்கொள்வோராயும் இருந்தனர்.

சடங்கும், மாயவித்தையும், அறிவூட்டலும் இணைந்ததாகவே நாட்டார் அரங்கு வளர்ச்சியடையத் தொடங்கியது. மனிதரின் தேவைகளும், எதிர்பார்ப்புக்களும், நம்பிக்கைகளும் கலைநயத்துடன் நாட்டார் அரங்கின் வழியாக நிறைவேற்றப்பட்டன.

நாட்டார் அரங்கு "பாவனை செய்தல்" என்ற செயற்பாட்டிலிருந்து எழுகோலம் பெறுகிறது. அறிவை உரிய முறையிலே செயற்படுத்துவதற்குப் "பாவனை" துணை செய்கின்றது. அத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்புடும் திறன்களை மேம்படுத்திக் கொள்வதற்கும் அது வளமான துணையாகின்றது.

சமூக வாழ்விலே பல்வேறு வகிபாகங்களை *(Roles)* மேற்கொள்வதற்குரிய திறன்களும் பாவனை செய்வதன் வழியாக வளர்த்தெடுக்கப்படுகின்றன.

பாவனை என்பது சமூகத் தொடர்பாடலின் ஒருவடிவம். அது தொடர்பாடலையும் கடந்த உளவியல் செயற்பாடாகவும் வளர்கின்றது. சிறுவரின் உடல், உள, மனவெழுச்சி வளர்ச்சியில் பாவனையின் வகிபாகம் முக்கியமானது. நாட்டார் அரங்கு பாவனைச் செயல்முறையை வளர்க்கும் தொடர்பாடல் சாதனமாகவும் அழகியற் சாதனமாகவும் அமைகின்றது. நாட்டார் இசைக்கருவிகளின் ஒலிப்பு பாவனைச் செயற்பாட்டை மேலும் வளம்படுத்துகின்றது.

வசனங்களையும் பாடல்களையும் மீளமீளக் கொலுப்பித்து குறித்த பாவனைச் செயல் மீள வலியுறுத்தப்படுகின்றது.

தமிழ் நாட்டார் அரங்கின் ஒரு சிறப்புப் பண்பு, பாவனைக்கு ஏற்றவாறு காலடிகளைப் பதிக்கும் செயற்பாடு. குத்தடி, நெட்டடி, பதுங்கடி, குதியடி, கதியடி, பெருவடி (பெருவிரல் அடி) சாயலடி (பக்கப்பாதங்களால் நடத்தல்) குழந்தையடி, செக்கலடி (முதியவர் போல் நடத்தல்) கெந்தலடி தோணியடி (தோணியின் உள்ளே நடப்பது போன்றது) முதலாம் நாற்பது வகையான அடிகள் நாட்டார் அரங்கில் இடம்பெறுவதாகச் சொல்லப்படுகின்றது.

குறித்த தொழிற்பாடுகளை வினைத்திறன்படுத்துவதற்கு அடிகளைக் கற்றுக்கொள்ளல் துணை செய்தன. காலடிகளின் படிமுறை வளர்ச்சியை அடியொற்றியே தேவரடியார் ஆடல் என்ற பரதநாட்டியத்திலே "அடவுகள்" என்ற அடைவுகள் உருவாக்கம் பெற்றன.

வாழ்க்கை பற்றிய அனைத்தையும் தழுவியதாக *(Comprehensive)* காட்சிகளையும் பாத்திரங்களையும் முழுதளாவிய நிலையில் உள்ளடக்கி நாட்டார் அரங்கு வளர்ச்சியுற்றிருந்தது. அந்நிலையில் அரங்கின் அறிவுக்கையளிப்பு அனைத்தையும் உள்ளடக்கிய செயற்பாடாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டார் அரங்கின் பாத்திர வடிவமைப்புகளை அடியொற்றி மேற்கூறிய கருத்தை விளக்கலாம்.

1. தெய்வப்பாத்திரங்கள்

அ. கடவுளர் ஆ. தேவ கணங்கள்

2. மனிதப் பாத்திரங்கள்

அ. அரசர் அரசி

ஆ. அரச அதிகாரிகள்

இ. மேட்டுக்குடியினர்

ஈ. விளிம்புநிலையினர்

உ. சடங்கு செய்வோர்

3. தொழில்முறைப் பாத்திரங்கள்

அ. வேட்டுவத்தொழில்

ஆ. ஆயர்

இ. பயிர்செய்வோர்

ஈ. கடலோடிகள், மீனவர்

உ. கம்மாளர்

ஊ.வணிகர்

எ.எடுபிடிவேலை செய்வோர்

ஏ. சேவகர்

ஐ. வண்டி ஓட்டுனர்

4. அமானுடப் பாத்திரங்கள்

அ. அரக்கர்

ஆ. பேய், பூதம்

இ. மாயாவிகள்

ஈ. தேவதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு நாட்டார் அரங்கிலும் குறித்த பாத்திரங்கள் முதன்மை பெறும் வகையிலே கூத்து வடிவமைக்கப்பட்டிருக்கும்.

நாடகப் பாத்திரங்கள் தம்மை அறிமுகம் செய்தலும், வேறு பாத்திரங்களால் அறிமுகம் செய்யப்படுதலும் அறிவுக் கையளிப்பைப் பொறுத்தவரை ஒரு முக்கியமான செயற்பாடாகும். அறிமுகப்படுத்தல் என்பது நாளாந்த வாழ்க்கைக்குப் பயன்படும் அனுபவமாகும் என்பதை மானிடவியலாளர் சுட்டிக்காட்டுவர்.

வகை மாதிரிக்கு ஓர் எடுத்துக்காட்டு வருமாறு. நாட்டார் அரங்கில் மாதவி அறிமுகம் செய்யப்படுதல்.

"சோதி மதியொளி தளதள என மார்பினில்
சொருகு குழல் பளபள எனவே
மாது திருவென ஓதும் இவளென
மாதவி வந்து தோற்றினாள்"

"தாதி ஒருத்தியும் தாயும் ஒருத்தியும்
தன்னில் மருவிய துன்னவே
ஆதி யிவளென ஓதும் எழிலுடன்
அரிவை சபைதனில் தோற்றினாள்"

சமூக அசைவியத்துடன் *(Mobility)* நிகழ்ந்த ஒரு முக்கியமான தோற்றப்பாடு "அறிமுகப்படுத்தல்" என்பது மானிடவியல் தரும் ஒரு முக்கியமான செய்தி.

பிறரை அறிமுகப்படுத்தும் வேளையில் ஒருவர் தமது சுய படிமத்தை அகநோக்கல் செய்தல் பட்டுத் தெறித்தலாக அமையும். சுயபடிம உருவாக்கலில் நாட்டார் அரங்கின் வகிபாகம் முக்கியமானது. ஒருவர் தம்மைப் பற்றித் தாமே உருவாக்கும் காட்சியை வளப்படுத்துவதில் நாட்டார் கல்விச் செயற்பாடுகள் சிறப்பார்ந்த பங்கை வகித்துக் கொள்கின்றன.

நாட்டார் வாழ்க்கையோடு இணைந்தது "மாயவித்தை" அறிய முடியாத புதிர்களை மாயவித்தைச் செயற்பாடுகளாகவே நாட்டார் கருதினர். மாயவித்தை என்பது கற்றுக்கொள்ளத்தக்கது என்ற உளப்பாங்கு நாட்டாரிடத்துக் காணப்பட்டது. கற்றல் வழியாக அதீத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றலைப் பெறலாம் என்ற நம்பிக்கையை மாயவித்தை என்ற எண்ணக்கரு கருத்தேற்றம் செய்தது.

சமூக மயமாக்கல், சமூக இசைவாக்கம் செய்தல் ஆகிய கல்விச் செயற்பாடுகளில் நாட்டார் அரங்கின் செயற்பாடுகள் முக்கியமானவை. நாட்டார் அரங்கு அமைப்பு நிலையில் நெகிழ்ச்சிப் பாங்கு கொண்டது. சமூக இசைவாக்கத்தில் நெகிழ்ச்சிப்பாங்கு என்பது ஒரு முக்கியமான பங்கு வகிக்கின்றது.

கதைப் பாத்திரங்கள் நடப்பு வாழ்க்கைப் பாத்திரங்களின் நேர் இயல்பையும் எதிர் இயல்பையும் சித்திரிப்பதன் வாயிலாக நிஜவாழ்க்கையில் பாத்திர உருவாக்கம் பற்றிய பயிற்சியை வழங்குகின்றன.

நாடக வளர்ச்சியூடே நிகழும் பாத்திர முரண்பாடுள், கதைச்சுவையோடு மட்டும் நின்றுவிடாது, நிஜவாழ்க்கைக்கு எறிவு செய்யப்படக்கூடிய சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளன.

நாட்டார் அரங்கின் நிகழ்த்துகை பொதுவாக ஐந்து பிரிவுகளைக் கொண்டிருக்கும். அவை:

1. முகம் - கதையின் தொடக்கம்

2. தொடர்முகம் - கதையின் முன்னேற்றம்

3. கருக்கட்டல் - கதை வளர்ச்சியும் சிக்கலும்

4. விளைவு - தடைகளை எதிர்கொண்டு வினைப்படல்

5. துய்த்தல் - கதையின் முடிவு

வாழ்க்கைச் சம்பவங்களின் செயற்பாட்டுக்கும் நாடக அளிக்கைச் செயற்பாட்டுக்குமிடையே நேரடியான தொடர்புகள் உண்டு. அந்நிலையில் அரங்கு என்பது வாழ்க்கைக்குரிய பயிற்சியாக நீட்சி கொள்ளும்.

நாட்டார் அரங்கு ஆடல் தழுவிய அரங்கு என்றும் குறிப்பிடப்படும். அந்த எண்ணக்கருவைச் சிறப்பித்தே அது "கூத்து" என்று அழைக்கப்படலாயிற்று. ஆடலின் ஒரு சிறப்புப்பண்பு பாத்திரத்தின் குணவியல்போடு அழகியல் தொடர்புபட்டிருத்தலாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திரத்தின் குணவியல்பு ஆடலால் மீள வலியுறுத்தல் செய்யப்படுதல் சுவையேற்றம் செய்தலோடு மட்டும் நின்றுவிடுதல் இல்லை, சமூகப் பிரயோக நிலையினையும் கொண்டுள்ளது.

செவ்வியல் அரங்கு மற்றும் நாட்டார் அரங்கின் அடிக்கருத்தாக அமைவது அறத்தை வலியுறுத்தல். செவ்வியல் அரங்கின் அறன் வலியுறுத்தல் வைதிக நெறியாளர்களினதும் மேட்டுக்குடியினரதும் கண்ணோட்டங்களில் அமைந்திருக்கும். ஆனால் நாட்டார் அரங்கின் அறன் வலியுறுத்தில் சமூகத்தின் அடித்தளங்களில் வாழ்வோரின் தரிசனங்களை அடியொற்றியதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புழங்குபொருள்களும் அறிவுக்கையளிப்பும்

நாட்டார் பயன்படுத்தும் பொருள்கள் வாயிலான அறிவுக் கையளிப்பு நாட்டார் கல்வியில் முக்கியமான பரிமாணங்களுள் ஒன்றாகவுள்ளது. பயன்படுத்தும் பொருள்கள் "புழங்கு பொருள்கள்" என்றும் குறிப்பிடப்படும்.

தமிழர் சமூகத்தின் தொழில்நுட்ப அறிவும், அழகியல் உணர்வும் கைவினைத்தேர்ச்சியும் புழங்கு பொருள்களால் வெளிப்பாடு கொள்கின்றன. புழங்கு பொருள்களைப் பண்பாட்டின் கண்ணாடி என்றும் பிரயோகக்கல்வி அறிவின் கண்ணாடி என்றும் குறிப்பிடுவர்.

புழங்கு பொருள்கள் கைவினை ஆற்றலையும் அழகியல் உணர்வையும் அவற்றோடு இணைந்த கல்வியையும் தலைமுறை தலைமுறையாகக் கையளிப்புச் செய்த வண்ணமுள்ளன.

பொருள்களைப் பற்றிய அறிவு, அவற்றைப் பயன்படுத்துதல் தொடர்பான அறிவு ஆகிய இரண்டும் புழங்கு பொருள்கள் வாயிலாகக் கையளிப்புச் செய்யப்படுகின்றன. புழங்கு பொருள்கள் பயன்படு பொருள்கள் என்றும் குறிப்பிடப்படும்.

தமிழர் பண்பாடு பலவகையான புழங்கு பொருள்களின் பயன்பாட்டைக் கொண்டது. அவற்றைப் பின்வருமாறு பாகுபடுத்தலாம்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. குறிப்பிட்ட தொழிலைச் செய்வதற்கு அடிப்படையாக வேண்டப்படும் புழங்கு பொருள்கள்.

ஆ. வீட்டுப் பாவனைக்குரிய புழங்கு பொருள்கள்.

இ. சடங்குகளுக்கும் பண்டிகைகளுக்கும் தேவையானவை.

தமிழர் சமூகத்தின் அடுக்கமைவைப் புரிந்துகொள்வதற்கு புழங்கு பொருள்கள் நம்பகரமான குறியீடுகளாகவுள்ளன. உதாரணமாக உலோகங்களினால் செய்யப்படும் வீட்டுப் பாவனைப் பொருள்களின் பயன்பாடு மேட்டுக்குடியினருக்குரியது. வெள்ளி, பித்தளை, செம்பு முதலிய உலோகங்களினால் ஆன வீட்டுப்பாவனைப் பொருட்களை அவர்கள் பெருமளவிலே பயன்படுத்தினர். மட்பாண்டங்கள் மண்சிட்டிவிளக்கு, மட்குடம் முதலிய விலை குறைந்த வீட்டுப் பாவனைப் பொருட்களை விளிம்புநிலையினர் பயன்படுத்தினர்.

சமூக அடுக்கமைவைக் கட்டிக்காக்கின்ற அறிவுக்கையளிப்பையும் புழங்கு பொருள்கள் மேற்கொண்டு வந்ததை சமூகத்தின் மறைமுகச் செயற்பாடாகவுள்ளது.

நேரடியாக அறிவைக் கையளித்தல், நேரில் வகையில் அதனைக் கையளிப்புச் செய்தல் என்ற இருவகையான செயற்பாடுகள் சமூகத்தில் இடம்பெற்று வந்தன. புழங்குபொருளின் உபயோகத்தில் மேற்குறிப்பிட்ட இருவகையான செயற்பாடுகளும் இடம்பெற்றன.

சமூக அடுக்கமைவின் தாழ் நிலையில் வாழ்ந்தோர் தமக்குரிய புழங்கு பொருள்களைத் தாமே உற்பத்தி செய்தனர். பெட்டி, கடகம், சுளகு, பாய், தடுக்கு, தட்டம், துடைப்பம், கட்டில், நீர் அள்ளும் பட்டை, அகப்பை, விசிறி என்றவாறான புழங்கு பொருள்களை அவர்களே செய்து கொண்டனர். அப்பொருள்களைச் செய்யும் தொழில்நுட்பக் கல்வியை மூத்தோர் இளையோருக்கு செய்யும் முறையோடு இணைந்து கற்பித்தனர்.

சமூக அடுக்கமைவில் உயர்ந்தோர் தமக்குரிய புழங்கு பொருள்களைத் தாமே செய்வதில்லை. அவ்வாறு செய்தல் இழுக்கு என்ற போலி உளப்பாங்கும் அவர்களிடத்தே காணப்பட்டது. அந்நிலையில் நாட்டார் தொழில்நுட்ப அறிவில் அவர்கள் பின்தங்கியவர்களாகவே காணப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலோக வழியான புழங்கு பொருள்களைச் செய்தோர் "கம்மாளர்" எனவும், "பத்தர்" எனவும் அழைக்கப்பட்டனர். உலோகத்தின் பண்புகளும் வடிவமைப்பு முறைகளும் மூத்தோரால் இளையவர்களுக்கு அறிமுறை, செய்யும் முறை ஆகிய இரண்டும் இணைந்த வகையிலே கற்பிக்கப்பட்டன..

கத்தி, கோடரி முதலியவற்றைச் செய்யும் பொழுது சாய்தளம் பற்றிய தொழில்நுட்ப அறிவு பிரயோகிக்கப்பட்டது. உலோகப் புளங்குபொருள் செய்கையில் "முக்கூட்டு நுட்பம்" மேற்கொள்ளப் பட்டது. செய்யும் பொழுது மட்டுமன்றி பயன்படுத்தும் பொழுதும் முக்கூட்டு நுட்பம் பிரயோக நிலையில் எடுத்தாளப்படுகின்றது. உதாரணமாகப் பாக்குவெட்டியைப் பயன்படுத்தும் பொழுது வலுப்பிரயோகம் ஒரு முனையிலும் சுழலிடம் எதிர் முனையிலும் செயற்படும் இடம் நடுவிலுமாக முக்கூட்டு நுட்பம் அமைந்துள்ளது.

பெண்களும் புழங்குபொருள் பண்பாடும் பற்றி நோக்கும் பொழுது, சாதி அடுக்கமைவின் கீழ் மட்டங்களிலே வாழ்வோர் கடினமான புழங்கு பொருள்களைக் கையாளுவோராயும் உயர்குடிப் பெண்கள் எளிமையான செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடிய புழங்கு பொருள்களைப் பயன்படுத்துவோராயும் காணப்பட்டனர்.

கோடரி, மண்வெட்டி, உரல், உலக்கை முதலாம் கடினமான புழங்கு பொருள்களை சாதி அடுக்கமையின் கீழ் மட்டங்களிலே வாழும் பெண்களே மிகையாகப் பயன்படுத்தினர். அதனால் அவர்களின் உடல் வலிமையும் உறுதியும் பெற்றிருந்தது. உயர்குடிப் பெண்கள் பாக்கு வெட்டியைக்கூடப் பயன்படுத்துதல் இல்லை. வேலையாட்கள் வெட்டிக் கொடுத்த பாக்கையே உண்டனர்.

உளப்பாங்கின் உருவாக்கம் தொழில்நுட்ப அறிவு, தொழிற்பகுப்பு, சமூக அந்தஸ்து நிலை போன்ற பல்வேறு செயற்பாடுகளுடன் புழங்கு பொருள்கள் தொடர்புபட்டுள்ளன. விரிந்த கருத்தில் அறிவுகூட ஒருவகைப் புழங்கு பொருள் என்பது பூக்கோவின் கருத்து.

தொன்மையான தொழிற்பெயர்கள் புழங்கு பொருள்களை அடியொற்றியே தோற்றம் பெற்றன. வெட்டுதல், கொத்துதல், அரிதல், தூற்றுதல், குடித்தல், கழுவுதல், விசிறுதல் என்றவாறு ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்பெயரும் அதற்குரிய புழங்குபொருளை அடியொற்றியே எழுகோலம் பெற்றது.

புழங்குபொருள்களோடு இணைந்த மொழியாற்றல் மனித வளர்ச்சிப் பருவத்தினூடே நிகழும் சமூக மயமாக்கலால் *(Socialisation)* வளர்த்தெடுக்கப்பட்டது. சமூகமயமாக்கற் கல்வியிலே புழங்கு பொருள்கையாட்சி ஒரு முக்கியமான செயற்பாடாக அமைந்தது.

நாட்டாரின் புழங்கு பொருள் பண்பாடு மூலப்பொருள் பற்றிய தெளிவான புலக்காட்சி உருவாக்கத்துடனும், குறித்த பொருளை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட கருவிகள் பற்றிய புலக்காட்சியுடனும் இணைந்திருந்தது. புழங்குபொருளின் அறிவுக் கையளிப்பில் அவை முக்கியமான பரிமாணங்கள்.

ஆனால் நவீன புழங்கு பொருள்களின் மூலப்பொருள்கள் யாவை? வடிவமைக்கும் பொறி எப்படிப்பட்டது? என்பவை பயன்படுத்து வோரால் பெருமளவில் அறியப்படாதவையாகவே உள்ளன. உதாரணமாக ஒரு பிளாஸ்டிக் கதிரை செய்யப்படுவதற்குப் பயன்படுத்தப்பட்ட மூலப் பொருள்கள் அதனை வடிவமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட பொறிகள் முதலியவற்றைப் பெருமளவிலான பயன்படுத்துவோர் அறியாதவர்களாகவே உள்ளனர்.

மரபு வழியான புழங்கு பொருள்களுக்குக் கலைச் செறிவூட்டும் அழகியற் கல்விச் செயற்பாடுகளும் நாட்டார் வழக்கில் இடம்பெற்றன. உதாரணமாக, பெட்டி, கடகம், பாய் முதலிய புழங்கு பொருள்களைச் செய்யும் பொழுது வண்ண ஓலைகளைப் பயன்படுத்தி அழகும் மெருகும் ஏற்படுத்தினர். தாவரவேர், கிழங்கு விதைகள் முதலியவற்றிலிருந்து இயற்கையாக வண்ணம் தயாரிக்கும் அறிவும் மூத்தோரால் கையளிக்கப்பட்டு வந்தது.

களிமண்ணினால் ஆக்கப் பெற்ற பானை, குவளை, குடம், சட்டி, தட்டம் முதலாம் புழங்குபொருள்களில் அழகிய கோல வரைபுகள் வனைதலும் இடம்பெற்றன. பெண்களே பெரும்பாலும் அத்தகைய குழிவரைபுகளைச் செய்தனர். மூத்த பெண்களிடமிருந்து இளைய பெண்கள் அந்தத் திறனைக் கற்றுக்கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தளை வெள்ளி, செம்பு முதலாம் உலோகப் பாவனைப் பொருள்களில் குழிவரைபுக் கோலங்களை வரைந்து அழகுபடுத்தும் செயற்பாட்டில் பெண்கள் ஈடுபடுத்தப்படவில்லை. அத்தொழில் தொடர்பான அறிவியல் நுட்பங்களும் வரைபுநுட்பங்களும், மூத்த ஆண்களால் இளைய ஆண்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்டன.

புழங்கு பொருள்களோடு இணைந்தவாறு கைவினைக் கலைகள் பற்றிய அறிவும் வளரலாயிற்று. கைவினைப் பொருள்கள் ஒவ்வொன்றும் கல்விச் செய்தியைக் கையளிக்கின்றன. கல்விச் செய்தியுடன் இணைந்தவாறு பண்பாட்டுச் செய்தியும் அதனால் கையளிப்புச் செய்யப்படுகின்றது. பொருளின் குணவியல்புடன் பொருள்செய்வோரின் சாதிய நிலவரமும் பொருளின் வழியாகக் கையளிக்கப்படுதல் இந்திய சமூக நிலவரத்தின் ஒரு பொதுப்பண்பு. ஒரே நேரத்தில் பல கருத்துக்களை அவை கையளிப்புச் செய்கின்றன.

புழங்கு பொருள்கள் கற்பதற்கும், பயன்படுத்துவதற்கும், பகிர்ந்து கொள்வதற்குமுரிய சாதனங்களாகின்றன.

புழங்கு பொருள்கள் வாயிலாக ஒழுக்கம் கற்பித்தலும் தமிழரின் பண்பாட்டுச் சூழலில் இடம்பெற்று வந்தது. எடுத்துக்காட்டாகப் பெரியவர்களுக்கு ஒரு புழங்கு பொருளைக் கொடுக்கும் பொழுது, இரண்டு கைகளாலும் கொடுக்க வேண்டும் என்ற பணிவு ஒழுக்கம் கற்பிக்கப்பட்டது.

கத்தி என்ற புழங்குபொருளை யாருக்குக் கொடுப்பதாக இருந்தாலும் கத்தியின் பிடிப்பகுதியையே அவர்களுக்கு நீட்ட வேண்டும் என்ற செயற்பாட்டில் கூர்மை பற்றிய கவனமும் பாதுகாப்பு ஏற்பாடும் தொடர்பான அறிவுக் கையளிப்பு இடம்பெற்றது.

புழங்கு பொருள்கள் சடங்குகளின் போது புதிய பொருள்மைப்பைக் குறியீட்டுப்படுத்துகின்றன. உதாரணமாக, மட்பானை பொங்கற் பானையாக வைக்கப்படும் பொழுது அதற்குப் பொட்டு இடுவதும் அலங்கரிப்பதும் என்ற நிலையில் ஒருவித தெய்வீக ஏற்றத்தைப் பெற்றுக்கொள்கின்றது. புழங்கு பொருள் பயன்பாட்டு நிலையில் "நிலை மாற்றம்" பெறுதலையும் மாணவர் கற்றுக்கொள்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவருக்குரிய புழங்கு பொருள்களுள் பொம்மைகள் முக்கியமானவை. மரப்பொம்மைகள், மட்பொம்மைகள், தோற்பொம்மைகள், துணிப்பொம்மைகள், உலோகப் பொம்மைகள் என்ற வகைப்பாடுகள் உள்ளன. இவற்றின் பயன்பாட்டுக்கும் சமூக அடுக்கமைவுக்கும் நேரடியான இணைப்பு உண்டு.

பொம்மைகள் மாதிரிச் சிற்றுருவங்களாக இருப்பதனால் சூழலில் உள்ளவற்றை முப்பரிமாண நிலையில் குறியீட்டுப்படுத்தும் கற்றலை சிறுவர்கள் பெற்றுக் கொள்கின்றனர். பொம்மைகளை வைத்துப் பெற்றோர் கதை சொல்லும் பொழுது, அவை கற்பித்தற் சாதனங்களாகவும் மாற்றம் பெறுகின்றன.

பொம்மைகளோடு இணைந்த சிறுவரின் கற்பனைகள் அவர்களின் ஆக்கத்திறன் வளர்ச்சிக்கும் துணை செய்கின்றன. அத்துடன் சிறுவரின் ஆழ்மன உரையாடல்களை முன்னெடுப்பதற்கும் அவை வலுவான தூண்டிகளாகவுள்ளன.

கல்வியின் ஒரு முக்கிய குறிக்கோளாகிய உல நோக்கை வளர்ப்பதற்குப் பொம்மைகளும் புழங்கு பொருள்களும் துணை நிற்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டார் விளையாட்டுக்களின் கல்விப் பெறுமானங்கள்

சமூக இருப்பிலிருந்து மேலெழுந்த இயல்பான ஆற்றுகை வடிவங்களே விளையாட்டுக்கள். நாட்டார் விளையாட்டுக்கள் அவற்றுக்குரிய கல்விப் பெறுமானங்களை உள்ளடக்கிய நிகழ்த்துகைக் களஞ்சிய நிலையில் இயங்குகின்றன.

தமிழர்களின் பொருண்மிய வரலாற்றுக்கும் விளையாட்டுக்களுக்குமிடையே நேர்நிலை உறவுகள் உண்டு. அதனை விளக்கும் சில எடுத்துக்காட்டுகள் வருமாறு:

அ. வேட்டுவ வாழ்க்கை - நாயும் புலியும் விளையாட்டு, பழம் பொறுக்குதல்

ஆ. ஆயர் வாழ்க்கை - பசுவைக் கண்டுபிடித்தல், பட்டி சேர்த்தல்

இ. வேளாண் வாழ்க்கை - நீர் விளையாட்டு, பல்லாங்குழி

ஈ. வணிகவாழ்க்கை - தாயம், சதுரங்கம்

உடலுறுப்புக்களின் ஒருங்கிணைப்புடன் (Coordination) இணைந்தும், அறிகைச் செயற்பாடு மற்றும் மனவெழுச்சிச் செயற்பாடு ஆகியவற்றுடன் இயங்கியும், மேலெழும் விளையாட்டு ஓர் அழகியல் வடிவமாகவும் தெய்விக வடிவமாகவும் தமிழர் நாட்டாரியலில் நீட்சி கொண்டது.

திருப்பாவை. திருவெம்பாவை ஆகியவை நீர்விளையாட்டுக்களுடன் இணைந்து தெய்விக இலக்கிய ஏற்றங்களைப் பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனது செயற்பாடுகளை "விளையாட்டுக்கள்" என்ற குறியீடுகளுக்குள் அடக்கலும் தமிழர் பண்பாட்டில் இடம்பெற்றது.

"ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டில் உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தறிந்தோம்" என்பது மணிவாசகரின் திருவெம்பாவைப் பாடலில் இடம்பெறும் அடிகள்.

தொன்மையான சடங்கிலிருந்து நாடகம் தோன்றியது என்ற கருத்து உண்டு. அதேவேளை குலக்குழு வாழ்க்கையில் இயற்கையோடும், விலங்குகளோடும், பகைவரோடும் நிகழ்த்திய போர்களில் இருந்தே விளையாட்டுக்களும் நாடகங்களும் தோன்றின என்ற பிறிதொரு கருத்தும் உண்டு.

போருக்கு ஆயத்தம் செய்தலும் மாதிரி இணக்கல் *(Simulation)* செய்தலும், விளையாட்டுக்களைத் தோற்றுவித்தன. அந்நிலையில் விளையாட்டு என்பது வெறும் பொழுது போக்காக மட்டும் அமையவில்லை. இலக்குடன் கூடிய செயற்பாடாகவும் அமைந்தது.

அந்நிலையில் விளையாட்டுக்கள் ஒழுக்கத்தை வலியுறுத்துவன வாகவும் ஒழுங்கமைந்த பங்குபற்றல் செயற்பாடாகவும் அமைந்த கல்வியேற்றங்களைப் பெற்றன. அத்தகைய ஒரு தளத்திலிருந்தே தமிழ்ச் சூழலில் விளையாட்டுக்கள் ஆன்மிக நீட்சியை பெற்றன.

நாட்டார் விளையாட்டுக்களுக்கும் கல்விக்குமுள்ள தொடர்புகளை நோக்கும்பொழுது முதற்கண் மேற்கிளம்புவது விளையாட்டின்வழி உருவாக்கம் பெறும் தன்நம்பிக்கையுடன் இணைந்த அறிகைப் பிறப்பாக்கவிசை *(Cognitive Activation)* யாகும்.

நாட்டார் பண்பாட்டில் வயதுப்படி நிலைகளுக்கு ஏற்றவாறு விளையாட்டுக்கள் உருவாக்கம் பெற்றமை வளர்ச்சி நிலைக்கும் முதிர்ச்சி ஏற்றத்துக்கும் அறிகைப் பிறப்பாக்க விசைக்குமுள்ள தொடர்புகளைக் காட்டுகின்றது. சிறுவயதில் ஆடப்பெறும் சிறுதேர் உருட்டல் விளையாட்டும் சிற்றில் கட்டும் விளையாட்டும் குறிப்பிட்ட சிறுவயதினருக்குரிய அறிவு முகிழ்ப்போடு தொடர்புடையவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுதேர் உருட்டலில் சக்கரச் சுழற்சி தொடர்பான அடிப்படை அறிவு செயல்வழியாகக் கற்றுக்கொள்ளப்படுகின்றது. நவீன அறிகை உளவியலில் அவ்வகை ஏற்பாடு கற்றலின் முதன்படியாகக் கொள்ளப்படுகின்றது. அதாவது செயல்வழியாகக் கற்றல் முதலாவது படி, காட்சிவடிவாகக் கற்றல் இரண்டாவது படி, குறியீட்டு வழியாகக் கற்றல் மூன்றாவது.

விளையாட்டில் ஆக்கமலர்ச்சியும் அழகியலும் ஒன்றிணைக்கப் படுதலை சிற்றில் கட்டும் விளையாட்டு வெளிப்படுத்துகின்றது. வளர்ந்தோர் நிலையில் அது நுட்பமான கலை ஏற்பாடுகளைச் செய்யும் பாவை விளையாட்டாக மாற்றமடைந்துள்ளது. திருப்பாவை, திருவெம்பாவை முதலாம் பாவை நோன்புக்கு, பாவை விளையாட்டே அடிப்படையாயிற்று.

பெண்கள் ஆடிய பூம்பந்தாட்டம் இளவயதினருக்குரிய நாட்டார் விளையாட்டுக்களில் முதன்மை பெற்றதொன்றாகும். அந்த விளையாட்டு நாட்டாரின் புலக்காட்சியிலே கண்டறியப்பட வேண்டிய அறிகை வடிவம் ஒன்றனுக்குப் பயிற்சியளிப்பதாக அமைந்தது. எதிரிலிருந்து வரும் பந்து எவ்விடத்துக்குவரும் என்ற ஊகத்துடன் ஒரு கற்பனை அசைவை ஏற்படுத்தித் துலங்கும் திறனுக்கு அது பயிற்சியளித்தது. நாட்டார் மொழியில் அது "பருந்துப் பாய்ச்சல்" எனப்பட்டது. நவீன விளையாட்டுக் கல்வியில் அது "நிழல்அசைவு" *(Shadow Move)* எனப்படும்.

ஆடல், பாடல், விளையாட்டு, இலக்கிய ஆக்கம், வழிபாடு ஆகியவற்றுக்கிடையே நாட்டார் வாழ்க்கையிலே ஊடுருவிய ஒன்றிணைப்புக் காணப்பட்டது. அந்த ஒன்றிணைப்பு செவ்வியல் நிலையில் மணிவாசகரது திருவாசகத்திலே பலநிலைகளிலே இடம்பெற்றது. அதுவே மணிவாசகரின் கவித்துவத்துக்கு முடிவிலா இங்கிதத்தைக் கொடுத்தது.

நாட்டார் பண்பாட்டில் இளைஞர்க்குரிய விளையாட்டுக்கள் வீரவிளையாட்டுக்களாக அமைந்தன. சிலம்படி, ஏறுதழுவல், மற்போர் முதலியவை அவ்வகையில் அமைந்தவை. உடலின் வீர ஏற்றத்தைக் கல்விச் செயல்முறையில் உள்ளடக்கிய செயற்பாடு தொன்மையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரேக்கக் கல்வி மரபிலும் காணப்பட்டது. "உறுதியான உடலில் உறுதியான உள்ளம் உருவாகும்" என்பது கிரேக்கரின் வீரயுக நம்பிக்கை

தமிழ் மரபில் நாட்டாருக்குரிய விளையாட்டுக்களாகப் பின்வருவன அமைகின்றன. அம்மானை, கழங்கு, கும்மி, சாழல், தேணோக்கம், உந்தி, சிலம்பம், மற்போர், ஏறுதழுவல், தாய்ச்சி, கிட்டிப்புள், வாரோட்டம், போர்த்தேங்காய், கிந்தியடித்தல், ஊஞ்சலாட்டம், கும்மி, கரகம், காவடி, புலியாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், கோலாட்டம், சொக்கட்டான், கொம்புமுறி, பட்டம் விடுதல், பல்லாங்குழி, பாண்டி, வண்டியோட்டம், சதுரங்கம், பழம்பொறுக்கல், குளம் - கரை. இராட்டினம், எவடம் எவடம், (எவ்விடம் - எவ்விடம்) கீச்சு மாய்ச்சுத் தம்பலம், கண்பொத்தி விளையாட்டு, முகமூடி விளையாட்டு, பாவை விளையாட்டு, நொடி விளையாட்டு, பூம்பந்தாடல் முதலியவை.

பால்நிலைப் பிரிவு சமூகத்திலே வளர்ச்சியடைய பெண்களுக்குரிய விளையாட்டுக்கள் என்ற தனிப் பிரிவு தோற்றம் பெற்றது. அம்மானை, கழங்கு, கும்மி, சாழல், தேணோக்கம், உந்தி, ஊசல் முதலியவை பெண்களுக்குரியவையாக வளர்ச்சியடைந்தன. பெண்களுக்குரிய நாட்டார் விளையாட்டுக்களிலே காணப்பட்ட ஒரு சிறப்புப்பண்பு அகத்தோடு பேசுதல் *(Self Talk)* அதாவது, தங்களுக்குள்ளே தாங்கள் உரையாடிக் கொண்டு விளையாடுதல். அகத்தோடு பேசுதல் சமய உரையாடலிலும், சமய வாழ்விலும் சிறப்புற்றிருந்தமையால், மணிவாசகர் பெண்கள் விளையாட்டுக்களைப் பாடலுக்கு எடுத்துக்கொண்டார்.

அத்தகைய ஒரு பின்புலத்தில் திருவம்மானை, திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பொன்னூசல் முதலாம் ஆக்கங்களை மணிவாசகர் பாடினார்.

நாட்டார் விளையாட்டுக்கள் உள ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்குரிய நேர் வலுவையும் கொண்டுள்ளன. கவனக் கலைப்பான்களோட இழுபட்டுச் செல்லாது, மனத்தை ஒருங்கு குவிய வைத்தல் நாட்டார் விளையாட்டுக்குரிய சிறப்புப் பரிமாணம். மனத்தை ஒருங்கு குவிய வைக்கும் அந்தச் செயற்பாடும் நாயன்மார்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்வார்களையும் நாட்டார் விளையாட்டுக்களின் மீதான கவனத்தை ஈர்ப்புச் செய்ததுடன் சமய இலக்கிய ஆக்கங்களோடு அவற்றைச் சங்கமிக்கவும் செய்தன.

விளையாட்டுக்களை மேற்கொள்ளும் பொழுது உடலின் ஆற்றல் சாதாரண நிலையைக் கடந்து மீப்பெருக்க நிலைக்கு மேலெழுகின்றது. அந்நிலையில் ஆடலுக்கும் மாயவித்தைச் *(Magic)* செயற்பாடு களுக்குமிடையே ஒப்புமை காணப்பட்டது.

அத்தகைய பின்புலத்தில் மாய வித்தை - மருந்து - விளையாட்டு ஆகியவற்றுக்கிடையே முத்தரப்புத் தொடர்புகள் காணப்பட்டன. அம்மூன்றும் இயல்பாகச் சேரக்கூடிய நிலையில் இருந்தமையால் "சேர்த்திகள்" எனவும் அழைக்கப்பட்டது.

மந்திரத்தில் ஒரு சொல் அல்லது சொற்றொடர் மீளமீளச் சொல்லப்படுதல் போல் விளையாட்டிலும், ஆடலிலும் ஓர் அசைவு அல்லது அடைவு மீள மீளச் செய்யப்படுதல் உண்டு. மீள மீள ஒன்றை ஒப்புவித்தல் எதிர்பார்த்தவற்றை எட்டுவதற்குரிய செயற்பாடாகும் என்ற நம்பிக்கை மேலோங்கியிருந்தது. அதற்கு ஏற்றவாறு வளப்பெருக்கை மேம்படுத்துவதற்குச் சடங்குகளும், மாயவித்தைகளும், ஆடல்களும் மேற்கொள்ளப்பட்டன.

பாம்பு வளப்பெருக்கின் குறியீடாக நாட்டார் மரபிலே காணப் பட்டது. அதனை அடியொற்றி மகுடியாடல், பாம்பு நடனம், பாம்பாட்டம் முதலாம் ஆடல்களுக்கு விளையாட்டுக்களும் தோற்றம் பெற்றன. கிரேக்க ஆடல் மரபில் பாம்பைக் கையில் ஏந்தியவாறு ஆடல் நிகழ்த்துதல் இடம்பெற்றது.

வளப்பெருக்கின் பிறிதொரு குறியீடாகக் கருதப்பட்டது நிறைகுடம். பாம்பை வளப்பெருக்கின் குறியீடாகக் கொள்ளல் குலக்குழுச் சமூகத்தில் இடம்பெற்றது. சில குலக்குழுக்கள் பாம்பைத் தமது குலக்குறியாகவும் கொண்டிருந்தன. வேளாண் சமூகத்தில் வளப் பெருக்கின் சிறப்புக் குறியீடாக அமைந்தது நிறைகுடம்.

நிறைகுடத்துடன் தொடர்புடைய ஆடலும் பாடலும் விளையாட்டுக்களும் நாட்டார் வழக்கில் சிறப்புற்றிருந்தன. கரக ஆட்டம் நிறை குடத்தோடு தொடர்புடைய ஆடலின் வளர்ச்சி வடிவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைகுட விளையாட்டிலும் ஆடலிலும் கையளிக்கப்பட்டு வளர்க்கப்பட்ட ஒருதிறன் "சமநிலைப்பாடு". தலையில் உள்ள நிறைகுடம் விழுந்துவிடாது விரைவு நடையிடும் விளையாட்டு "செங்கோடல்" எனப்பட்டது. அது வளர்ந்தோருக்குரிய ஒரு நாட்டார் விளையாட்டு சமநிலை பராமரித்தல் என்ற கல்விச் செயற்பாட்டை உறுகாட்சி *(Concrete)* நிலையிலே கற்றுக்கொள்வதற்குரிய விளையாட்டாக அது அமைந்தது.

நாட்டார் பண்பாட்டிலே சொல்சார்ந்த விளையாட்டுக்களும் *(Cerbal Games)* இடம்பெற்றிருந்தன. அனைத்து வயதினருக்குமுரிய சொல் விளையாட்டுக்கள் வளர்ச்சியுற்றிருந்தன.

நொடிகளும் ஒருவகைச் சொல் விளையாட்டாகவே கருதப்படும். மொழியாற்றலும் விரைந்து தொழிற்படலும் சொல் விளையாட்டுக்களில் இடம்பெற்றன. ஒலிகளை அடியொற்றியவை, சொற்களை அடியொற்றியவை, பல கருத்துக்களைத் தருபவை, கருத்துக்களை அடியொற்றிப் பழமொழிகளைக் கண்டறிபவை என்றவாறு சொல் விளையாட்டுக்கள் பலவகைப்பட்டவை.

சொல் விளையாட்டு "மழை விளையாட்டு" எனவும் அழைக்கப்பட்டது. மழைக்காலங்களில் சிறுவரும் பெரியவர்கள் வீடுகளுக்குள்ளே முடங்கியிருக்கும் வேளைகளில் இவ்வகை விளையாட்டுக்கள் மேற்கொள்ளப்பட்டன. சொல்லை, மழை என்று கூறும் மரபு நாட்டாரிடத்துக் காணப்பட்டது.

நாட்டாரின் சொல் விளையாட்டுக்கள் வரன்முறைக் கல்வியிலும், வரன்முறைச் செய்யுள் ஆக்கங்களிலும் செல்வாக்குகளை ஏற்படுத்தின. திரிவு, மடக்கு, சித்திரக்கவி முதலாம் செய்யுள் வடிவங்கள் நாட்டார் மொழி விளையாட்டுக்களில் இருந்து நீட்சி கொண்டவை.

நாட்டார் கல்விச் செயல்முறையோடு இணைந்த காட்சி வடிவங்களே அவர்களால் உருவாக்கப்பட்ட விளையாட்டுக்கள். விளையாட்டுக்களின் கலைச் செறிவும் கல்விச் செறிவும் வரன்முறையான கலையாக்கங்களிலும் இலக்கிய ஆக்கங்களிலும் ஊடுருவிப் பரந்த செயல் முனைப்பைக் கொண்டிருந்தன. விளையாட்டு என்பது கலையுமாயிற்று இலக்கியமுமாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சடங்குகள் வழியான அறிவுக் கையளிப்பு

அறிவுக் கையளிப்புக்குரிய தொன்மையான கற்பித்தல் வடிவங்களாகச் சடங்குகள் அமைந்திருந்தன. மனவெழுச்சியோடு இணைந்த கற்றலுக்கு (Emotional Learning) ஏற்றவாறு சடங்குகள் வடிவமைக்கப்பட்டிருந்தன. நனவிலி மனத்தின் ஈடுபாட்டுடன் கற்கும் கருத்தேற்றக் கற்பித்தல் ஒழுங்கமைப்பையும் சடங்குகள் கொண்டிருந்தன. சடங்குகள் வழியாக நிகழ்த்தப்படும் கற்பித்தல் முறை நவீன கற்பித்தலிற் பயன்படுத்தக்கூடிய உட்கூறுகளைக் கொண்டிருத்தல் குறிப்பிடத்தக்கது.

தொன்மையான பண்பாடுகளில் சடங்குகளை நிகழ்த்துகை செய்வோர் ஆசிரியர் என்ற பரிமானத்தையும் பெற்றிருந்தனர்.

வைதிக நெறிப்பட்ட சடங்குகள், நாட்டார் சடங்குகள் என்ற இருவகைப்பாடு தமிழ்ச் சூழலிலேஇடம்பெற்றது. இன்றும் இடம்பெற்று வருகின்றது. வைதிக நெறிப்பட்ட சடங்குகளை அந்தணர் மேற் கொண்டனர் (பரிபாடல் 1175-58) நாட்டார் சடங்குகள் ஆண்களாலும் பெண்களாலும் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. நாட்டார் சடங்குகளை மேற்கொண்டோர் கையில் வேலை அல்லது மாத்தடியை வைத்திருந்தனர். கைவேலுடன் சடங்கு நிகழ்த்தியோர் வேலர் எனப்பட்டனர். சடங்கு நிகழ்த்திய பெண்கள் வேலாச்சியர் எனப்பட்டனர். வைதிக மரபில் இறைசார்ந்த சடங்குகளை மேற்கொள்ளப் பெண்கள் அனுமதிக்கப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவளப் பெருக்கினை வேண்டும் சடங்குகளில் கருத்தரித்தல் தொடர்பான அறிவும், பிறப்பின் பின்னரான வளர்ப்பு முறை பற்றிய அறிவும் கற்பிக்கப்படும் ஏற்பாடுகள் இடம்பெற்றன.

கிராமிய வழக்கில் வேலாச்சியர் என அழைக்கப்பட்ட சடங்கு மேற்கொள்ளும் பெண்கள், இலக்கிய வழக்கில் "முனித்துறை முதல்வியர்" (பரிபாடல் - 81) என்று குறித்துரைக்கப்பட்டனர். "முனித்துறை முதல்வியர் முறைமைகாட்ட" என்ற தொடர் கற்பித்தல் நோக்கில் மறுவாசிப்புக்கு உரியது. "முறைமைகாட்ட" என்பது வளப்பெருக்கோடு இணைந்த அறிமுறையைக் கையளித்தல் என்று கொள்ளப்படலாம். முறைகாட்டல் என்பது கற்பித்தலாகின்றது.

சடங்குகளில் வழிபாட்டுடன் "அறிதலும்" இணைக்கப்பட்டிருந்தது. கருவளப் பெருக்க அறிவு பெண்களுடன் ஆண்களுக்குமுரியதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

"குன்றக் குறவன் கடவுட் பேணி
இரந்தனன் பெற்ற எல்வளைக்குறுமகள்"

என்ற அடிகள் ஐங்குறு நூற்றில் (257) இடம்பெற்றுள்ளன.

தமிழ்ச்சூழலில் நுண்பண்பாட்டு வேறுபாடுகளுக்கு ஏற்றவாறு சடங்கு செய்வோரின் பெயர்களும் வேறுபட்டுக் காணப்பட்டன. சடங்குகள் வழியாக அறிவைக் கட்டியெழுப்பும் பெண்கள் "கட்டுவிச்சிகள்" என நாட்டார் வழக்கில் அழைக்கப்பட்டனர். சடங்குகளின் போது தெய்வத்தை வரவழைத்து அறிவூட்டற் செயற்பாட்டை முன்னெடுத்தலும் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது.. கட்டுவிச்சியர் "அகவன் மகள்" எனவும் அழைக்கப்பட்டனர்.

"அகவன் மகளே பாடுக பாட்டு" என்ற தொடர் குறுந்தொகையில் (231) இடம்பெற்றுள்ளது. பாடல் வழியாக அறிவுக் கையளிப்பு நிகழ்ந்த செய்தி அதனாற் கிடைக்கப் பெறுகின்றது.

சடங்குகள் சமூக அடுக்கமைவுடன் தொடர்புபட்டிருந்தன. மேலோர் சடங்குகள் தாழ்நிலையில் உள்ளோர் சடங்குகள் என்ற பாகுபாட்டில் மேலோர் சடங்குகளில் ஆன்மிக அறிவுக் கையளிப்பு ஒப்பீட்டளவில் மேலோங்கியிருந்தது. தாழ்நிலையில் உள்ளோர் சடங்குகளில் உலகியல் அனுபவக்கல்வி மேலோங்கியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்தோர்க்கு நீராடித் தானம் செய்யும் சடங்கும், ஏனையோருக்கு வரைவு இன்றிச் சோறு வழங்குதலும் குறிந்தொகைப் பாடலிலே குறிப்பிடப்பட்டுள்ளது (233)

"............. உயர்ந்தோர்க்கு

நீரொடு சொரிந்த மிச்சில், யாவர்க்கும்

வரைகோள் அறியாச் சென்றி"

பிறப்பு முதல் வாழ்க்கை நீட்சி வரையிலான உயிரியல் சார்ந்த வளர்ச்சி என்பது தனித்து உயிரியற் கட்டுமானத்துக்குள் மட்டும் உள்ளடங்கியதன்று. சமூக இருப்பும் பண்பாட்டுத் தளமும் மனித வளர்ச்சியில் இடையறாது பங்கு கொள்கின்றன. வளர்ச்சியோடு இணைந்த சமூக இசைவாக்கற் கல்வியை வழங்குவதிலே சடங்குகளின் வகிபாகம் முக்கியமானது.

தமிழரது வாழ்க்கை நீட்சி சடங்குகளாக பிறப்பு, தொட்டில் அல்லது ஏனையில் வளர்த்தல், தீட்டுக்கழித்தல் (பொதுவாக 31 ஆம் நாள்) பெயரிடுதல், காது குத்துதல், பற்கள் முளைத்தல், ஏடு தொடக்குதல், பருவமடைதல், திருமணம், வளைகாப்பு, நோய்விரட்டல், நாவூறு கழித்தல், பிணியோட்டல் என்றவாறு வாழ்க்கையின் நிறைவுவரை சடங்குகள் தொடர்ந்து செல்லும்.

இவற்றோடு தொழில்முறை சார்ந்த சடங்குகளும் உள்ளன. தொழிலை ஆரம்பிக்கும் சடங்கு, ஏர்ப்பூட்டு, பயிர் வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் நிகழ்த்தப்படும் சடங்கு, அறுவடைச் சடங்கு வளப்பெருக்க வேண்டற் சடங்கு, காவற் சடங்கு என்றவாறு தொழில்முறைச் சடங்குகள் பெருக்கமுற்றிருந்தன. தொழில் தொடர்பான அறிவுக் கையளிப்பும் மூத்தோர் அனுபவங்களின் கையளிப்பும் அவ்வகைச் சடங்குகளிலே இடம்பெற்றன.

தொழில்முறை சார்ந்த சடங்குகள் போன்று அழகுக்கலைகள் சார்ந்த சடங்குகளும் இடம்பெற்றன. கலையைத் தொடக்கி வைக்கும் சடங்கு கருவிகளோடு தொடர்புடைய சடங்குகள், அரங்கேற்றம் செய்யும் சடங்கு, ஆற்றுகைச் சடங்கு, வெள்ளோட்டச் சடங்கு, வீடுகட்டலோடு இணைந்த சடங்குகள் என்றவாறு தமிழர் பண்பாடு, வாழ்க்கை முழுவதும் சடங்குகளோடு இணைந்ததாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடங்கின் வினைப்படும் (Action) தன்மையானது செயலோடு இணைந்த அறிவுக் கையளிப்பாகும். கருத்தை மனத்தில் ஆழப்பதிய வைக்கும் உளவியற் செயற்பாட்டோடு இணைந்த சடங்குகள் உளச் சுகம் விளைவிக்கும் சீர்மியப் பண்புகளையும் கொண்டுள்ளன.

தமிழரின் சடங்குகள் தொன்மங்களோடு இணைந்தவை. தொன்மங்கள் முன்னோரின் சிந்தனைகளையும் நம்பிக்கைகளையும் சார்ந்த வடிவங்கள். சடங்குகள் தொன்மங்களை வெளிப்படுத்து கின்றனவா அல்லது தொன்மங்கள் சடங்குகளை வெளிப்படுத்து கின்றனவா என்ற விவாதமும் மானிடவியலாளர் மத்தியில் நிலவுகின்றது. எது எவ்வாறாயினும் சடங்குகள் மேற்கொள்ளும் அறிவுக் கையளிப்பே கல்வியியல் நோக்கில் முக்கியமானது.

சடங்கின் வடிவமானது, சிந்தனையைக் காட்சி வடிவப்படுத்தும் செயற்பாடாகின்றது. காட்சி வடிவத்தை வளம்படுத்த ஆடலும் பாடலும் சிறப்புப் பொருட்களும் ஒன்றிணைக்கப்படுகின்றன.

சடங்குகளின் பிறிதொரு முக்கியமான செயற்பாடு குறியீடுகள் வாயிலாக அறிவுக் கையளிப்பை மேற்கொள்ளல். குறியீடுகள் அழகியற் பெறுமானங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக நிறைவையும் பூரணத்துவத்தையும் காட்டும் குறியீடாக "நிறைகுடம்" வைக்கப்படுகின்றது. தன்னியல் நிறைவின் குறியீடாகத் தலைப்பாகை அணிவிக்கப்படுகின்றது.

மனிதரின் செயற்பாடுகள் ஊக்கலை அடிப்படையாகக் கொண்டவை. ஊக்கலை வருவித்தலும், ஊக்கலை முன்னெடுத்தலும், சடங்குகளின் சிறப்புப் பரிமாணங்களாகின்றன. "ஒன்றைச் செய்து இன்னொன்றைப் பெறுதல்" என்ற சடங்கின் செயற்பாடு ஊக்கலைத் தூண்டிவிடும் வடிவமைப்பாகவுள்ளது.

தமிழ்ச் சமூகத்தில் நிகழ்ந்த தனிச் சொத்துரிமையின் வளர்ச்சியோடு பிறருக்குத் தீங்கு விளைவிக்கும் சடங்குகள் உருவாக்கம் பெற்றன. தனிச்சொத்துரிமையின் வழி எழும் உளக்கோலமாகப் பொறாமை எழுகின்றது. அதன் வழியாக பிறர் சொத்துக்களுக்கும் பொருட்களுக்கும், உயிர்களுக்கும் ஆபத்தும் அழிவும் விளைவிக்கும் சடங்குகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கம் பெற்றன. அவ்வகைச் சடங்குகளில் எதிர்நிலையான அறிவுருவாக்கம் கையளிக்கப்படுகின்றது.

தமிழரின் சடங்குகள் சமூக உறவுகளுடனும், சமூகப் பங்குபற்றலுடனும் பெருமளவிலே தொடர்புகள் கொண்டுள்ளன. சமூக அடுக்கமைவுக்கும் சடங்கின் பங்குபற்றலுக்கும் மொழிக்கும் தொடர்புகள் உள்ளன. மேலோர் சடங்குகளில் வடமொழி இடம்பெறுகின்றது. அடிநிலை மக்களின் சடங்குகளிலே பேச்சுத் தமிழ் முக்கியத்துவம் பெறுகின்றது. அடிநிலை மக்களின் சடங்குகளில் உறவாடுதல் ஒரு முக்கியமான செயற்பாடாகவுள்ளது. ஆழ்மனத்தில் அமுங்கிய உணர்வுகளை வெளிப்பாய்ச்சல் கொள்ளும் கல்விச் செயல் முறையாக உருவந்து ஆடல் நிகழ்த்தப்படுகின்றது.

சடங்குகள் வழியாக நிகழ்த்தப்படும் கற்பித்தலானது, தொடர்பு களைக் கண்டறிதல் தொடர்பான புனைவுகளுடன் இணைந்தது. உதாரணமாக வளப்பெருக்கச் சடங்குகளில் நீர்வளம், நிலவளம், பயிர்வளம், கால்நடைவளம், மனிதவளம் ஆகியவற்றுக்கிடையேயுள்ள தொடர்புகளும் புனைவுகளும் ஒன்றிணைக்கப்படுகின்றன. உடல் மொழியாலும், இசையாலும், உரையாலும், பொருட்குறியீடுகளாலும் தொடர்புகளும் புனைவுகளும் ஒன்றிணைக்கப்படுகின்றன. அவற்றின் வழியாக வளப்பெருக்கச் சிந்தனைகள் கூர்மையாக்கப்படுகின்றன. வளங்களை மாசுபடுத்தலும், அழித்தலும் வளங்களுக்குக் கேடு விளைவித்தலும் தவிர்க்கப்படுகின்றன. இன்னொருவிதமாகக் குறிப்பிடுவதானால், சூழலியல் அறிவைக் கையளிப்பதில் தமிழர்களின் வளச்சடங்குகள் முக்கியமான வகிபாகத்தை ஏற்றுள்ளன. மரவழிபாடு, பசுவழிபாடு, பட்டிப்பொங்கல், நீர்வழிபாடு முதலியவை வளப்பெருக்குடன் இணைந்த தொல் வடிவக் குறியீடுகளாகவும் *(Archetypal Symbols)* சூழலியற் பாதுகாப்புடன் இணைந்த பிரயோக அறிவாகவும் அமைந்துள்ளன.

சூழலுக்குத் தெய்வீக ஏற்றம் கொடுத்தல் சடங்குகளின் பிறிதொரு பரிமாணம். அஃறிணைப் பொருள்களுக்கு மட்டுமன்றி மனிதர்களுக்கும் தெய்வீக ஏற்றம் நிகழ்த்தப்படுகின்றது. மணவறையில் இருக்கும் மணமகளையும், மணமகனையும் தெய்வீக வடிவினராகக் கொண்டே மணச்சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகளைச் சுட்டிக்காட்டும் ஒழுக்கக்கல்விச் செயற்பாடும் தமிழர் சடங்குகளிலே முன்னெடுக்கப்படுகின்றது. மழை பெய்யாது வானம் பொய்த்தால் தனிமனிதரோ சமூகமோ இழைத்த குற்றங்களே காரணங்கள் என்று சடங்கு வழியாக எடுத்துரைக்கப்படுகின்றது. கொடும்பாவிச் சடங்கு அதனையே எடுத்துரைக்கின்றது. குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக மக்கள் ஒன்று திரள்தல் என்ற சமூகச் செயற்பாடு அதன் வழியாக முன்னெடுக்கப்படுகின்றது. அந்தச் சடங்கு அரசியல் அநீதி, சமூக அநீதி செய்தவர்களுக்கு எதிராகவும் தமிழ்ச் சமூகத்திலே முன்னெடுக்கப்படும் தோற்றப்பாடும் வளர்ச்சி கொண்டுள்ளது. பொறுப்புணர்ச்சியும் சமூக அக்கறையும் கொண்ட வாழ்வுக்கான கல்வியை வழங்குதல் தமிழர் சடங்குகளின் உள்ளமைவுகளாகவுள்ளன.

சடங்குகளிலே பொதிந்துள்ள அறிவுக்கையளிப்பு வலிமை, அழகியல் வலிமை ஆகியவை, ஆசிரியரின் கவனத்தை மட்டுமன்றி அரங்கியலாளரின் கவனத்தையும் ஈர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சாதனமாகும் மாயவித்தை

மாய வித்தை *(Magic)* அல்லது மந்திரம் என்பது ஒருவகைப் பிரயோக அறிவுச் சாதனமாகவே நாட்டார் மரபில் இருந்து வந்துள்ளது.

கற்பனை ஒன்றை ஏற்படுத்துவதன் வாயிலாக நடப்பியலில் அதனை ஏற்படுத்தலாம் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டதே மாயவித்தை என்றும் அது கற்பனையான ஒரு தொழில்நுட்பம் என்றும் தோம்சன் (1980:11) குறிப்பிட்டுள்ளார்.

இயற்கையைக் கட்டுப்படுத்துவதற்கும், இயற்கையில் இருந்து கூடிய பயன்களைப் பெற்றுக்கொள்வதற்குமுரிய தொழில்நுட்பம் வளர்ச்சியடையாத நிலையில் பாவனை செய்வதன் வாயிலாக அல்லது போலச் செய்தல் வாயிலாக உருவாக்கம் பெற்ற வடிவமாக மாயவித்தை அமைந்தது.

மாயவித்தைகளினதும் அவற்றை ஒட்டிய சடங்குகளினதும் செல்வாக்குகள் வரன்முறையான வைதிக சமயச் செயற்பாடுகளிலும் நீட்சி கொண்டமை அவற்றின் முக்கியத்துவத்தை மீள வலியுறுத்துகின்றது.

தொன்மையான மனிதரின் பொருண்மியச் செயற்பாடுகளிலும் வாழ்க்கைச் செயற்பாடுகளிலும் மாயவித்தைகள் கலந்திருந்தன.

வேட்டுவ வாழ்க்கையில் விலங்குகள் கிடைக்க, ஆயர் வாழ்க்கையில் கால்நடை வளம் பெருக, வேளாண் வாழ்க்கையில் பயிர்வளம் பெருக, நெய்தல் வாழ்க்கையில் மீன்வளம் பெருக என்றவாறான முன்னெடுப்புக்களில் மாயவித்தைகள் பயன்படுத்தப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டார் வாழ்க்கையிலும், வழிபாட்டிலும் கல்விக்கையளிப்பிலும் மாயவித்தைகள் பயன்மிக்க கூறுகளாக அமைந்தன.

மாயவித்தை என்பது இலக்கு அல்லது விருப்பம், செயற்பாடுகள் மற்றும் இயம்பல் *(Spells)* ஆகிய முப்பெரும் உட்பிரிவுகளைக் கொண்டிருக்கும். இலக்கை அல்லது விருப்பத்தைப் பாவனையாச் செய்து காட்டல் இடம்பெறும். மந்திர இயம்பல்கள் அல்லது சொற்களால் வேண்டுதல் வடிவிலோ அல்லது கட்டளையிடுதல் வடிவிலோ மாயவித்தை அமையலாம். பாடலாகவோ உரை நடைகளாகவோ கட்டமைப்புச் செய்தலும் இடம்பெறும். அவற்றில் கூர்ம்மையான மொழிப்பிரயோகம் நிகழ்த்தப்பெறும். நாட்டார் கல்வியின் மொழிக் கூர்ம்மைப்பாடு அவற்றில் அமைந்திருக்கும். அந்த மரபை அடியொற்றியே பாரதி "மந்திரம் போல் வேண்டும் சொல்லின்பம்" என்று குறிப்பிட்டார்.

நாட்டார் மரபில் மாயவித்தைகள் இரண்டு வகைப்பாடுகளைக் கொண்டிருக்கும். ஒன்று ஒத்த பண்பு விதியை அடிப்படையாகக் கொண்ட "ஒத்த மாய வித்தை", மற்றையது தொடர்பு விதியை அடிப்படையாகக் கொண்ட "தொத்து நிலை மாயவித்தை"

எதிர்பார்க்கப்படும் விளைவும் அதனை அடைவதற்கு மேற்கொள்ளப்படும் செயலும் "ஒத்தது ஒத்ததை உருவாக்கும்" என்ற மாயவித்தையாகின்றது. நெற்கதிரை வீட்டிலே கொண்டு வந்துவைத்தால் வீட்டிலே தானிய வளம் பெருகும் என்ற மாயவித்தைச் செயற்பாடு வேளாண் மரபில் இன்றும் காணப்படுகின்றது. ஒத்தது ஒத்ததை உருவாக்கும் நம்பிக்கைக்கு அது ஓர் எடுத்துக்காட்டு.

பாலைப் பொங்கச் செய்தல் வாயிலாகப் பால்வளம் பெருகும் என்பதும் ஒத்தது ஒத்ததை உருவாக்கும் என்ற மாயவித்தை நோக்கினை அடிப்படையாகக் கொண்டது.

மணவறையிலே மணமக்களின் மடியில் ஓர் ஆண்குழந்தையை இருத்தினால் அவர்களுக்கு ஆண் மகப்பேறு உண்டாகும் என்பது ஒத்தது ஒத்ததை உருவாக்கும் என்ற மாயவித்தைச் செயற்பாட்டின் பாற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொன்மையான தொழில்நுட்பக் கல்வி அனுபவங்களில் இருந்தே ஒத்தது ஒத்ததை உருவாக்கும் என்ற நம்பிக்கையும் செயற்பாடும் மேற்கிளம்பின. எடுத்துக்காட்டாக ஒரு மட்குடத்தைச் செய்யும் பொழுது முன்னைய குடத்தை மனத்தில் பதித்தவாறே புதிய குடம் உருவாக்கப்பட்டது.

தொத்து மாயவித்தையும் மக்களின் வாழ்க்கை அனுபவங்களில் இருந்தே எழுகோலம் பெற்றது. எடுத்துக்காட்டாக ஒரு பசுவுக்கு வந்தநோய் அதனுடன் பழகும் மற்றைய பசுவுக்கும் வருதல் கண்டறியப்பட்டது. அவ்வாறான அனுபவங்களை அடியொற்றியே தொத்து மாயவித்தை உருவாக்கம் பெற்றது.

இரும்பு உறுதிமிக்க ஓர் உலோகம், குழந்தை படுத்துறங்கும் பாய்க்குப் பக்கத்தில் கத்தியை அல்லது இரும்புத் துண்டை வைக்கும் மரபு, பழைய யாழ்ப்பாணத்துக் கிராமங்களிலே காணப்பட்டது. அதனால் உறுதியான உடலோடும் உள்ளத்தோடு குழந்தை வளரும் என்ற நம்பிக்கை நிலவியது. அது தொற்றுநிலை அறிகை.

வீட்டில் நல்ல கருமங்கள் நிகழும் பொழுது நல்ல வார்த்தைகளைப் பேசி வாழ்த்துவதால், நன்மை வாழ்த்தப்படுபவரிடத்துத் தொற்றிக் கொள்ளும் என்று நம்பப்பட்டது. அவற்றை அடியொற்றிய மாயவித்தைச் சொற்றொடர்கள் உருவாக்கம் பெற்றன. அதன் நீட்சியாகவே மங்கல இசையும் வாசிக்கப்பட்டது. இசையின் மங்கலமானது இருப்போர் மீது தொற்றிக்கொள்ளும் என்ற நம்பிக்கை நீட்சிகொண்டது. கெட்டியாக (உறுதியாக) பற்றிக் கொள்ளல் என்பதன் அடிப்படையாகவே, திருமண நிகழ்ச்சியின் உச்சக்கட்டத்தில் வாசித்தல் "கெட்டிமேளம்" எனப்பட்டது.

சமூகத்தில் ஏற்பட்ட தனிச் சொத்துரிமை என்ற பொருண்மிய நடவடிக்கையின் வளர்ச்சியோடு பொறாமை என்ற மனவெழுச்சிச் செயற்பாடு மேலோங்கலாயிற்று. அதனை அடியொற்றி, சமூகத்திலே தீய மாயவித்தைகள் வளர்ச்சியடையத் தொடங்கின.

தீய மாயவித்தைகள் வளர்ச்சியடைந்தமைக்குச் சமாந்தரமாக காப்பு அல்லது பாதுகாப்பு மாயவித்தைகளும் வளர்ச்சியடையத் தொடங்கியது. பூசினிக்காய் விரைந்து கெட்டுவிடாத தொன்று. அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீடித்துப் பாதுகாப்புத் தரும் என்ற நம்பிக்கையில் வீட்டின் முன்கட்டித் தொங்க விடப்படுகின்றது. மாயவித்தைச் செயற்பாடுகளில் அதிகம் உபயோகிக்கப்படும் ஒரு பொருளாக பூசினிக்காய் விளங்குகின்றது.

தமிழர் நாட்டார் மரபில் தீமையைச் சிதறடிப்பதற்கு உதவும் பொருள்களாக தேங்காய், பூசினிக்காய், எலுமிச்சை முதலியவை பயன்படுத்தப்படுகின்றன. அவற்றை வெட்டிச் சிதைக்கும் பொழுது தீமைகள்அகன்று விடும் என்ற நம்பிக்கை நிலவியது.

அப்பொருள்கள் பற்றிய தனித்துவமான குணவியல்புகளின் உற்று நோக்கலும், அவற்றின் வழியாகத் தோற்றம் பெற்ற பட்டறிவும் மாயவித்தைச் செயற்பாடுகளுக்குப் பின்புலமாக அமைந்தன.

ஒவ்வொரு சமூக அமைப்பிலும் அந்த சமூக அமைப்புக்கு இயைபான மாயவித்தைகள் உருவாக்கப்பட்டிருந்தன. வேட்டையாடற் சமூகத்தின் இயல்பை விளக்கும் தொன்மையான குகை ஓவியங்கள் இன்றும் காணப்படுகின்றன. விலங்குகள் மீது ஈட்டி பாய்ச்சப்பட்டது போன்ற ஓவியங்கள் அவற்றிலே காணப்படுகின்றன. அம்பு அல்லது ஈட்டி துளைத்த விலங்குகளின் ஓவியங்களை வரைவதால், விலங்குகளை இலகுவிலே வீழ்த்திவிடலாம் என்ற நம்பிக்கையின் வெளிப்பாடாக அதனைக் கொள்ளலாம்.

அத்தகைய கருத்தின் நீட்சி சமகாலத்தைய மாயவித்தைகளிலும் காணப்படுகின்றது. ஒருவரை வசியப்படுத்துவது என்றாலோ, துன்பப்படுத்துவது என்றாலோ அவரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு பொருளை வைத்து மாயவித்தை செய்யப்படுதல் உண்டு.

ஆடலையும் பாடலையும் மாயவித்தைச் செயல்களாக்கும் செயற்பாடுகளாக்கும் நடவடிக்கைகளும் இடம்பெற்று வந்துள்ளன. மழை வேண்டிச் செய்யப்படும் மாயவித்தையில் கொடும்பாவிப்பாடல் இன்றும் நிகழ்த்தப்படுதல் குறிப்பிடத்தக்கது.

மலையாள நாட்டின் காட்டுப் பகுதிகளிலே வாழும் "குறிச்சியர்" என்னும் மக்களிடத்து வசியமாயவித்தை தொடர்பான ஆடலும் பாடலும் காணப்படுவதாக பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன் (1987) குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளமும் செழிப்பும் தொடர்பான நாட்டார் அறிகை முறைமை மாயவித்தைச் சடங்குகள் வாயிலாக வெளிப்பாடு கொண்டது. பெண்ணை விளைநிலமாகக் கொள்ளல் வேளாண் சமூகத்திலே காணப்பட்டது. பிள்ளைகள் பெற்ற பெண் விதைப்புச் செயற்பாட்டைத் தொடக்கி வைத்தல் இன்றும் நிகழ்த்தப்படும் ஒரு நம்பிக்கை.

தாவரச் செழிப்பும் மானிடச் செழிப்பும் ஒன்றை ஒன்று சார்ந்திருப்பதான அறிகையும் நாட்டார் மரபிலே காணப்பட்டது. நிலம்விளைச்சலைத் தருதல் போல் பெண் விலங்குகளும் பட்டிப் பெருக்கத்தைத் தருதலை ஒத்திசைவு விதியாகக் கொண்டனர். பெண்களால் இனப்பெருக்கம் நிகழ்த்தப்படுகின்றது என்ற அறிகை முறைமையை அடியொற்றிப் பெண் தெய்வ வழிபாடுகளும் வளர்ச்சியடையத் தொடங்கின. வழிபாடுகளில் வைக்கப்படும் கும்பம் அல்லது நிறைகுடம் பெண்ணைக் குறியீட்டுப்படுத்துவதாகச் சொல்லப்படுகின்றது.

அகத்தியர் கும்பத்திலிருந்து பிறந்தமையால் "கும்ப முனி" என்று அழைக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

தாவரச் செழிப்பும் மானிடச் செழிப்பும் கும்பத்திலே குறியீடாக அமைக்கப்பட்டுள்ளதாக பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன் (1987) குறிப்பிட்டுள்ளார். கும்பத்தின் மேலமைந் தேங்காய், மாவிலை, பூ முதலியவை தாவரச் செழிப்பையும் அவற்றைத் தொடர்ந்த கீழ் உள்ள குடப்பகுதி மானிடச் செழிப்பையும் குறித்து நிற்பதாகச் சொல்லப்படுகிறது.

நவீன கல்வியியல் நோக்கில் மாயவித்தை என்பது அறியாமையினால் மேற்கொள்ளப்படுகின்றது என்று குறிப்பிடப்பட்டாலும் அவற்றில் உள்ளடக்கியுள்ள அறிகை முறைகளும் பிரயோக உளவியற் செயற்பாடுகளும் முக்கியமானவை.

மாயவித்தைகள் உழைப்பில் நேரடியாக ஈடுபடுபவர்களுக்கு மனத் திடத்தையும் உற்சாகத்தையும் வழங்குகின்றன. மீண்டும் செயற் பாடுகளை முன்னெடுக்கும் மிடுக்கைக் கொடுக்கின்றன. அளவெட்டிக் கிராமத்தின் மாயவித்தைச் செயற்பாடுகளின் பின்புலத்திலேதான் மகாகவி மீண்டும் தொடங்கும் மிடுக்கைப் பாடினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேட்டுவ வாழ்க்கை, ஆயர் வாழ்க்கை, வேளாண் வாழ்க்கை ஆகிய சமூகங்களில் நீடித்துவந்த மாயவித்தைச் செயற்பாடுகளும் சடங்குகளும் கைத்தொழிற் சமூகத்தில் மறைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது ஆனால் அது நிகழவில்லை.

சமகாலச் சமூகம் முன்னைய மாயவித்தைகளையும் சடங்குகளையும் தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டு வருகின்றது. புதியவற்றை உருவாக்கிக் கொண்டும் வருகின்றது.

நாட்டார் செயற்பாடுகளைப் புறந்தள்ளிவிடும் மேனிலைச் சமூகம் மாயவித்தை மற்றும் சடங்குகளை தொடர்ந்து கடைப்பிடித்து வருதல் முரணுரையாகவுள்ளது. சமூக மாற்றம் நிகழ்ந்தாலும் முன்னைய எச்சங்கள் தொடர்வதும் மீளுருப் பெறுதலும் நிகழ்ந்தவண்ணமுள்ளன.

மாயவித்தை நுட்பங்களை நவீன கற்பித்தலிலே பயன்படுத்தும் முறைமை பிறிதொரு புறம் வளர்ச்சியடைந்து வருதல் குறிப்பிடத்தக்கது.

Class No 15 43
Acc No
Arasady Public Library
Municipal Council
Batticaloa



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No:
Acc No 1573
Arasady Public Library
Municipal Council
Batticaloa.

## நோக்கிய நூல்கள்

*தாம்சன். ஜார்ஜ் (1981) மனித சமூக சாரம், சென்னை, சென்னை புக்ஹவுஸ்*

*வானமாமலை, நா. (1973) கலைகளின் தோற்றம் தமிழர் பண்பாடும் தத்துவமும். சென்னை, நியூ செஞ்சுரி புக்கவுஸ்,*

*லூர்து, தே (1976) நாட்டார் வழக்காற்றியல் ஓர் அறிமுகம், திருநெல்வேலி.*

*Leach, Maria (Ed) (1969) Standard Dictionary, of Folk lore, New York: Funk and Wagnalls Company*

*Santhi, F.(1980) The Study of folk lore, Post Doctoral Thesis, Annamalai University.*

மேற்கூறியவற்றுடன்

நாட்டார் பாடல்கள்

நாட்டுக் கூத்துக்கள்

விடுகதைகள்

பழமொழிகள்

முதலாம் தொகுப்பு நூல்களும் நோக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1573

Class No:
Acc No 1573

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர் முனைவர் சபா.ஜெயராசா தமிழில் "கல்வியியல்" துறைசார்ந்த நூல்கள் பல எழுதி, அத்துறைசார் விருத்தியில் முதன்மையான பங்கு வகித்து வருபவர். கலை, இலக்கியம், உளவியல், தத்துவம் எனப் பல்வேறு துறைசார் புலங்களுடன் ஊடாடி வருபவர். இவற்றின் செழுமை மற்றும் அறிவு, ஆய்வு யாவும் இவரது "புலமைமரபு" எத்தகையது என்பதைத் தனித்துக் துல்லியமாக வெளிப்படுத்தும். மேலும், கலை தத்துவம் பற்றிய தொடர் விசாரணை, இவரை புதிய அறிவுருவாக்கப் பணியில் முழுமையாக ஈடுபட வைப்பதுடன், கல்வியின் பொருள்கோடல் சார்ந்து புதிய புதிய அர்த்தப்பாடுகளை நோக்கிக் கவனம் குவிக்கவும் செய்கிறது. தொடர்ந்து புதிய ஆய்வுக் களங்கள் நோக்கியும் கவனம் கொள்ளத் தூண்டுகிறது.

இன்றுவரை கல்வி உலகில்
முனைவர் சபா. ஜெயராசா
உயிர்ப்புமிகு புலமையாளராகவே
திகழ்கின்றார்.

சேமமடு பதிப்பகம்
விலை: 360.00

PBD
407013606
KAATARIYAT KALVI
180321
Rs. 360.00

CBCN : 2017-06-01-151

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org